

"எம்.ஜி.ஆருக்கு அடுத்தபடி நான்தான்!"
— எஸ்.எஸ்.ஆர்.

கல்கி

KALKI
29.12.96
ரூ. 3.00



"ஆண்டவர் நம்மோடு பேசுகிறார்..."

அ.இ.அ.தி.மு.க என்பது ஏற்கெனவே, ஆர்.எம்.வீ, பண்ருட்டி, எஸ்.டி.எஸ், ராஜாராம் தலைமைகளில் தனித்தனியாகப் பிரிந்திருக்க, 'அ.தி.மு.க.' என்ற பெயரிலேயே 'தடாலடியாக' ஒரு தனிக்கட்சி துவங்கியிருக்கிறார் நடிகர் எஸ்.எஸ்.ஆர். இப்படியொரு தனிக்கட்சி ஆரம்பித்து அவர் சாதிக்கப் போவது என்ன? எல்டாம்ஸ் சாலையில் உள்ள அவரது வீட்டில் சந்தித்துக் கேட்ட போது, "மனசுல பட்டதைப் பேசிடுவேன் சார்! பார்த்துப் போட்டுக்கங்க!" என்ற முன்னுரையோடு நம்மிடம் பேச ஆரம்பித்தார் எஸ்.எஸ்.ஆர்....

எம்.ஜி.ஆருக்கு அடுத்து நான்தான்!

"எம்.ஜி.ஆரைத் தவிர்த்துப் பார்த்தால், சிவாஜி, பாக்யராஜ், ராஜேந்தர் போன்ற எந்த நடிகரும் தனிக்கட்சி துவங்கி வெற்றிகரமாக நடத்த முடிந்ததில்லை. இந்த நிலையில் நீங்கள் எந்த அடிப்படையில் தைரியமாக தனி கட்சி துவங்கியிருக்கிறீர்கள்?"

"முதல்ல ஒரு விஷயத்தை கிளியர் பண்ணிடறேன். தனி இயக்கத்தை நானாகத் துவங்கவில்லை. பொதுத்தேர்தலில் ஜெயலலிதா தலைமையில் இருந்த அ.தி.மு.க. மரண அடி வாங்கிய பிறகு தொடர்ந்து என்னைச் சந்தித்து வந்த கழக உடன்பிறப்புகள் 'நீங்கள் மௌனமாக இருந்தால் எப்படி? இந்த நிலையில் நீங்கள்தான் வழி



சகோதரத் தமிழருக்கு உதவுங்கள்!

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட மழைவெள்ளத்தால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மனிதர்கள் மாத்திரமல்ல; ஏராளமான பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கி வீணாகிவிட்டன. அவர்களுக்கெல்லாம் நாம் உதவிக்கரம் நீட்ட வேண்டாமா? அவரவரும் தங்களால் முடிந்ததை முதல்வரின் நிவாரண நிதிக்கு அனுப்பி வையுங்கள். 'முதல்வர்-நிவாரண நிதி, தலைமைச் செயலகம், சென்னை - 600 009' என்கிற முகவரிக்கு காசோலையாகவோ, மணியார்டராகவோ அனுப்புங்கள்; சகோதரத் தமிழருக்கு உதவிய திருப்தியைப் பெறுங்கள்.

—ஆசிரியர்.

நின்று இயக்கத்தை நடத்த வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர். அந்த அடிப்படையில்தான்-நண்பர்களின் வற்புறுத்தலில்தான் புதிய அ.தி.மு.க. இயக்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறேன்.

"அடுத்தபடியாக தனிக்கட்சி துவங்கிய மற்ற நடிகர்களைப் பற்றிச் சொன்னீர்கள். அவர்களைப் பற்றி நான் தனிப்பட்ட முறையில் ஏதும் சொல்லக் கூடாது. ஆனாலும், இந்த எஸ்.எஸ்.ஆருக்கு உள்ள வரலாறு மற்றவர்களுக்கு உண்டா? சிறு வயதில் நாடக நடிகனாக இருந்தபோதே பெரியார் தொண்டன் நான். 'என்னுடைய சுட்டு விரலைப் பிடித்துக் கொண்டு அரசியலுக்கு வந்தவன் எஸ்.எஸ்.ஆர்!' என்று அண்ணாவே சொல்லியிருக்கிறார். 'நடிகனா, அரசியல்வாதியா?' என்கிற கேள்வி எழுப்பப்படுமானால் 'அரசியல்வாதிதான்' என்று தயங்காமல் சொல்பவன் நான். உலக வரலாற்றில் எம்.எல்.ஏ.வான முதல் நடிகன் நான்தான். ராஜ்யசபை உறுப்பினராகவும் இருந்தவன். 1980-ல் எம்.ஜி.ஆர் அமைச்சர் பொறுப்புக் கொடுத்தும் அதற்கு ஆசைப்படாதவன். அதுவரை என் அரசியல் வரலாற்றில் ஐந்து முறை சிறைக்குச் சென்றுள்ளேன். இதைவிட தனிக்கட்சிக்குத் தலைமை தாங்க என்ன பாரம்பரியம் வேண்டும்? என்னைப் போன்ற வரலாறு இல்லாதவர்கள் கட்சி துவங்கினால் எப்படி போணியாகும்? கண்டவனெல்லாம் கட்சி துவங்க முடியாது. எம்.ஜி.ஆருக்கு அடுத்தபடி இந்த எஸ்.எஸ். ஆர்தான்!"

"ஜெ.வைத் தவிர்த்து எஞ்சி உள்ள அ.தி.மு.க.வினரை இணைக்கும் முயற்சியில் ஆர்.எம்.வீ. உட்பட பலர் இறங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுடன் இணைந்து இயக்கத்தைப் பலப்படுத்தியிருக்கலாமே?"

"என்னுடைய வரலாறு, தியாகம், சீனியாரிடி காரணமாக மற்றவர்கள்தான் என்னுடன் வந்து இணைந்து செயல்பட வேண்டும். இந்த நிலையில் என்னை யாருடன் சேரச் சொல்கிறீர்கள்? ஜெயலலிதாவுக்கு ஆலவட்டம் வீசி அடிபணிந்து, அனைத்து வசதிகளையும் கடைசி வரை அனுபவித்தார்களே, அவர்களுடன் இணைந்து நான் பணிபுரிய வேண்டுமா? மேலும், நீங்கள் சொல்லும் தலைவர்கள் என்னுடன் ஒரே மேடையில் பேசட்டும். நான் பேசியதற்குப் பின்னர் பேசும் எந்தத் தலைவருக்காகக் கூட்டம் கலையாமல் நிற்கிறதோ அவர் தலைமையை ஏற்றுக் கொள்கிறேன். இன்னொன்று, நான் எந்தத் தலைவருடன் சென்றாலும், தொண்டர்கள் முதலில் 'எஸ்.எஸ்.ஆர். வாழ்க' என்றுதான் குரல் எழுப்புவார்கள். இதை பலரால் தாங்க முடியாது!"

"தனி இயக்கம் நடத்துவதற்குப் பணம் நிறைய வேண்டுமே!"


"பணம் இருப்பவன்தான் கட்சி நடத்த முடியுமென்றால், இந்த நாட்டை டாட்டாவும் பிர்லாவும்தான் ஆண்டு கொண்டிருப்பார்கள். அண்ணா பணத்தை வைத்துக் கொண்டா கட்சி துவங்கினார்? கட்சி துவங்கி நடத்த ஒரு வரலாறு இருக்க வேண்டும்; பாரம்பரியம் வேண்டும்; தியாகம் செய்திருக்க வேண்டும்! இவையில்லாமல் கட்சி துவங்கினால்தான் அதோகதி. எனக்குப் பணம் தானாக வந்து சேரும். தி.மு.க. உருவான போது 202, தங்கசாலைத் தெருவில்தான் அலுவலகம் துவக்கப்பட்டது. அட்வான்ஸ் கொடுக்க பணம் போதாத நிலையில் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை அடகுவைத்துப் பணம் கொடுத்தவன் இந்த எஸ்.எஸ்.ஆர். நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்; பல்லடத்திலிருந்து, உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் ஒருவர், எத்தனை ஆர்வமுடன் டெலிபோனில் பேசினார்! இதுபோல் ஜெயலலிதாவால் ஏமாற்றப்பட்ட கட்சிக்காரர்கள் தமிழகம் முழுவதிலுமிருந்து என்னைத் தொடர்பு கொண்டு வருகிறார்கள். என்னுடைய படங்கள் தெற்குப் பக்கம் இன்னமும் நன்றாக ஓடுகின்றன. போதாததற்கு சாட்டிலைட் தொலைக்காட்சிகளில் என் பழைய படங்கள் அடிக்கடி காட்டப்படுகின்றன. எனக்கு தினசரி புதுப் புது ரசிகர்கள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள்!"

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **யோகா**

ஏசுதாஸ் ஏற்படுத்திய பிரேக்டவுன்!

"மழையில மனுஷாளுக்கு மட்டும்தான் ஜலதோஷம் பிடிக்குமா...? மைக்குக்கும் பிடிக்கும்..." – கஷ்டப்பட்டு ஜோக் அடித்தார் ஏசுதாஸ். நடுநடுவே மைக் தனியாவர்த்தனம் செய்ய, நுங்கம்பாக்கம் கல்சுரல் அகடமியில் அவர் கச்சேரி இரண்டு – மூன்று முறை பிரேக் டவுன் ஆகித் தொடர்ந்தது.

இன்னொரு பிரேக் டவுன், ஏசுதாஸே ஏற்படுத்தியது! "கணக்கு வழக்கெல்லாம் எனக்கு அவ்வளவா பிடிபடறதில்லே. ஆனால், என் குரு பல்லவி நரசிம்மாச்சார்யார் 'நீ பல்லவி பாடித்தான் ஆகணும்'னு வற்புறுத்திக் கத்துக் கொடுத்தார்...." இப்படித் தொடங்கி ஒரு விளக்கவுரை கொடுத்து, பக்க வாத்தியக்காரர்களுடன் மினி ரிஹர்ஸல் நடத்தி.... ஒருவழியாகப் பாடினார் பல்லவியை! (சில சமயங்களில் குரு சொன்னால் கூட



• ஏசுதாஸ்:
கச்சேரியா, பிரசங்கமா?

கேட்காமல் இருப்பதே நல்லதோ...?)

சாருமதி ராமச்சந்திரன் பாடிய பல்லவியோ பரத நாட்டிய உடையில் ஆடிய கதக் நடனம்! 'தேஷ்' என்கிற ஹிந்துஸ்தானி ராகத்தை ராகம்-தானம்-பல்லவிக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். 'பாரத தேசம் நமது தேசம்' என்று தொடங்கிய பல்லவி. தேசிய ஒருமைப்பாடு உணர்த்தும் நோக்கம் உசத்தியானதுதான்...

விளம்பரங்களிலும் அழைப்பிதழிலும் அச்சிட்டதுபோல் ராமராவ் கலா மண்டபம் 'குளிரூட்ட'ப்படவில்லை. ஆனால் அங்கு பிரபஞ்சம் சீதாராமின் புல்லாங்குழல் வாசிப்பில் ஏசியைத் தோற்கடிக்கும் ஜில்லிப்பு! ரசிகர்கள் வரிசையில் நம்மையும் சேர்த்து முப்பத்தேழு பேர் என்பதுதான் சோகம்!

சீசனுக்கு முன்னால் யார் யார் கச்சேரி எந்தெந்த சபாவில், எந்தெந்த தேதியில் என்று டைம் டேபிள் அச்சடித்து வினியோகிக்கும் சேவை இப்போது ஃபாஷனாகி விட்டது. இதைவிட முக்கியம் – சீசன் முடிந்தபின், யார் யார் கச்சேரிக்கு எவ்வளவு கூட்டம்? எவ்வளவு கலெக்ஷன் என்று பட்டியல் தருவதுதான். யாராவது துணிந்தாலும் சபாக்காரர்கள் ஒத்துழைப்பார்களா?!

காண்டீனைப் பற்றி எழுதினால் கோபித்துக் கொள்ளும் கலைஞர்கள் உண்டு. ('கச்சேரி கேட்க வர்றீங்களா, காண்டீன்ல வெட்றதுக்கு வர்றீங்களா?') ஆனால், ராமராவ் கலா மண்டபத்தில் கன்னட மாமிகள் நடத்தும் காண்டீனில் போண்டாவும் சட்னியும் சுருதி சேருவதுபோல் வேறெங்கு சேர்கிறது! பிளேட்டுக்கு ஐந்து போண்டா வேறு!

தம்புரா கலைஞர்களின் சேவையையும் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிடுவதற்காக தனியொரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. பாராட்டுவதோடு நின்று விடாமல் தம்புரா சுருதியோடு சேர்ந்து பாட வேண்டும் என்பதையும் எல்லோரும் ஞாபகம் வைத்துக் கொண்டால் சரிதான்...

அடுத்தபடியாக கூட்டம் மொய்ப்பது சபா வாசல்களிலுள்ள காஸெட் கடைகளில்.. காண்டீனுக்குச் சளைத்து விடக் கூடாது என்பதில் குறியாய், மசால் தோசை சைஸ் காஸெட் ஆல்பங்களையே அதிகம் அடுக்கி வைத்திருக்கிறார்கள். விலை...? நூற்றைம்பது இருநூறு-ம்!

'ஏழைக்கேற்ற எள்ளுருண்டை' என்று மனசைத் தேற்றிக் கொண்டு பதினைந்து ரூபாய் டிக்கெட் வாங்கி கச்சேரி அரங்குக்குள் போனால்... மனசு நிறைகிறதோ இல்லையோ காது கிழிகிறது! சொல்லி வைத்தது போல், எல்லா வித்வான்களும் வால்யூமை அதிகப்படுத்தும் 'படி' சைகை காட்டுகிறார்கள். மைக்காரர் உடன்பட்டதும் பக்க வாத்தியக்காரர் தம் பங்குக்கு உயர்த்தச் சொல்ல... இந்தப் போட்டியில் உச்சகட்ட வால்யூமில் ஒலி பெருக்கியை நிறுத்தி விட்டு கிருஷ்ண பரமாத்மா மாதிரி கண்காணாமல் போய் விடுகிறார் மைக் டெக்னீஷியன்! கையோடு கொஞ்சம் பஞ்சு எடுத்துப் போவது கூட நல்ல ஐடியாதான்.

– சபாநாயகர்



• தம்புரா கலைஞர்களுக்கு
'கலா ரசனா'வின் பாராட்டு விழா

“ஆண்டவர் நம்மோடு பேசுகிறார்...”

“இயேசு அழைக்கிறார் - நற்செய்திக் கூட்டங்கள்’ பற்றி அறியாதவர்களோ அல்லது கேள்விப்படாதவர்களோ இருக்க முடியாது. ஆகவே சகோதரர் பால் தினகரன் பற்றியும் அறியாதவர்கள் இருக்க வாய்ப்பில்லை. பிறரின் நலனுக்காக ஜெபக் கூட்டங்களை நடத்தும் அவரைச் சந்தித்தபோது....

“உங்கள் தந்தை சகோதரர் தினகரன் ஆண்டவன் ஊழியத்தில் ஈடுபட்டிருப்பதுதான் நீங்களும் அதே ஊழியத்தில் ஈடுபடக் காரணமா?”

“ஆண்டவரின் ஊழியம் என்கிற பாதையை என் தந்தையார் தேர்ந்தெடுத்துப் பயணம் செய்தபோது, அவருக்கு எத்தனையோ கஷ்டங்கள். அதையெல்லாம் தாண்டித்தான் இன்றைய நிலையை அவர் அடைந்திருக்கிறார். நான் அவரது மகனாக இருப்பதால், அவர் வசதிப்படுத்திக் கொடுத்த பாதையில் எனது ஊழியத்தை சுலபமமாகத் தொடங்கியிருக்கிறேன் என்பது உண்மைதான். என்றாலும் எதற்கும் ஆண்டவரின் கிருபை வேண்டும். எனக்கும் அந்தக் கிருபை இருப்பதால்தான் என்னாலும் அவர் ஊழியத்தில் பங்கு பெற முடிந்திருக்கிறது என்பதுதான் உண்மை.”



“அவனருளாலே அவன்தாள் பணிந்து... என்கிற மாதிரி!”

“ஆமாம்.”

“சிறுவயதில் நீங்கள் எப்படி வளர்க்கப்பட்டீர்கள்?”

“கோயிலுக்குப் போதல், ஜெபம் செய் தல், அடக்கம், கட்டுப்பாடு என்று மிகவும் பக்தியோடுதான் வளர்க்கப் பட்டேன். இருப்பினும் நான் கல்லூரிக்குச் செல்கிற வாலிபப்



பருவத்தில் நானும் எல்லா வாலிபர்களைப் போலவும் வாழ்க் கையை அனுபவிக்கவே ஆசைப்பட்டேன். விளைவு? கடவுள் பயமே இல்லாமல் போய் விட்டது! மற்ற வாலிபர்கள் போலவே நானும் இருந்ததால் என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. எதிர்காலம் பற்றிய ஒருவித பயமும் என்னைப் பிடித்துக் கொண் டது. இதை வெளியில் சொல்லவும் முடிய வில்லை. சொன்னால் சகோதரர் தினகரன் பிள்ளையா இப்படி என்பார்களே என்கிற பயம்! பெற்றோரிடமும் சொல்ல முடிய வில்லை. சொன்னால், நம் பிள்ளையா இப்படி என்று அவர்களின் இதயமே வெடித்துவிடும் என்கிற பயம்! இந்தச் சூழ்நிலையில்தான் தமது ஜெபக் கூட்டம் ஒன்றுக்கு என் தந்தையார் என்னை அழைத்துச் சென்றிருந்தார். அங்கு, 'கடவுள் எதையும் செய்வார்; எல்லா வல்ல மையும் தருவார்' என்று என் தந்தையார் சொன்ன வார்த்தைகள் என் மனத்தில் ஆழப் பதிந்தன. அன்று இரவு நான் சிறு குழந்தை மாதிரி தேம்பித் தேம்பி அழுதேன். ஆண்ட வனிடமே என்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து, எனக்கு எல்லா வல்லமையையும் தாருங்கள் என்று மனமுருகி ஜெபம் செய்தேன். அப்படியே தூங்கியும் போனேன். மறுநாள் நான் விழித்தெழுந்தபோது ஒரு புது மனித னாக – வாழ்க்கையின் மேல் நம்பிக்கையுள்ள மனிதனாக – பயமற்ற மனிதனாக நான் மாறி யிருப்பதை நன்றாக உணர்ந்தேன். அந்தக் கணத்திலிருந்துதான் ஆண்டவரின் ஊழிய னாகிற எண்ணம் என்னையறியாமலேயே என்னுள் விழுந்து, முளைத்து வளர ஆரம் பித்துவிட்டது!''

'சாதாரணமாக சில ஜெபக் கூட்டங்கள் பற்றிய விளம்பரங்களில், 'குருடர்கள் பார்க்கிறார்கள்; முடவர்கள் நடக்கிறார்கள்; செவிடர்கள் கேட்கிறார்கள்' என்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருப்பார்கள். கடைசியில் பார்த்தால் மிகச் சிறிய எழுத்துக்களில் அது பைபிளில் வருகிற வாசகங்கள் என்று அச்சிட்டிருப்பார்கள். இதுவொரு தவறான நம்பிக் கையூட்டுவதாகாதா?''

''நாங்கள் அப்படி விளம்பரப்படுத்துவதில்லை. தவிர, சுகவீனமில்லாமல் வருகிற எல்லாருமே நூற்றுக்கு நூறு ஜெபங்களால் சுகம் பெற்று விடுவார்கள் என்றும் சொல்லி விட முடியாது. சிலருக்கு உடனடியாகப் பலன் கிடைக்கும். சிலருக்கு நாள்பட நாள்பட பலன் தெரியும். சிலருக்குக் கிடைக்காமலேயே கூட போய் விடக்கூடும். எல்லாமே ஆண்டவர் கிருபைதான். எங்களைப் போன்றவர்களின் ஜெபக் கூட்டங்களுக்கு எப்படிப்பட்டவர்கள் வருகிறார்கள்? வாழ்க்கையின் எல்லாத் திசைகளிலும் நம்பிக்கையிழந்து, நடைமுறை வாழ்க்கையில் அவர்கள் தட்டுகிற எந்தக் கதவும் திறக்கப்படாத ஒரு சூழ்நிலையில்தான் எங்கள் ஜெபக் கூட்டங்களுக்குச் சோர்வுடன் வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கையே கிடையாதா? 'ஏன் கிடையாது! உங்களுக்கான சுகமான பாதையை ஆண்டவர் தருவார்; அவருடைய வல்லமை உங்களின் எல்லா கஷ்டங்களையும் தவிடுபொடியாக்கிவிடும்! நாங்களும் உங்களுக்காக ஆண்டவரிடம் மன்றாடுகிறோம்!' என்கிறோம். அதன்படியே செய்கிறோம். இந்த வார்த்தைகளாலும் நிகழ்ச்சிகளாலும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. இந்த நம்பிக்கையே வாழ்க்கையை எதிர் கொள்ளுகிற துணிச்சலையும் அவர்களுக்குக் கொடுத்து விடுகிறது!''

''ஆக, ஜெபக் கூட்டங்கள் என்பது, மதம்

எறும்பார் கடிக்கிறார்!

"எனது (நாடாளுமன்றத் தலைவர் பதவி) ராஜினாமாவை அடுத்து எனது அரசியல் வாழ்க்கை முற்றுப் பெற்று விடாது. தொடர்ந்து கட்சியில் தீவிர மாகப் பணியாற்றுவேன்!"

– நரசிம்மராவ்



கடந்த நிலையில் மனிதர்களுக்குள் தன்னம் பிக்கையூட்டுகிற விஷயம்தான், இல்லையா?"

"ஆமாம். உதாரணத்திற்கு ஒன்று சொல் கிறேன். ஒரு பெண். அவர் கிறிஸ்துவ மதத்தவர் அல்ல. உயர்ந்த பதவியொன்றில் இருப்பவர். ஆனாலும் கணவர் சரியானபடி இல்லாததால் விவாகரத்து ஆனவர். அதனால் அவரது எதிர்கால வாழ்க்கை பற்றிய பயம் அவருக்கு வந்து விட்டது. இந்த நிலையில்தான் என் னிடம் தற்செயலாக வந்து, தமது பயத்தைக் கூறினார். அவரிடம், 'ஆண்டவர் உங்களுக் கான சுகமான நாட்களைத் தருவார்; நம்பிக்கை கொள்ளுங்கள்!' என்றேன். திரும்பத் திரும்ப இரண்டு மணி நேரம் இதையேதான் சொன் னேன். அவருக்காகப் பிரார்த்திப்பதாகவும் கூறினேன். அவரும் சென்று விட்டார். சில மாதங்களுக்குப் பிறகு அவரை மீண்டும் சந்திக்கிற வாய்ப்புக் கிடைத்தது. 'இப்போது என் வாழ்க்கையின் பிரச்னைகள் முழுவது மாகத் தீர்ந்து விடவில்லை; என்றாலும் தீர்ந்துவிடும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. எனக்கும் ஒரு நல்ல எதிர்காலம் காத்திருப்ப தாக உணர்கிறேன்' என்றார். ஆக, பிரச்னை களை ஆண்டவரால் நேரடியாகத்தான் தீர்த்து வைக்க முடியும் என்பதில்லை. நமது பிரச்னை களை நாம் தைரியமாக எதிர்கொள்கிற மனோ பலத்தையும் ஆண்டவர்தான் கொடுக்கிறார். நாம் மாத்திரமல்ல; நமக்காக மற்றவர்களும் ஜெபிக்கிறார்கள்; பிரார்த்திக்கிறார்கள் என்கிற போது நமது மனம் இன்னும் பலம் பெறு கிறது – சமாதானமாகிறது என்பதுதான்!"

"ஜெபம் – பிரார்த்தனை போன்றவற்றின் மூலமாக நமக்கு வருகின்ற துன்பங்களைத் தடுத்து விட முடியுமா?"

"ஆண்டவர் கருணைக்கு அளவே கிடை யாது. அவர் நினைத்தால் எல்லாமே சாத் தியம்தான். ஆனால் எல்லோருமே ஆண்ட வரின் கருணைக்கு முழுவதுமாகப் பாத்திரமாகி விடுவதில்லை என்பதுதான் நடைமுறை. என்றாலும் ஜெபம் – பிரார்த்தனைகளின் மூலம் துன்பங்களைக் கடந்து விட முடியும் என் கிற நம்பிக்கையைப் பெற முடியும்; அனை வராலுமே முடியும். இருள் வருகிறதே என் பதற்காக யாரும் கவலைப்படுவதில்லை. காரணம், இருள் விலகி நாளை காலையில் சூரியன் பிரகாசிப்பான் என்கிற அசைக்க முடி யாத நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அதுபோல் தான் துன்பங்களும். நம்மேல் பாசமுடைய ஆண்டவர் இருக்கிறார், அவர் நிச்சயம் நமது துன்பங்களை விலக்குவார் என்கிற நம்பிக் கையை ஜெபம் தருகிறது. அதனால் எதிர் கொள்கிற துன்பங்களை நாம் சுலபமாகச் சமாளிக்கும் வல்லமையைப் பெற்று விடுகிறோம்."

"உங்களுடைய தினசரி வாழ்க்கை முறை என்ன?"

"காலையில் ஆறரை மணியிலிருந்து ஏழு மணி வரை குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து பிரார்த்தனை செய்வோம். பிறகு தனித் தனியாக வேதம் (பைபிள்) படிப்போம் – சுமார் முக்கால் மணி நேரத்துக்கு! அப்போது நாம் நேற்றுச் செய்த தவறுகள் நம் மனத்தில் தோன் றும். 'அடடே, அந்த நண்பரிடம் கொஞ்சம் கடுமையாகப் பேசிவிட்டோமே! அப்படிப் பேசியிருக்கக் கூடாது! ஆண்டவரே என்னை மன்னியுங்கள். இனியொரு முறை இப் படிப்பட்ட கடுஞ்சொற்களை நான் யாரிடமும் உபயோகிக்காமல் இருக்க அருள்புரியுங்கள் சுவாமி!' என்று நடந்து முடிந்த தவறுகளானா லும் அவற்றை மனப்பூர்வமாக உணர்ந்து பிரார்த்தனை செய்வேன். அப்போது என்மீது தெரிந்தும் தெரியாமலும் பட்ட அழுக்குகள் நீங்கி, நான் ஒரு புது மனிதனாக – ஆண்ட வரின் வல்லமையை இதயம் முழுவதும் நிறைத் துக் கொண்ட ஒரு மனிதனாக மாறுவேன். பிறகு அலுவலக வேலைகள். தங்கள் குறை களைச் சொல்லி எழுதப்படும் கடிதங்களுக்குப் பதில்கள் போடுதல் – அவர்களுக்காக ஆண்ட வரிடம் மன்றாடுதல் என்று பணிகள் தொடரும்..."

"நீங்கள் ஞாயிறுதோறும் சர்ச்சுக்குச் சென்று வழிபடுவீர்கள் அல்லவா?"

"நிச்சயமாக. நான் பிராடஸ்டண்ட் பிரி வைச் சேர்ந்தவன் என்றாலும் எல்லா சர்ச் சுகளுக்கும் செல்வேன். எங்களது ஜெபக் கூட்டங்களுக்கும் அனைவரும் வருவார்கள்.

ஏன், மற்ற மதத்தினர் கூட வருவார்கள். ஜெபக் கூட்டங்கள் என்பதில் மற்றவருக்காக நாம் ஆண்டவரிடம் மன்றாடிப் பிரார்த்திப்பதுதான் பிரதானமே தவிர மதச்சடங்குகள் அல்ல."

"உங்களது ஜெபக் கூட்டங்களிலெல்லாம் நீங்கள் அருமையாகவும் பாடுகிறீர்கள். நீங்கள் முறைப்படியான சங்கீதம் ஏதாவது கற்றுக் கொண்டீர்களா என்ன?"

"இல்லை. பிறரின் நலனுக்காக மனமுருகி ஆண்டவரிடம் வேண்டுகிறபோது அந்த வேண்டுதல் கூட சங்கீதம் போல் இனிமையாகத்தான் இருக்கும்."

"கடவுள் அனுபவத்தை எல்லோரும் பெற முடியுமா?"

"நிச்சயமாக முடியும். சதாசர்வகாலமும் ஆண்டவர் நம்மோடு பேசிக் கொண்டுதான் இருக்கிறார். நாம்தான் காது கொடுத்துக் கேட்பதில்லை. அவருடைய நம்பிக்கையான வார்த்தைகளை நாம் காதுகொடுத்துக் கேட்க ஆரம்பித்து விட்டால், நாம் தோல்வியில் தளர்ந்து போய்விட மாட்டோம்; துன்பங்களைக் கண்டு பயந்து போய் விட மாட்டோம். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் பொறாமை கொள்ள மாட்டோம். ஏனெனில் ஆண்டவர் எப்போதும் ஒருவரின் ஜெராக்ஸ் பிரதியாக இன்னொருவரைப் படைப்பதில்லை. அவர் போல் நாம் இருக்கவா நம்மைப் படைத்தார்? இல்லை, நாம் நாம் போல்தான் இருக்க வேண்டும் என்று சமாதானம் பெறுவோம்!"

"பைபிள் மற்றும் அது தொடர்பான புத்தகங்கள் தவிர, மற்ற புத்தகங்கள் ஏதும் படிப்பீர்களா?"

"ஆன்மீகம் சம்பந்தப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் படிப்பேன். விவேகானந்தரின் பிரசங்கங்கள் படிப்பேன்."

"சினிமா பார்ப்பதுண்டா?"

"இல்லை. அதற்கெல்லாம் நேரமில்லை என்பது ஒருபுறமிருக்க, எதற்காகத் தேவையில்லாததையெல்லாம் பார்த்து, அநாவசியமாக நம்மீது அழுக்குப் படிய அனுமதிக்க வேண்டும்?"

"உங்கள் திருமணம் எப்படி? காதல் திருமணமா?"

"இல்லை. பெற்றோர் பார்த்துச் செய்த திருமணம்தான். காரணம், நான் பள்ளியிறுதியில் படித்துக் கொண்டிருந்தபோது, எனது ஆசிரியர்களில் ஒருவர், 'Don't love and marry but marry and love. அப்போதுதான் திருமண வாழ்க்கை பலமானதாக இருக்கும். திருமணத்துக்கு முன்பு காதலிக்கிறபோது, சம்பந்தப்பட்டவரின் நிறைகள் மாத்திரம்தான் தெரியும். திருமணமான பிறகோ சம்பந்தப்பட்டவரின் குறைகள் மாத்திரம்தான் தெரியும். திருமணத்திற்குப் பிறகு காதலிக்கிற போதுதான் நிறைகளும் குறைகளும் சேர்த்துத் தெரியும். அப்போது அந்த இரண்டையுமே சேர்த்து நீங்கள் காதலிப்பீர்கள். அப்படிப்பட்ட காதல் தான் பலமானதாக இருக்கும்' என்றார். அது என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. ஆனாலும் எனக்கு என் பெற்றோர் பெண் பார்த்தபோது, பெண்ணின் உயரம் ஐந்தரை அடிக்கு ஓர் அங்குலம் கூடக் குறையக்கூடாது என்று மட்டும் ஒரு கண்டிஷன் போட்டேன்."

"எதற்காக அப்படியொரு கண்டிஷன்?"

"நான் ஆறடி உயரம். அதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டாமா! அதற்குத்தான். என் மனைவி இவாஞ்சலின் பற்றி என்னிடம் சொன்னபோது, முதலில் உயரம் என்ன என்றுதான் கேட்டேன். ஐந்தடி ஏழு அங்குலம் என்றார்கள். உடனே சரி என்று சொல்லி விட்டேன்! என்று சிரிக்கிறார்.



"உண்ணாவிரதம் இருக்கிற இடத்துல என்ன ஒரே ரகளையா இருக்கு?"

"யாரோ ஒருத்தருக்கு ஒரு பிரியாணிப் பொட்டலம் அதிகமா கொடுத்துட்டதால மத்தவங்க எல்லாம் கடுப்பாகி தகராறு பண்ணிக்கிட்டிருக்காங்களாம்!"

— டி. பசுபதி

நாம் விடைபெறுகிற போது "ஒரு நிமிடம் இருங்கள்!" என்றவர் வாய்விட்டுப் பிரார்த்தனை செய்கிறார் : "ஆண்டவரே, இந்த நண்பருக்கு வரும் நாட்களையெல்லாம் சுகமான நாட்களாகவே தாருங்கள். உமது கருணை மழையால் அவரது இதயத்தை நிரப்புங்கள்; அவரது உள்ளத்தில் சமாதானத்தையும் வல்லமையையும் தந்து என்றென்றும் அருள் புரியுங்கள் சுவாமி!"

— இளங்கோவன்

அட்டையில் மனைவியுடன் சகோதரர் பால்தினகரன்;
வண்ணப்படம், படங்கள் : **யோகா**

மத்திய அமைச்சர்கள் வாங்கிய மார்க்!

எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், தமது வயதான தாயாரையும் அழைத்துக் கொண்டு காசிக்குப் போனார், தீர்த்த யாத்திரையாக. அதிகாரிகள் பலர் எல்லா இடத்திலும் அமைச்சருக்கும் அவர் தாயாருக்கும் எல்லாவித உதவிகளையும் செய்தார்கள். காசிக்கயிறும் கட்டிக் கொண்டார் எஸ்.ஆர்.பி. காசிக்கயிறு தடிமனான சிவப்புக் கயிறும், கறுப்புக் கயிறுமாக இருக்கவே, நாடாளுமன்றத்துக்கு அவர் வந்தபோது, தி.மு.க உறுப்பினர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. "எஸ்.ஆர்.பி சார், எங்கள் கட்சிக்கு மாறிவிட்டீர்களா?'' என்று கிண்டலடித்திருக்கிறார்கள். "நம் இரு கட்சிகளுக்கிடையே தேர்தல் உடன்பாடு கண்டதில் எனக்கும் பங்கு உண்டு இல்லையா? அதனால் உங்கள் கறுப்பு-சிவப்பு என் கையில் இருந்தால் என்ன தவறு?'' என்று ஒரே போடாகப் போட்டார் எஸ்.ஆர்.பி.

● தேவே கௌடாவின் கார் டிரைவர் ஒருவருக்கு திடீர் மாற்றல் உத்தரவு இடப்பட்டிருக்கிறது. காரணம், காரை ஓட்ட மாட்டேன் என்று இவர் மறுத்ததுதான். நாடாளுமன்றத்துக்குப் பிரதமர் புறப்படும்போது, அவருடன்கூடவே வரும் ஒரு கும்பல் நெருக்கியடித்துக் கொண்டு காரின் முன் பக்கத்து சீட்டுகளிலும் வந்து உட்கார்ந்து கொள்ளுவதை இந்த டிரைவர் ஆட்சேபித்திருக்கிறார். எஸ்.பி.ஜி. உதவி இயக்குநர் இதைப் பிரதமரிடம் சொன்னபோது, ''மாட்டேன் என்று சொல்லுபவரை மாற்றல் செய்து விடுங்கள்!'' என்று பிரதமர் சொல்லி விட்டாராம். ஆனால் பாதுகாப்புக் கருதி, துணிச்சலாக, மேலிடம் என்றும் பாராமல் எதிர்ப்பைக் காண்பித்த டிரைவருக்கு எஸ்.பி.ஜி. வட்டாரத்தில் மதிப்பு ஏறிவிட்டது!



• தேவே கௌடா



• ப.சிதம்பரம்

● சீதாராம் கேசரி ஒரு விஷயத்தில் வெகு கண்டிப்பாக இருக்கிறார். ''இளைஞர் காங்கிரஸ் செயற்குழுவில் யாருக்கும் 35 வயதுக்கு மேல் இருக்கக் கூடாது என்பதுதான் அது. கல்லூரிக்குப் போகிற வயதில் பையனை வைத்துக் கொண்டு, இளைஞர் காங்கிரஸ் செயற்குழுவில் உறுப்பினராக இருப்பது எனக்குப் பிடிக்காது'' என்று வெளிப்படையாகவே சொல்லி விட்டார்.

● முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், தமது நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவர் பதவியை உடனே ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கேசரியே கடிதம் அனுப்பியதை, ராவ் ஏற்கெனவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாராம். இந்த எதிர்பார்ப்பு அவருக்கு எப்படி வந்தது? ராவ் தமது இல்லத்தில் கொடுத்த ஒரு

விருந்துக்கு அழைப்பு அனுப்பியிருந்தும் பலர் அதை ஏற்கவே இல்லை என்பதிலிருந்து கேசரியின் எதிர்ப்பு வெளிப்படையாகி விட்டது. அதனால் இப்போது ஏமாற்றம் போய் கடும் கோபத்துக்கு ஆளாகி இருக்கிறார் ராவ்.

● தில்லிக்கு வந்திருக்கும் 19 பாகிஸ்தானி மாணவிகள் இந்தியாவுக்கு வந்ததில் ஏக மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். தில்லி செங்கோட்டை, ராஜஸ்தானி நகை நட்டுகள் தவிர, 'தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே' திரைப்படம் அவர்களை ஒரேயடியாக அசத்தி விட்டது!. 'அந்தாஜ் அப்னா அப்னா' படம் பார்த்து சொக்கிப் போய்விட்டோம்!' என்று இன்னொரு பாராட்டு. நடிகர் ஆமீர்



• முரசொலி மாறன்

• பாஸ்வான்

• குஜ்ரால்

கானைப் பார்க்க எல்லோருக்குமே ஆவல்.

● பா.ஜ.க, டி.வி-சினிமா பற்றிய கருத்துப் பிரிவு ஒன்றைத் துவக்கியுள்ளது. அதற்கு மகாபாரதம் கிருஷ்ணர் புகழ் நிதிஷ் பரத்வாஜ் பொறுப்பாளர். நிதிஷ் தற்போது ஜம்ஷெட்பூர் தொகுதியின் எம்.பி. அவர் தூர்தர்ஷனுக்காக 11 எபிசோடில் கீதையின் ரகசியம் என்று பகவத்கீதை பற்றிய சீரியல் எடுத்திருக்கிறார். அதிலும் நிதிஷ் பரத்வாஜ்தான் கிருஷ்ணர்!

● ஐக்கிய முன்னணி அரசின் ஆறுமாத கால ஆட்சியில், அதன் முக்கியமான சில அமைச்சர்களின் செயல்பாடு எப்படி இருந்தது என்று, வல்லுனர்களைக் கொண்டு மதிப்பீடு செய்துள்ளது சண்டே டைம்ஸ் நாளிதழ். அதில் மத்திய மந்திரிகள் பெற்ற மதிப்பெண் விவரம்: ப.சிதம்பரம் 66, முரசொலி மாறன் 58, ஐ.கே.குஜ்ரால் 56, தேவே கௌடா 43 முலயம்சிங் யாதவ் 40, இந்திரஜித் குப்தா 36 ராம்விலாஸ் பாஸ்வான் 33, சி.எம்.இப்ராஹிம் 15 சதவிகிதங்கள்!

● கர்நாடக மாநிலத்துக்கு விரைவில் புதிய முதலமைச்சர் நியமிக்கப்படவிருக்கிறார் என்பது டெல்லியில் கிளம்பியுள்ள லேட்டஸ்ட் தகவல். மத்திய செய்தி, ஒலிபரப்பு மந்திரியான சி.எம்.இப்ராகிமை, பெங்களூருக்கு அனுப்பி வைப்பார்கள் போலத் தெரிகிறது. அப்புறம் தற்போதைய முதலமைச்சர் ஜே.ஹெச்.பட்டேலின் கதி? "கவலை வேண்டாம். மத்திய அமைச்சராக்கி விடுகிறேன்" என்று உறுதியளித்துள்ளாராம் பிரதமர்.

● மராட்டிய முதலமைச்சர் மனோகர் ஜோஷி, தமிழக முதல்வர் கருணாநிதியைப் பின்பற்றி இன்னொரு முதலமைச்சரும் தமது மாநிலத் தலைநகரின் பெயரை மாற்றப் போகிறார். அவர் லல்லு பிரசாத் யாதவ் பீகாரின் தலைநகரான பாட்னாவை பாடலி புத்திரம் என்று மாற்றப் போகிறாராம்!

— நியூஸ்வாலா

கௌதம்

எழுத்தாளர் அசோகமித்திரனுக்கு

ஒருமுறை 'சுதேசமித்திரன்' தீபாவளி மலரில் வெளியான 'பயணம்' என்ற சிறுகதையைப் படித்துவிட்டு அதை எழுதிய அசோகமித்திரனைத் தேடி அவர் வீட்டுக்கு நானும் ஒரு நண்பரும் போயிருந்தோம்.

மலைப்பிரதேசம் ஒன்றில், மரணமடைந்த தமது குருவை, ஒரு சக்கரவண்டியில் நாலு சீடர்களும் இழுத்து வரும் கதை. அமானுஷ்யமான ஒரு பின்னணியில் அமைந்திருந்த வித்தியாசமான இந்தச் சிறுகதையைப் படித்துவிட்டு, 'இப்படிக்கூட எழுத முடியுமா?' என்ற பிரமிப்பில்தான் பார்க்கப் போனோம்.

அப்போது, (மறைந்த எழுத்தாளர்) சுப்பிரமணிய ராஜு, அவரிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வெளியே வந்தார். "அசோகமித்திரனிடம் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை" என்றவர், "அசோகமித்திரனின் கதைகளை மட்டும் எந்த பாஷையில் வேண்டுமானாலும் மொழிபெயர்க்கலாம். அவர் மனித உறவுகளையும் உணர்வுகளையும் அடிப்படையாக வைத்து எழுதுவதால், அது எல்லா நாட்டுக்காரர்களுக்கும், எல்லா மொழிக்காரர்களுக்கும் பொருந்துகிறது!" என்று சொன்னது இன்னும் நினைவு இருக்கிறது. அதனால்தான் போலும், அசோகமித்திரனின் பல சிறுகதைகளும் நாவல்களும் ஏராளமான இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது போக, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், செக், ருஷ்ய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

"கதையைப் படித்துவிட்டுப் பாராட்டவா என்னைத் தேடி வந்தீர்கள்? சந்தோஷம்!" என்ற அசோகமித்திரன், "இதுவே உங்களுக்கு ஒரு 40 வயதாயிருந்தால், அந்த மாதிரி ஆசை எல்லாம் வந்திருக்காது!" என்றார் சிரித்துக் கொண்டே.

கிறிஸ்துவ இலக்கியச் சங்கத்தில், அசோகமித்திரன் ஒரு கூட்டத்தில் பேசினார். 'கல்கி'யின் 'சிவகாமியின் சபதம்' நாவல் பற்றி. ஒரு சக்கரவர்த்தியும் ஒரு நடனமணியும் முக்கியக் கதாபாத்திரங்கள். அந்த ஆண் - பெண் உறவைச் சித்திரிப்பதில் 'கல்கி' காத்த கண்ணியத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார் அசோகமித்திரன். அந்தக் கூட்டத்துக்கு தி.ஜ.ர. தலைமை வகித்தார். "கல்கியைப் பற்றிப் பேசியதற்கு என்னைக் கூடக் கோபித்துக் கொண்டார்கள்!" என்று பிறகு தெரிவித்தார் அசோகமித்திரன். "கல்கியின் புகழிலும் வளர்ச்சியிலும் பொறாமை கொண்ட அவரது சமகாலத்து எழுத்தாளர்களால் அவரது புகழைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் எழுத்தாளர்களில் 'கல்கி' ஒரு important figure. பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி மணிமண்டபம் கட்டுவதாகட்டும், எழுத்தாளருக்குக் கொடுப்பதாகட்டும், அவர் ஒரு முன்னோடி" என்று இன்னமும் அசோகமித்திரன் சொல்லுவதுண்டு.

"சாய்ஸே இருக்கக் கூடாது..."

1980-ல், கல்கி, வாசகர் சிறப்பிதழ் வெளியிட்டபோது, வாசகர்களிடமே யோசனைகள் கேட்டு, அவர்கள் குறிப்பிடும் மூன்று வார்த்தைகள் கதையில் அவசியம் வருமாறு சிறுகதை எழுத யோசனை தெரிவித்திருந்தார் ஆசிரியர். அசோகமித்திரனிடம் மூன்று வாசகர் கார்டுகளை எடுத்துக்கொண்டு போனோம். ஒரு வாசகர் எழுதிய கார்டில் மட்டும், கங்கை, படகு, துறவி என்ற வார்த்தைகள் இருந்தன. (மற்ற இரு கார்டுகளில் வேறு சில வார்த்தைகள் இதுபோல இருந்தன.) அசோகமித்திரன் சொன்னார் : "இதுபோல சாய்ஸ் கொடுக்கும்போதுதான் மனசு ஒரு நிலைகொள்ளாமல் இதுவா, அதுவா என்று சஞ்சலப்பட்டு, சபலப்பட்டு அல்லாடுகிறது. சாய்ஸே இருக்கக்கூடாது. இதுதான் உனக்கு என்று அடித்துச் சொல்லிவிட்டால், பிறகு

சாகித்திய அகாதமி விருது :

சலனங்களுக்கோ சபலங்களுக்கோ இடமே இருக்காது!" என்றார். அவர் எழுதிய கதை : 'அம்மாவைத் தேடி!' இந்தச் சிறுகதையைப் படித்து, ஆசிரியர் நெகிழ்ந்து போய், அடுத்து வந்த இசைவிழாச் சிறப்பிதழிலும் அசோகமித்திரனிடமே சிறுகதை கேட்கச் சொல்லிவிட்டார்! 'இந்திராவுக்கு வீணை கற்றுக் கொள்ள முடியவில்லை' என்ற சிறுகதை 1980 டிசம்பர் இதழில் வெளியாயிற்று. ஆனால் அதற்கு முன்பே 1959-ல், 'ஆனந்த விகடனி'ல் 'இந்திராவுக்கு வீணை கற்றுக் கொள்ள வேண்டும்' என்ற சிறுகதையை அசோகமித்திரன் எழுதியிருந்தார். இருபத்தோரு வருடங்களுக்குப் பிறகு தாம் எழுதிய கதையின் இன்னொரு பகுதியை அவரால் எழுத முடிந்தது ஆச்சரியமாய் இருந்தது!

"ஒரு பெரிய ஸ்டோரியின் தனித்தனி அங்கங்கள்தான் என் சிறுகதைகள்!" என்பார் அசோகமித்திரன்.

நாம் அன்றாடம் சந்திக்கிற, சம்பாஷிக்கிற சாதாரண மனிதர்களே அசோகமித்திரன் கதைகள் எல்லாவற்றிலும் வருவார்கள். அவர்கள் பேச்சும் நடந்து கொள்ளும் தோரணைகளும் வெகு யதார்த்தமாகவே இருக்கும். ஒரு துளியேனும் மிகையாக இருக்காது. 'அம்மாவுக்காக ஒரு நாள்', 'ஒரு ஞாயிற்றுக் கிழமை', 'மணல்' என்று ஒரு நீண்ட பட்டியலே போடலாம், இந்த வகையில். அசோகமித்திரனின் கதைகளில் செயற்கைத் தன்மையின் வாடையே இருக்காது. ஏன், சினிமா சூழலில் அவர் எழுதிய கதைகளில் கூட ('கரைந்த நிழல்கள்' - நாவல், 'வெறி' - சிறுகதை) சினிமாத்தனம் துளியும் இருந்ததில்லை. அப்பட்டமான நிஜ வாழ்க்கைச் சித்திரிப்புகள் அவை.



மெலிதான நகைச்சுவை இழையோட அவர் எழுதிய சிறுகதைகளைக் கூட ஒரு பட்டியல் போடலாம். 'கலைமகள்' தீபாவளி மலரில் 'சுந்தர்' என்ற தலைப்பில் ஒரு பசுமாட்டை வைத்து எழுதப்பட்ட இந்தச் சிறுகதையைப் படிப்பவர்கள், நிச்சயம் வாய் விட்டுச் சிரிக்கக்கூடிய தருணங்கள் நிறையவே இருக்கின்றன!

அசோகமித்திரனின் 'கதையின் முடிவு வாக்கியங்கள்' பற்றி, ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையே எழுதலாம். அந்தக் கடைசி வாக்கியத்தில், அந்தக் கதையின் முழுப் பாரத்தையும் நிற்கவைத்து விடுவார்.

கட்டுரைகளிலும் இந்தக் கடைசி வாக்கிய 'அதிர்ச்சி' இருக்கும். தி. ஜானகிராமன் பற்றிய கட்டுரையை ஆரம்பிக்கும்போது, 'அவரை முதன் முதலாகச் சந்தித்தது நல்ல புரட்டாசி வெயிலில்; இடையில், எழுத்தாளர் ந. சிதம்பர சுப்பிரமணியத்தின் வீட்டைத் தேடி இருவரும் அலையும்போதும் நல்ல வெயில்'. கல்கியில், தி. ஜானகிராமன் மறைந்தபோது அசோகமித்திரன் எழுதிய அந்தக் கட்டுரையின் கடைசி வாக்கியம் இது : 'ஜானகிராமன் கடைசியாக சுவாசம் விட்டு அமைதி அடைந்த நேரம், நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தது.'

ஒருமுறை பேச்சுவாக்கில், துரோணரைப் பற்றியும், ஏகலைவன் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, "ஏகலைவன் எப்படிப்பட்ட Symbol. எப்படிப்பட்ட குறியீடு!" என்றார். "நீங்கள் இதையே ஒரு சிறுகதையாக எழுதக் கூடாதா?" என்று கேட்டேன். "அப்படி எல்லாம் புராண - இதிகாசங்களை interpret பண்ண நாம் யார்?" என்றார் அசோகமித்திரன்.

பேச்சிலும், எழுத்திலும் யாரையும் புண்படுத்தாதவர் அசோகமித்திரன்.

- சாருகேசி



• முருகன், பரந்தாமன், குருநாகராஜன்

"இரா முழுக்கத் தூக்கமே இல்லப்பா!" என்றார் பூவாயி என்ற பெண் மணி.

"ஏம்மா?"

"அத்த ஏன் கேக்கற போ... எல்லாம் இந்தப் புது கொத்தவால் சாவடியாலதாம்பா...."

"என்னம்மா இப்படிச் சொல்ற... ஜெய லலிதா வூடு மாதிரி எல்லாம் பளிச்சினு இருக்கே. பழைய கொத்தவால்சாவடிக்குள்ள பூந்து வர்றதுக்குள்ளவே எல்லாம் கலீஜா யிடுமே. இதையா இப்படிச் சொல்ற?"

"எல்லாம் கரீட்டுத்தாம்பா. புது கொத்த வால்சாவடில எல்லாம் பளிச்சினு காத்தோட்ட மாத்தான் கீது. ஆனா பஸ் வசதி வேண் டாமா?"

"இதோ எத்தன பஸ்ஸுங்க நின்னுக்கிட்டு இருக்கு. நீயானா இப்படிச் சொல்றியே...?"

"இதெல்லாம் எந்த மூலைக்குப்பா. நான் ஜாம் பஜார்லேர்ந்து வரணும். பழைய கொத்தவால்சா வடின்னா, இந்நேரத்துக்கு நான் பூ வாங்கிக்னு போய் கட்டவே ஆரம் பிச்சிருப்பேன். இப்பப் பாரு, காத்தால மணி ஏழாவது. இன்னமும் இங்க நான் பூவாங்கி முடிஞ்ச பாடில்லை. இனிமே தொட்டு வாங்கிக்னு, பஸ் புடிச்சு ஜாம்பஜார் போவ சொல்லவே மணி பதினொண்ணா யிடும். அதுக்கப்பால நான் பூக்கட்ட ஆரம் பிச்சு... விக்க ஆரம்பிச்சா எப்படிப்பா வேவாரம் ஆவும்... நீயே சொல்லு... இத்தொட்டு நான் இந்த வேவாரத்தையே வுட்டுட்டு, வேற எதுனாச்சும் செய்யலாமான்னு யோசிக்கறேன் தெரியுமா?"

"விலாவாரியாச் சொல்லும்மா. உனக்கு இன்னும் என்ன வசதி வேணுங்கிற?"

"பஸ்ஸுப்பா, பஸ்ஸு. இன்னும் நெறைய வுடணும். அப்படி வுடலைன்னா யாரும் வேவாரமே செய்ய முடியாது. எதுவானாலும் நேரத்துக்கு விக்கணும்பா...." என்றார் அந்தப் பெண்மணி.

"இப்போ கொறச்ச பஸ்ஸுங்களா இருக்கற தால, லக்கேஜ் வாங்கறதோட, மேல ரண்டு ரூபா தனியாக்குடுன்னு ஆட்டோக்காரன்

• வெளியே.....



வள்ளியம்மா



தத்தளிக்கும் சில்லறை வியாபாரிகள்!

கணக்கா பஸ் கண்டக்டருங்க கேக்க ஆரம்பிச்சுட்டாங்க. இப்படியெல்லாம் குடுத்தா என்ன பண்றது? வாங்கற கஸ்டமருங்க தலையில தான் கட்ட முடியும்! அவுங்க சும்மா இருப்பாங்களா... எங்க பொழப்பே கவீஜாயிடுச்சு...'' என்று அலுத்துக் கொண்டார் வள்ளியம்மாள் என்கிற பெண்மணி.

ஆம், கொத்தவால்சாவடியின் நெருக்கத்தைக் குறைப்பதற்காக அதை கோயம்பேட்டுக்கு அரசு மாற்றியதன் விளைவுதான் சில்லறை வியாபாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த மிகப் பெரிய கஷ்டம்.

இடம் என்னவோ கன ஜோராகத்தான் இருக்கிறது. ''ரொம்ப வசதிங்க. ரொம்ப ரொம்ப திருப்தியா இருக்கு. எங்களுக்குப் பிரச்னைன்னு எதுவும் பெரிசா இல்லை. ஏன்னா, எங்களைப் போன்ற மொத்த வியாபாரிகளுக்கு வர்ற சரக்கெல்லாம் லாரிங்கள்ல வருது. அதனால எங்களுக்குப் பிரச்னையே இல்லை!'' என்றார் மொத்த வியாபாரம் செய்யும் முருகன் என்பவர்.

''உங்களுக்கு ரொம்ப வசதிதான். ஆனா எங்களுக்கு? வேலை அதிகம். கூலி கொறச்சலா இருக்கே!'' என்றார்கள் லாரிகளில் வரும் சரக்கை இறக்கிக் கடைகளுக்குக் கொண்டு வருகிற கூலி வேலை செய்யும் பரந்தாமனும், குருநாகராஜனும்.

''எப்படிச் சொல்றீங்க?''

''பழைய கொத்தவால்சாவடில லாரி நிக்கிற இடமும் சரக்கை இறக்கி வைக்கிற இடமும் பக்கம் பக்கமாகவே இருக்கும். அதனால காய்கறியோ, பழமோ, பூவோ... எதுவானாலும் ஒரு சிப்பத்துக்கு ஒண்ணேகால் ரூபான்னு கூலி வாங்கினோம். இங்க வந்த பிறபாடும் எங்களுக்கு என்ன கிடைக்குது? ஒண்ணேகாலுக்குப் பதில் ஒண்ணரை ரூபாய் தர்றாங்க. இது போதாதுங்க... நீங்களே பாருங்க, லாரிங்க எங்க நிக்குது... கடைங்க எவ்வளவு தொலைவுல இருக்குதுன்னு... அதனாலதான் நாங்க இரண்டு

• உள்ளே.....





ரூபாய் தரணும்னு கேட்கிறோம்..." என்றார்கள் அவர்கள்.

இந்தக் கூலிப் பிரச்னை இவர்களுக்குள் பேசித் தீர்ந்து போகிற சிறிய பிரச்னைதான் என்றாலும் கோயம்பேடு வணிக வளாகத்துக்கு விடப்பட்டிருக்கிற பஸ்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவுதான்!

"இது பற்றி அமைச்சரிடம் நீங்கள் முறை யிடவில்லையா?"

"போக்குவரத்து அமைச்சர் பொன்முடி அவர்களும் இங்கே வந்து பார்த்து நிலை மையை உணர்ந்துதான் இருக்கிறார். அடுத்த மாதத்திலிருந்து நிறைய பஸ்கள் விடப்படும் என்றும் எங்களிடம் உறுதி கூறிச் சென்றிருக் கிறார். அதன்படி விடுவார்கள் என்றுதான் நம்புகிறோம். இல்லையெனில் சில்லறை வியா பாரிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். வேறு வழி இல்லையென்றால் ஆட்டோ, டெம்போ என்றுதான் அவர்கள் நாடிச் செல்ல வேண்டி யிருக்கும். அப்படிச் சென்றால் அதற்காகும் செலவையும் சேர்த்துத்தான் சில்லறை வியா பார விலைகளும் இருக்கும். அப்போது பொது மக்கள்தான் கஷ்டப்படுவார்கள்!" என்றார் மாணிக்கம் என்கிற வியாபாரி.

"பழைய கொத்தவால்சாவடியானா என் னோட பன்னண்டு வயசுப் பொண்ணுகிட்ட கோணியையும் துட்டையும் குடுத்து அனுப் புனாப் போதும்.. பூவாங்கிக்கினு வந்துடும். இப்பப் பாருங்க... பஸ் வசதி இல்லாததால நான் வந்தும் லோல்பட வேண்டியிருக்கிது..." என்றார் காவேரி என்ற பெண்மணி.

பழைய கொத்தவால்சாவடி என்றால், சில்லறை வியாபாரிகளுக்குக் கூப்பிடு தூரத்தில் ரயில் வசதியும் இருந்தது. பஸ் வசதிகளும் ஏராளமாக இருந்ததால் எந்த விதப் பிரச் னைகளும் இல்லாமல் காலை எட்டு மணிக் குள்ளாகவே அவரவரும் தாங்கள் வாங்க வேண்டிய கறிகாய்களை வாங்கிக் கொண்டு அவரவர் இடங்களுக்குச் சென்று விடுவார்கள்.

புதிய வணிக வளாகத்துக்கு சுத்தமாக ரயில் வசதியும் கிடையாது; பஸ் வசதிகளும் குறைவு என்கிற சூழ்நிலையில் அவர்கள் என்னதான் செய்ய முடியும்?

"எத்தனை பஸ்ஸுங்கள வுட்டாலும் தாம் பரம், வில்லிவாக்கம் ரயில் ரூட்டை கோயம் பேடு வழியாய்ப் போட்டாத்தான் பிரச்னைக்கு முழுமையாத் தீர்வு கிடைக்கும்!" என்றார் காசி நாதன் என்ற சிறு வியாபாரி.

இவை ஒருபுறமிருக்க, வழக்கமான ரூட் களில் உள்ள பஸ்களைத்தான் இப்போது கோயம்பேடு மார்க்கெட்டுக்கும் திருப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வழக்கமான ரூட்களில் செல்லும் பஸ்களின் எண்ணிக்கை குறைந்து போய், வேலைக்குப் போகும் பொது மக்களும் திண்டாடிக் கொண் டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் அமைச்சர் சொன்னபடி அடுத்த மாதத்திலிருந்து கோயம்பேட்டுக்கு இன்னும் பல பஸ்களைத் திருப்பிவிட்டால் பொது மக்களின் கதி என்ன? எனவே, ஏராள மான புதிய பஸ்களை வாங்கி விடுவதொன்று தான் பிரச்னை தீருவதற்கான முழுமையான வழி!

ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் ஓடுகிற நிலையில், புதிய பஸ்களை வாங்கிவிடுவதன் மூலம் இன்னும் நஷ்டம் தானே அதிகரிக்கும் என்று அரசு பதில் சொல்லக் கூடாது. மக்களுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுப்பதோடு, நஷ்டம் வராமல் பார்த்துக் கொள்வதும் கூட அரசின் பொறுப்புத்தான். திறமையாகவும் சிக்கனமாக வும் செயல்பட்டால் அந்தப் பொறுப்பை எளிதில் நிறைவேற்றலாம்.

— **பிரின்ஸ்**

படங்கள் : **யோகா**


Vasanth®
வசந்த் & கோ
டிசம்பர் 25 முதல் ஜனவரி 1 வரை (ஞாயிறும் விற்பனை உண்டு)
புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி விற்பனை !
உங்களுக்கு இரட்டிப்பு ஆதாயம்! தள்ளுபடி விலை மற்றும்
ரூ.5 லட்சம் மதிப்புள்ள
1000 பரிசுகள் வெல்ல வாய்ப்பு!
CITIBANK CARDS (Visa/Master/Diners) ACCEPTED (NO SERVICE CHARGES)
India's only refrigerator with
Maxi - Insulation
Electrolux
UNIQUE AGITATOR WASH
Whirlpool
HOME APPLIANCES
THE VIDEOCON 25
BAZOOKA
BOSS
VIDEOCON
BRING HOME THE LEADER
Vasanth
MIX-FAST
HIGH POWER MIXIE WITH Q·M·S
Vasanth®
CEILING FAN
ORIENT
Butterfly
GOOD FOR A LIFETIME
Butterfly
SAMSUNG
SAMSUNG
Super Horn
The sound investment.
BPL
BPL
EMPEROR
SERIES
THOMSON
CTV • VIDEO • AUDIO
ULTRA
GRIND +
ULTRA
MIXER GRINDER
GET
USHA
TODAY
Vasanth®
வசந்த் & கோ
சென்னை : தி.நகர் : 45 தெற்கு உஸ்மான் சாலை • 8A தெற்கு உஸ்மான் சாலை • L.R. சுவாமி கல்யாண மண்டபம், சிவா விஷ்ணு கோயில் எதிரில் • தாம்பரம் : 21–22 சண்முகம் சாலை • புரசைவாக்கம் : 191 புரசைவாக்கம் நெடுஞ்சாலை • பாஞ்சாலை கோதண்டபாணி கல்யாண மண்டபம், 173–177 புரசைவாக்கம் நெடுஞ்சாலை • கோடம்பாக்கம் : 20, ஆற்காடு ரோடு • அடையார் : 4 பத்மநாப நகர், அடையார் சிக்னல் அருகில் • பாடி : 63, M.T.H. சாலை • வண்ணாரப்பேட்டை : 339 திருவொற்றியூர் நெடுஞ்சாலை • ராயபுரம் : 67 பன்னார்சாமி கோயில் தெரு • வைலாப்பூர் : முதல் மாடி, கல் கார்னர், கல் • செங்கல்பட்டு : 5, G.S.T. ரோடு, இந்தியன் வங்கி அருகில் • வேலூர் : 15–16, காட்பாடி ரோடு • 1J, ஆற்காடு ரோடு, சத்துவாச்சாரி • கோயம்புத்தூர் : 15, ஒப்பணக்கார வீதி • சேலம் : 34, முதல் அக்ரஹாரம் • முதல் அக்ரஹாரம், வாசவி கல்யாண மண்டபம் • ஓசூர் : 66 B தாலுகா ஆபீஸ் ரோடு • தஞ்சாவூர் : 11 சிவராயர் கார்டன் முதல் தெரு, மானம்புச்சாவடி • திருச்சி : 2-B/1 கோட்டை ஸ்டேஷன் ரோடு • மதுரை : 162, தெற்கு மாசி வீதி • S.N.S கல்யாண மண்டபம், தெற்கு மாசி வீதி • திருநெல்வேலி : 14, பராசக்தி பில்டிங் • பாளையங்கோட்டை : 11, திருவனந்தபுரம் ரோடு, ஊசி கோபுரம் எதிரில் • பாண்டிச்சேரி : 414, மகாத்மா காந்தி ரோடு • பெங்களூர் : பிரஸ்டீஜ் கோர்ட், 101/1 K.H ரோடு (டபுள் ரோடு).



சைனஸா! ஈஸ்னோபிலியாவா! ஆஸ்த்மாவா! காசநோயா! சர்க்கரை வியாதியா! புற்று நோயா! போன்றவைக்கு மூலிகை மருத்துவம்



ஆஸ்த்மா எவ்வாறு ஏற்படுகிறது? நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவு நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததேயாகும். சிலருக்குச் சில நேரங்களில் சிறுநீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்களால் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலோ, கழிவு நீர் முறைப்படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற்போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும் நீருடன் கலந்து சுத்தப்படுத்தப்படுகிறது.

சுத்தப்படுத்தும் போது பிரிக்கப்படும் கழிவு நீர், தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்குச் சிந்தும் போது இது மூக்குச்சளியாக வெளியேறுகின்றது. இறுகிய கழிவு நீரே இருமலின்போது கோழையாக வெளியாகின்றது. இம்முறைகளில் வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவு நீரே நுரையீரல் பகுதியில் படிந்துவிடும் கபம் எனப்படுவதாகும். இதன் காரணமாகவே தொடர்ந்து ஜலதோஷம் மூச்சுத் திணறல், மூக்கடைப்பு மூக்கில் நீர் வடிதல், தும்மல் இருமல், கபம், பீனிசம் (Sinus) மூச்சு வாங்குதல் போன்றவை ஏற்படுகின்றன.

உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும் சீரான இரத்த ஓட்டமும் இருந்தால் தான் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் பழுதடையாமல் நல்ல நிலைமையில் இருக்கும். தெய்வீக மூலிகைகளான வில்வம், வேப்பிலை, அத்தி, துளசி, மாவிலை, வெற்றிலை போன்றவைகளுடன் அற்புத மருத்துவக் குணம் கொண்ட தும்பை, கீழாநெல்லி, ஆடாதோடை, குப்பைமேனி போன்றவைகளைப் பொடி செய்து தக்க அளவில் கலந்து உட்கொண்டால் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும் சீரான தடையற்ற இரத்த ஓட்டமும் ஏற்படுவது உறுதி. மேலும் ஆலோசனைக்கு:

மூலிகை வைத்தியர்

Dr.C.K.M. சபாபதி,
S/o. Dr.C.K. மாணிக்கவாசகம்
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(பிரின்ஸ் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638



மூலிகை வைத்தியர்


Dr.C.K.M. குருபரன்
S/o. Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22769.

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
3,19ந்தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை	9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899.
9-ந் தேதி	- கிருஷ்ணகிரி	: மாலை	5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761.
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021.
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
18-ந் தேதி	- ஆம்பூர்	: காலை	10 to 11 சம்பங்கி லாட்ஜ், ✆: 04176 / 43311.
18-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	4 to 5 ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
19-ந் தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் பின்புறம்) ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சீத்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 23312.
24-ந் தேதி	- நாகர்கோயில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25669.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 ஆண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.

DIVINE HERBAL CENTRE
CKM

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 20 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.50/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.45/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட் பெற ரூ.37/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.





1996 டிசம்பர் 29
தாது மார்கழி 14
மலர் : 55
இதழ் : 22

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




மக்களுக்கு எதிரான மாபெரும் மோசடி!

எம்.எல்.ஏக்களும் எம்.பி.க்களும் ஊழல் தடுப்புச் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கும் வகையில் அந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றொரு புதிய வேகம் ஐக்கிய முன்னணி அரசுக்குப் பிறந்துள்ளது!

சபாநாயகர் சாங்மா தாமே இந்த யோசனையை முன்மொழிந்ததுடன், சட்டத்தை எப்படி திருத்துவது என்பது குறித்து ஆலோசனைகளும் நடத்தி வருகிறார்.

எந்த விஷயத்திலும் கட்சி சார்பின்றி, நடுநிலையாளராக விளங்க வேண்டிய சபாநாயகரே இப்படியொரு நடவடிக்கையில் ஈடுபடுவது அதிர்ச்சியூட்டுகிறது. 'முன்னாள் பிரதமர்களிடம் ஆலோசனை நடத்துகிறேன்' என்று அவர் நரசிம்மராவை சந்தித்து இதுகுறித்துப் பேசியிருப்பதோ அருவருப்பை உண்டாக்குகிறது! கிரிமினல் குற்றங்களில் விசாரிக்கப்பட்டு வரும் ஓர் அரசியல்வாதியை இவ்விஷயத்தில் கருத்துக் கேட்பது வேலிக்கு ஓணான் சாட்சி என்கிற கதைதான்!

பிரதமர் தேவேகௌடா இன்னும் ஒரு படி மேலே போகிறார்! "நாட்டில் அரசியல்வாதிகள் மட்டுமே ஊழல் பேர்வழிகள்; மற்ற அனைவரும் உத்தமர்கள் என்பது போல அக்கிரமமாகச் சித்திரிக்கப்படுகிறது. தொழிலதிபர்களின் பேச்சைக் கேட்டு ஆடும் பத்திரிகையாளர்கள் மட்டும் என்ன வாழ்ந்தார்கள்!" என்று கோபப்படுகிறார்.




தொழிலதிபர்களிடையேயும் பத்திரிகையாளர்களிடையேயும் கூட ஊழல் பேர்வழிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேரும் சட்டத்துக்கு உட்பட்டவர் களே. இன்றைய நமது எம்.எல்.ஏ.க்களையும் எம்.பிக்களையும் போல ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்குப் பெற நினைப்பவர்கள் அல்ல. கோடிக்கணக்கில் பொதுமக்கள் பணத்தை தினந்தோறும் கையாளும் வாய்ப்புப் பெற்றவர்களும் அல்ல.

எத் தரப்பினராயினும் ஊழல், லஞ்சம், ஏமாற்று, திருட்டு போன்றவற்றில் ஈடுபட்டால் தண்டனைக்குரியவரேயாவர். தற்போதுள்ள ஊழல் தடுப்புச் சட்டம் இதற்கு வழிசெய்கிறது. எம்.எல்.ஏக்களும் எம்.பிக்களும் பொது ஊழியர்கள் (public servants) அல்ல என்று அறிவிப்பதன் மூலம், அவர்களை மட்டும் பாதுகாப்புடன் ஊழல் புரிய அனுமதிப்பது அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல். மக்களுக்கு எதிரான மாபெரும் மோசடி!

நாடுதழுவிய தேர்தலில் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் பொது ஊழியர்கள் அல்ல என்று சொல்வதே முரண்பாடு!

'இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கென தனியாக சிறப்பு நீதிமன்றம் (லோக்பால் என்ற அமைப்பு) நிறுவப்படவுள்ளது; எனவே இவர்கள் தொடர்பான வழக்குகளை ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொது நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்ல அவசியமில்லை' என்கிற வாதம் அரசால் முன்வைக்கப்படுகிறது.

இது மிக விபரீதமான முடிவாகவே அமையும். லோக்பால் மசோதா இன்னமும் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அந்த மசோதா, எம்.பி., எம்.எல்.ஏக்களை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தி லஞ்ச-ஊழலை ஒடுக்கும் என்பது குறித்து எடைபோட முடியாத சூழ்நிலை யில், ஏற்கெனவே அமுலில் இருக்கும் பொதுச் சட்டத்திலிருந்து அவர்களுக்கு விலக்குத்



தருவது மிகவும் ஆபத்தான செயல்.

லோக்பால் அமைப்புகள், அரசியல் ஊழல் விவகாரங்களை இழுக்கடிக்காமல், துரிதமாக நீதி வழங்க துணை புரியலாமேயொழிய இறுதி நீதிமன்றங்களாக அவை மாறிவிடக் கூடாது.

லோக் பால் நிறுவப்பட்டு பணிதொடங்கினாலும், அதன் மூலம் நியாயம் கிட்டவில்லை என்று எண்ணுபவர்களுக்கு உயர்நீதிமன்ற / உச்சநீதி மன்றத் தீர்ப்புகளைக் கோரும் உரிமையும் வாய்ப்பும் கட்டாயம் தொடர்ந்து நீடிக்க வேண்டும்.

இல்லாவிட்டால், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற ஆதார ஜனநாயகக் கோட்பாடு ஆட்டம் கண்டு போகும்.

இதுவரை எந்த அரசியல் கட்சியுமே சபாநாயகரின் இந்த நடவடிக்கையைக் குறைகூற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சட்டத் திருத்தம் மட்டும் கொண்டுவரப்படுமே யானால் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைத்து அரசியல்வாதிகளுமே அதற்கு ஆதரவு தெரிவிக்கக்கூடும். காரணத்தை ஊகிப்பது எளிது!

சட்டத்தின் பிடியிலிருந்து முழு பாதுகாப்பைப் பெற்றுவிடும் அரசியல்வாதிகள் பின்னர் ஒருபோதும் அந்தச் சலுகையை ரத்து செய்ய முன்வரமாட்டார்கள். அரசாங்கங்கள் மாறி னாலும் ஆட்சி செய்யும் கட்சிகள் மாறினாலும் இந்த அவலம் மட்டும் அப்படியே நிலைத்து விடும். ஜனநாயகம் என்கிற பெயரில் ஒரு பெரிய கேலிக்கூத்துதான் மிஞ்சியிருக்கும்.

இந்த அபாயத்திலிருந்தும் அபகீர்த்தியிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, நல்லெண்ணமும் தீர்க்க தரிசனமும் படைத்த பொதுநல அமைப்புகளிடத்தில்தான் இருக்கிறது. அவையெல்லாம் நாட்டு நலனைக் கருதி ஒன்றுபட்டுச் செயலாற்றி, மக்களிடையே விழிப்புணர் வைப் பரவச் செய்து, அரசியல்வாதிகளின் இந்த சதித்திட்டத்தை முறியடித்தாக வேண்டும்.

பிரபலங்களின் குடும்பங்கள்: தேசிய கபடி சாம்பியன் ராஜரத்தினம்

"ரொம்ப சாதாரண குடும்பச் சூழலிலே வளர்ந்தவன் நான். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கணபதிபுரத்தில் பிறந்து வளர்ந்தேன். படித்தது அரசு பள்ளியில். தமிழ் மீடியம். பள்ளிப் படிப்போடு நிறுத்திட்டேன்!" என்று எளிமையாக தம்மைப் பற்றி கூறிக் கொண்டாலும் ராஜரத்தினத்தின் சாதனைகள் அசாதாரணமானவை. கபடியில் தேசிய சாம்பியன் – 1995ல் அர்ஜுனா விருது பெற்றவர்.

"எங்க ஊர்ப் பக்கத்திலே உள்ள கிராமங்களுக்கு நடுவே பல விளையாட்டுப் போட்டிகள் அப்பப்போ நடக்கும். எல்லாமே சிலம்பம் மாதிரி வீர விளையாட்டுகள்தான். கபடி கட்டாயம் இருக்கும். அதிலேதான் நான் கொஞ்சம் கொஞ்சமா பிரபலமானேன். என் பதினேழாவது வயசிலே மாவட்ட கபடி அணியிலும் பத்தொன்பதாவது வயசிலே மாநில அணியிலும் இடம்பிடித்தேன்."

இந்துவான இவர் கிறித்தவரான க்ளாடிஸை திருமணம் செய்து கொண்டதற்குக் காரணம், இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதா? க்ளாடிஸும் ஒரு விளையாட்டு வீராங்கனை. இது காதலுக்கு வழிவகுத்து கல்யாண முடிவை எடுக்க வைத்திருக்கிறது.

"கூடைப்பந்து, தடகளம், கபடி எல்லாவற்றிலுமே க்ளாடிஸுக்கு ஈடுபாடும் திறமையும் உண்டு. பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக்கிட்டு பரிசுகள் வாங்கியிருக்கா. அதுவும் நீளத் தாண்டுதலில் சாம்பியன். கபடிக்கு அவங்க குழுவுக்குப் பயிற்சியளிக்க என்னை நியமிச்சாங்க. அப்போ



• குடும்பத்தாரோடு...

கலைஞர் கவனிப்பாரா?...

அவ நாகர் கோயிலில் உள்ள மகளிர் கிறித்துவக் கல்லூரியில் எம்.ஏ. படிச்சுக்கிட்டிருந்தா..." என்று பழைய நினைவுகளில் மூழ்கும் ராஜரத்தினம், "எனது விளையாட்டு வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகவே க்ளாடிஸ் தமது விளையாட்டுத் திறமைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, குடும்பத்தை கட்டுக் கோப்போடு நடத்துகிறார். இதற்கு நான் அவருக்கு எத்தனை நன்றிக்கடன்பட்டிருக்கிறேன் தெரியுமா?" என்று நெகிழ்கிறார்.

தாம் பார்த்துக் கொண்டிருந்த வேலையை க்ளாடிஸ் விட்டுவிட, மற்றொரு காரணமும் உருவானதைக் குறிப்பிட்டனர் இந்த தம்பதி. அவர் கருவைச் சுமந்து கொண்டிருந்த சமயத்திலும், பல்கலைக் கழகத்தின் சார்பாக (அப்போது மதுரை பல்கலைக்கழகத்தில் வேலை) நீளத்தாண்டும் போட்டிகளில் கலந்து கொண்டே ஆக வேண்டும் என்ற வற்புறுத்தல்தான் அவர் விளையாட்டை விடுவதற்கான இன்னொரு முக்கிய காரணமாம்!

கபடி விளையாட்டு வீரரின் மனைவி என்றால் அதிகப்படி மனஉறுதி தேவையாய் இருக்கும் என்பது புரிந்தது. "ரொம்ப ரிஸ்க்கான விளையாட்டு இது. இதோ பாருங்க. இந்த மூட்டுப் பக்கம் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கு. இங்கே பாருங்க என் விரல் எலும்புகள் உருமாறியிருக்கு. என் பற்களெல்லாம் கூட தெறிச்சுப் போனதுண்டு. கை கால் எல்லாம் இழுத்துக்கிட்டு, பந்தயம் முடிந்ததும் வீட்டுக்கு என்னைத் தூக்கிட்டு வரவேண்டிய சந்தர்ப்பங்களும் அமைஞ்சதுண்டு!" என்கிறார் ராஜரத்தினம்.

"வேற யாராவதுன்னா இந்த விளையாட்டுக்குத் தலைமுழுகிடுங்கன்னு சொல்லியிருப்பாங்களோ என்னவோ. ஆனா எனக்கும் ஸ்போர்ட்ஸிலே நிறைய ஈடுபாடு உண்டுன்றதாலே நான் அப்படி நினைச்சதேயில்லை. தவிர விளையாட்டு வீரருக்கேற்ற உணவு முறை, அடிபட்டுக்கிட்டு வந்தா செய்யவேண்டிய முதலுதவி இதெல்லாம் எனக்குத் தெரிஞ்சிருப்பதும் அவருக்கு உதவியாக இருக்குது" என்கிறார் க்ளாடிஸ்.

"இவற்றை விட அவகிட்டே இருக்கிற இன்னொரு விஷயம் எனக்கு ரொம்ப பிடிக்கும். எங்களுக்குப் பொருளாதார வசதி பெரிதாக இல்லைன்னாலும், வீட்டுக்கு நிறையப் பேர், கபடி தொடர்பானவங்க வந்துக்கிட்டே இருப்பாங்க. போன வாரம் கூட வடஇந்தியாவிலிருந்து ஒரு ஹாக்கி வீரர் தம் குடும்பத்தோடு வந்து இங்கே தங்கினார். இதுபோன்ற எந்த சந்தர்ப்பத்திலேயும் அவ முகம் சுளிச்சதில்லே" என்று பெருமைப்படுகிறார் ராஜரத்தினம்.

இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். ஆறாம் வகுப்புப் படிக்கும் பெரியவள் நிவேதா ஸ்போர்ட்ஸில் மட்டுமல்லாமல் படிப்பிலும் திறமைசாலி. அடுத்தவள் ஜீவிதா நான்காம் வகுப்பு. அவ்வப்போது உடல்நல பாதிப்பு. சரியானவுடன் ஸ்போர்ட்ஸில் இறங்கி விடுவாளாம்.

கடந்த 1990ல் பெய்ஜிங்கில் நடந்த ஆசிய விளையாட்டுகளில் இந்தியா பெற்றது ஒரே பதக்கம். கபடியில் தங்கம். "நம் நாட்டுக் கொடி அங்கு அன்று ஏறியதற்கு நாங்கதான் காரணம் கிறதை நினைத்தால் இப்போதுகூட புல்லரிக்குது" என்கிறார் அந்த அணியில் உதவிக் கேப்டனாக இருந்த இவர். அந்த அணியில் இடம் பெற்ற ஒரே தென்னிந்தியரான இவர் 1994-ல் ஹிரோஷிமாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுகளில் இந்தியக் கபடி அணியின் தலைவர். மீண்டும் தங்கம்.

"அரசு கொடுத்த வீட்டில்தான் இருக்கீங்களா?' என்று என்னைப் பலர் கேட்கிறார்கள்!" என்கிறபோது அவர் முகத்தில் வருத்தம். முன்பு கலைஞர் முதல்வராக இருந்தபோது, இவர் விளையாட்டுத் திறமையை கௌரவிக்கும் முறையில் வீட்டு மனை ஒன்றை அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டது. நான்கு வருடங்கள் கழித்து, இவரது சாதனைக்காக ஒரு லட்சம் ரூபாய் தொகையுடன் ஹெச்.ஐ.ஜி. ப்ளாட் ஒன்றும் வழங்கப்படும் என்றார்கள் ஜெ.ஆட்சியில். கொஞ்ச காலம் கழித்து சில ஆண்டுகளுக்கு முன் தருவதாகச் சொன்ன மனை இந்த ப்ளாட்டுக்குள் அடக்கம் என்று சொல்லி விட்டார்களாம். இப்போதைய ஆட்சியில் மறுபடியும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எப்படியோ, எதுவுமே இன்னமும் இவரது கைக்கு வந்து சேரவில்லை என்பதுதான் கொடுமை. கலைஞராவது கவனிப்பாரா?

- அருண்சரண்யா

படம் : யோகா

என்ன ஆனார்

கம்ப்யூட்டர் பாகங்கள் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டதால் அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டு, பிறகு ஜனதாவில் சேர்ந்த, தென் சென்னை எம்.பி.யாக இருந்த டாக்டர் ஸ்ரீதரன் இப்போது என்ன செய்கிறார்?...

“எம்.பி.யாக இருந்ததால் ஐந்து வருடமாக நான் மெடிக்கல் பிராக்டிஸ் செய்யவில்லை. விளைவு? மருத்துவ உலகில் என்னென்ன புதுமைகள், முன்னேற்றங்கள், மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றே தெரியாமல் போய் விட்டது. "நான் அனுபவம் நிறைந்த அனஸ்தடிஸ்ட் என்றாலும், நான் அப்பணியில் மறுபடி என்னை ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பிக்கவில்லை" என்கிறார் டாக்டர் ஆர். ஸ்ரீதரன்.

தம் தந்தை அமர்ந்து பிராக்டிஸ் செய்த அறையை-எம்.பி.யாக இருந்தபோது, அலுவலக அறையாய் பயன்படுத்திய அறையை இப்போது, இவரும் இவரது டாக்டர் மனைவியும் கன்ஸல்டிங் ரூமாகப் பயன்படுத்துகிறார்கள். காலை ஒரு மணி நேரம், மாலை ஒரு மணி நேரம் என்று பேஷண்ட்களைப் பார்க்கிறார். குடும்ப நண்பர் ஒருவர் நடத்தி வரும் ஏழை மக்களுக்கான இலவச கிளினிக்கிற்குத் தினமும் காலை பத்தரைமணிக்குப் போகும் டாக்டர் ஸ்ரீதரன், சுமார் ஒரு மணி நேரம் அங்கே ஏழை நோயாளிகளுக்கு வைத்தியம் பார்க்கிறார்.

"கடந்த தேர்தலில் ஏன் ஜனதா கட்சி சார்பில் போட்டியிடவில்லை?"

"தி.மு.க.வுடனான கூட்டணிக்கு டாக்டர் சுவாமி முயற்சி செய்தார். கூட்டணி அமைந்திருந்தால், தென் சென்னையில் என்னை நிறுத்துவதாகவும் இருந்தார். த.மா.கா., தி.மு.க. கூட்டணி உருவானதில், தமது தேர்தல் ஸ்டிராடஜியை சுருக்கிக் கொண்டு, மதுரை பகுதியில் அதிக கவனம் செலுத்த முடிவெடுத்தார். எனவே நான் தேர்தலில் நிற்கவில்லை."

"இப்போது அரசியலிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கி விட்டீர்களா?"

"எஸ். அப்படித்தான் சொல்ல வேண்டும். டாக்டர் சுப்ரமணியம் சுவாமியின் ஜனதா கட்சியில் கூட நான் இப்போது இல்லை. என் குடும்பத்தினரும், நெருங்கிய நண்பர்களும், அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று ஆலோசனை சொன்னதன் அடிப்படையில் நான் எடுத்த முடிவு இது."

"ஐந்தாண்டுகால எம்.பி. பணி எப்படி இருந்தது?"

"வித்தியாசமான அனுபவமாக இருந்தது. ஆறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய பெருமைக்குரிய தென் சென்னைத் தொகுதியின் எம்.பி. என்கிற முறையில், நான் மற்ற பகுதிகளைவிட தாம்பரம், ஆலந்தூர் இரண்டு பகுதிகளில் தான் அதிக கவனம் செலுத்தினேன். காரணம், அவை சென்னை மாநகராட்சி எல்லைக்கு அப்பால் அமைந்தவை. எம்.பி. என்ற முறையில் என் தொகுதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாயில் குடிநீர் வசதி, ரோடு வசதி, தெரு விளக்கு வசதி என்று ஒரு சில திட்டங்களைச் செயல்படுத்தினாலும், தொகுதியின் மொத்த தேவையில் கால் பங்குதான் நிறைவேற்ற முடிந்தது."

"எப்படி கம்ப்யூட்டர் டிஸ்க் கடத்தல் விவகாரத்தில் சிக்கிக் கொண்டீர்கள்?"

"நான் முன்பும் சொல்லி இருக்கிறேன். இப்போதும் சொல்லுகிறேன். நான் அப்பாவி. அநாவசியமாய் என்னைச் சிக்க வைத்து விட்டார்கள்."

"வழக்கமாய்த் தவறு செய்து மாட்டிக் கொள்ளுகிற எவருமே சொல்லுவதுதானே இது?"

"நடந்தது எல்லாவற்றையும் நான் விளக்கமாய் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். சென்னையிலிருந்து, தமிழ்நாடு கபடி அசோசியேஷன் தலைவர் என்று



முன்னாள் எம்.பி?

அறிமுகப்படுத்திக் கொண்டு, ஒருவர் எனக்கு டெலிபோன் செய்து, ஏசியாடில் வெற்றி பெற்ற இந்திய கபடி அணி 18, அக்டோபர் 1994 அன்று டெல்லி வருவதாகவும், கபடி டீமின் கேப்டனும், கோச்சும் தமிழர்கள் என்பதால், தமிழக எம்.பி. என்ற முறையில் அவர்களை ஏர்போர்ட் சென்று வரவேற்று கௌரவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அது எனக்கு நியாயமான கோரிக்கையாகப் பட்டதால் விமான நிலையத்துக்குப் போனேன்.

"அங்கே விளையாட்டு வீரர்களை வரவேற்றபின், அவர்களுடைய லக்கேஜ்களை எடுத்து வரும் வரை நான் காத்துக்கொண்டிருந்தேன். என்னுடன் டீம் கோச்சும் இருந்தார். அப்போது கஸ்டம்ஸ் அதிகாரி ஒருவர், விளையாட்டு வீரர்களுடைய லக்கேஜுடன் கடத்தல் பொருட்கள் அடங்கிய ஒரு பெட்டியும் இருப்பதாகக் கூற, கோச், தங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று கூறி, அதிகாரிகளின் அறிவுரைப்படி அதை எழுதியும் கொடுத்தார்.

"அத்துடன பிரச்னை முடிந்ததாகவே நான் கருதினேன். இரண்டு நாட்கள் கழித்து, கஸ்டம்ஸ் அலுவலகத்திலிருந்து என்னைக் கேள்விகள் கேட்டார்கள். நான், சென்னையிலிருந்து டெலிபோன் வந்தது முதல், கோச் எழுத்து மூலம் விளக்கமளித்தது வரை எல்லாவற்றையும் விளக்கிக் கூறினேன். ஆனால், இரண்டு கள்ளக் கடத்தல் ஆசாமிகள், தங்கள் கடத்தல் பொருட்களை, ஏசியாடில் வென்று இந்தியா திரும்பும் இந்திய அணியுடன் பயணம் செய்து கடத்தினால் கஸ்டம்ஸில் பிரச்னை வராது என திட்டமிட்டுப் பயணம் செய்து, தாங்கள் கடத்தி வந்தவற்றையும், கபடி ஆட்டக்காரர்களுடைய லக்கேஜ்களுடன் சேர்த்து, வெளியில் கொண்டு வர முயன்றிருக்கிறார்கள். ஆனால், ஆட்டக்காரர்கள் சீருடையில் இருந்ததால், கடத்தல் ஆசாமிகள் தனிமைப்படுத்தப்பட்டு, மாட்டிக் கொண்டார்கள். இது பின்னால் நான் தெரிந்து கொண்டது.



மாமியாரை அறிந்த முல்லா!

முல்லாவிடம் சிலர் ஓடிவந்து, "முல்லா, உங்களுடைய மாமியார் ஆற்றில் விழுந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறார்" என்று சொன்னார்கள்.

மாமியாரைக் காப்பாற்றுவதற்காக ஆற்றின் போக்குக்கு எதிர்த் திசையில் கரையோரமாக ஓடினார் முல்லா. உடன் வந்தவர்கள் "வெள் ளத்தில் அடித்துச் செல்லப்படுபவர்களை ஆற்றின் போக்கில் போனால்தான் காண முடியும்" என்று சொன்னார்கள். அதற்கு முல்லா, "மற்றவர்களுக்கு அது பொருந்தும். ஆனால் என் மாமியார் எப்போதும் மற்றவர்கள் செய்வதற்கு எதிராகத்தான் எதையும் செய்வார்" என்று கூறிவிட்டு ஓட்டத்தைத் தொடர்ந்தார்!

— ஆர். பிரகாசம்

● ஹாலிவுட்டில் ஒரு பொருத்தமான ஜோடி. அவர்களுக்குள் கருத்து வேற்றுமையே ஏற்பட்டதில்லை என்பது பிரசித்தம்.

ஒரு நாள் கணவன் போனில் பேசினான்: ''ஹனி, நான் விவாகரத்து செய்து விடத் தீர்மானித்துள்ளேன்!''

உடனே அவள், ''என்ன ஒற்றுமை! நானும் அதே விஷயத்தைச் சொல்லத்தான் போனை எடுத்தேன்'' என்றாள்!

– சிரியுங்கள் மகிழுங்கள்' நூலிலிருந்து:
வயலூரான்



"இன்னொரு விஷயம் என்னவெனில், உண்மையான கபடி அசோசியேஷன் தலைவர், எனக்குப் போன் செய்யவே இல்லை. கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்தான் போலியாக போன் செய்திருக்கிறார். தா.பாண்டியன் எம்.பி.கூட உங்களை ஏதோ சிக்கலில் மாட்டி வைக்கச் சதி நடப்பதாகக் கேள்விப்பட்டேன். எச்சரிக்கையாய் இருங்கள்' என்று என்னிடம் கூறினார். நான் என்ன சதி என்று அறிய முயன்றும் முடியவில்லை.

"94 டிசம்பரில் பாராளுமன்றத் தொடர் முடிவடைந்ததும், நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கை சந்தித்து, என்ன பிரச்னை என்று தெரிந்து கொள்ள முயன்றேன். ஆனால் அவர் என்னைச் சந்திப்பதை தர்மசங்கடமாக நினைப்பதாய் எனக்குச் சொல்லப்பட்டபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"இதற்குள் பத்திரிகைகள், என்னை பெரிய கடத்தல்காரன் போல சித்திரித்து செய்தி வெளியிட்டதும், நான் மேலும் குழம்பினேன். நிதியமைச்சரைப் பார்க்க முயன்று முடியாமல் போகவே, சுப்ரமணியம் சுவாமியின் உதவியை நாடினேன். இதற்கிடையே அ.தி.மு.க.விலிருந்து நான் நீக்கப்பட்டேன். கட்சிக்காரர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டார்கள்.

"அதன்பின் 1995 ஜனவரி பதினோராம் தேதி நான் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டேன். இருபத்தி ஒன்றாம்தேதி பெயிலில் வெளிவந்தேன். இப்போதும் சொல்லுகிறேன். நான் அப்பாவி. என்னை யார், எதற்காக இப்படி ஒரு சிக்கலில் மாட்டி வைத்தார்கள் என்று இன்றுவரை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை"

"அந்த கேசின் இப்போதைய நிலை என்ன?"

"பத்துத் தடவை டெல்லிக்கு போய் வந்ததுதான் மிச்சம். வாய்தா வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள். இரண்டு சாட்சிகளை, கோர்ட்டில் சமர்ப்பித்து, என் மீது சார்ஜ் ஷீட் தாக்கல் செய்ய வேண்டும். பதினோரு மாதமாகியும் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

தேசாதிபதி





கொஞ்சம் நரைத்த முடியும் முறுக்கிய மீசையும் முழங்கை அளவு கதர்ச்சட்டையும் போட்டு விட்டால் சத்யராஜுக்குப் பிரத்தியேகமாக ஒரு கம்பீரம் வந்துவிடுகிறது.

வேதம் புதிதில் பார்த்த அதே கம்பீரம், அதே தேவர், அதே நாத்திகர், அதே சாதிப் பிரச்னை, அதே ரத்த கிளைமாக்ஸ்.

ஒரே வித்தியாசம் - அங்கே, தேவரின் மகன் சாஸ்திரிகளின் பெண்ணைக் காதலித்து விடுகிறான். இங்கே தேவரின் தம்பிக்கு ஒரு நாயக்கர் மகள்.

ஊர்க்காவலர் சத்யராஜுக்கும் விஜயகுமாருக்கும் இடையே பொங்கும் நட்பை மிக அழகாகக் காட்ட மெனக் கெட்டிருக்கிறார்கள். இந்த நட்பு எப்போது உரசப் போகிறது என்று கிட்டத்தட்ட கிளைமாக்ஸ் வரை எதிர்பார்த்துக் காத்திருக்க வைத்து விடுகிறார்கள்.

தம்பிக்குப் பெண் கேட்டுப் போகிற சத்யராஜ் அவமானப்படுகிற அந்தத் தருணம் கண்களில் நிற்கிறது. ஒரு வசனமில்லாமல் வெறும் கண்களால் நூறு பக்கம் பேசுகிறார் சத்யராஜ். அந்த ஆறடி உருவம் குனிந்து, கைகூப்பும்போது பளிச்சென்று ஒரு விருது தெரிகிறது.

புதிய இயக்குநர் ரத்னகுமார், பாரதிராஜாவின் பள்ளியிலிருந்து வந்தவர். கிராமம், மண்வாசனை, பாத்திர வார்ப்பு (வெள்ளை ஆடைப் பெண்களைக் கூட விடவில்லை.) எல்லாவற்றிலும் குருவை அங்குலம் பிசகாமல் பின்பற்றியிருக்கிறார்.

அந்த வெள்ளி தம்ளர் சென்ட்டிமெண்ட், அசல் கிராமத்து வில்லத்தனம், மொழி (நிறைய வெட்டு வாங்கியிருக்கிறது)-இவையும் பாரதிராஜாவிடம் கடன் வாங்கியவை.

இயக்குநரின் சொந்த சரக்காக வருவது, 'பட்டணத்து' சௌந்தர்யா. இன்னும் எத்தனை படங்களில் படித்துவிட்டு வரும் பெண்களை அடங்காப் பிடாரிகளாகக் காட்டப் போகிறார்கள்? எரிச்சல்தான் வருகிறது.

எரிச்சல் தரும் இன்னொரு விஷயம் பாடல்களும் ரீ-ரெக்கார்டிங்கும்-

உலக சினிமா என்னென்னவோ பிரும்மாண்டங்களை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இன்னமும் சாதி, அதனால் மோதல், ரத்தம் என்று புராதனமாகவே கதை பண்ணிக் கொண்டிருந்தால் எப்படி?

படம் தன்னளவில் என்னதான் நன்றாக இருந்தாலும், விஷயம் மக்களுக்கே போரடித்துவிட்டதால்தான் தியேட்டரில் நிறைய காலி நாற்காலிகள் கண்ணில் தென்படுகின்றன.

— ஆர்.பி.ஆர்.


தண்டிக்கப்பட்ட எழும்பூர் எப்படியிருக்கிறது?

'என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக எழும்பூர் தொகுதி தண்டிக்கப்படுகிறது!' என்று 28.6.92 கல்கியில் பரிதி இளம்வழுதி பேட்டியளித்திருந்தாரே... இப்போது அவரால் எழும்பூர் பலன் பெற்றுள்ளதா?'' என்று நமக்குக் கடிதம் மூலம் கேள்வி அனுப்பியிருந்தார் மதுரை அனுப்பானடியைச் சேர்ந்த இரா. கல்யாணசுந்தரம். இந்தக் கேள்வியை அப்படியே பரிதியிடம் கேட்டோம்.

"இத்தனை நினைவோடு கேள்வி கேட்ட இந்த வாசகருக்கு என்னுடைய பாராட்டுதல்கள். நான் 'கல்கி'க்கு பேட்டி கொடுத்த பிறகும் சுமார் நான்கு வருட காலம் அ.தி.மு.க. ஆட்சி நீடித்திருந்தது. நான் குடிசைகளில் இருப்பவர்களுக்கு வீடுகள் கட்டித் தர திட்டம் தீட்டப்பட்டு, 202 குடிசை மாற்று வாரிய அடுக்கு மாடி வீடுகள் கட்டப்பட்டன. 1989 - 91ல் எங்கள் ஆட்சியின்போதே வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால், யாருக்காகக் கட்டப்பட்டனவோ, அவர்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்கித் தருவதற்கு முன்பாகவே எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது.

"பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியிலும் இதற்காக நான் எடுத்த முயற்சிகள் ஏராளம். ஆனால் லோக்கல் அ.தி.மு.க. பிரமுகர்கள், பலரிடமும் காசு வாங்கிக் கொண்டு, சம்பந்தமில்லாதவர்களுக்கு இந்த வீடுகளில் வசிக்க முறைகேடாக அனுமதி ஏற்கெனவே சொன்னபடி என்னுடைய தொகுதி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டது. இது தவிர சட்டமன்றத்திலும் என் குரல் அடக்கப்பட்ட விஷயம், நாட்டு மக்களுக்கே நன்றாகத் தெரியும்.

"என்னுடைய தொகுதியில் கே.எம். கார்டன் என்றொரு பகுதி, கொஞ்சம் மழை பெய்தாலே வெள்ளக்காடாகி விடும். அங்குள்ள பாதாள வடிகால்கள் அடைபட்டுக் கிடக்கின்றன. அதைச் சுத்தப்படுத்த முடியவில்லை. காரணம், வடிகால்கள் மேல் குடிசைகள் இருப்பதுதான். ஆகவே, அந்த



• பரிதி

கொடுத்து விட்டனர். அப்போது குடிசை மாற்று வாரியத் தலைவியாக இருந்த வளர்மதியிடம் இதுபற்றிக் கேட்டபோது, 'இந்த வீடுகள் நீங்க சொல்லும் ஸ்கீமில் கட்டப்பட்ட வீடுகள் அல்ல!' என்று கதையையே மாற்றப்



முறைகேடாக ஒதுக்கப்பட்ட வீடுகள்...

பார்த்தார்! நல்ல வேளையாக ஆட்சி மாறி விட்டது.

"இப்போது நான் முழு மூச்சாக உழைத்துக் கொண்டிருப்பது இந்த கே. எம். கார்டன் பிரச்னைக்காகத்தான். யாருக்காக வீடுகள் கட்டப்பட்டனவோ, அவர்களுக்கே வீடுகளை ஒதுக்கித் தர வேண்டும். இப்போது முறைகேடாக இருப்பவர்களை வெளியேற்ற வேண்டும். இதில் கொஞ்சம் சட்டம் ஒழுங்கு பிரச்னையும் அடங்கியிருப்பதால் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. எப்படியும் 1997-ம் வருடம், கே.எம். கார்டன் குடிசைவாசிகள், அடுக்கு மாடி வீடுகளில் குடியேறி விடுவார்கள் என்பது நிச்சயம். அதன் பின்னர், அங்குள்ள பாதாள வடிகால்கள் சுத்தம் செய்யப்பட்டு அடுத்த வருடத்திலிருந்து, சிறிதளவு கூட தண்ணீர் தேங்க விடாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

"இது தவிர நான் ஏற்கெனவே பேட்டியில் சொல்லியிருந்தபடி, அம்பேத்கார் நகர் மக்களுக்கும் கொடுங்கையூரில் மாற்று இடம் ஒதுக்கப்பட்டு அவர்களும் அங்கு குடியேறி விட்டார்கள். மாநகராட்சித் தேர்தலும் நடந்து கவுன்சிலர்களும் வந்து விட்டதால் எங்களைப் போன்ற எம்.எல்.ஏக்களின் பணி குறைந்து விட்டது.

"அ.தி.மு.க. ஆட்சியின் போது எந்தத் துறை அதிகாரிகளும் அ.தி.மு.க.வினரின் மிரட்டல் காரணமாக என்னுடன் பேசுவதற்கே பயந்தார்கள். ஜெயலலிதா ஆட்சியில் மழை, வெள்ளத்தின் போது கூட, மக்களுக்கு உதவி புரிய நான் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. ஆனால் இப்போதைய மழையின் போது, மாநகராட்சி, சென்னை குடிநீர் வடிகால் வாரியம், நீர்பாசனத் துறையினர் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் கொடுத்த முழு ஒத்துழைப்பு காரணமாக, மக்களது சிரமங்களைக் குறைக்க முடிந்தது. என் தொகுதி மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளிலும், 'மக்கள் நலன்' என்று வரும்போது கட்சி பேதங்களைப் பார்க்க மாட்டார் எங்கள் தலைவர்!" என்று பெருமையுடன் சொன்னார் பரிதி.

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **கிருஷ்ணன்**

பூக்கள் நாளையும் மலரும்



பிந்துவுக்கு உலகம் விசித்திரமயமாக இருந்தது. குழப்பங்களின் மூட்டையாக, புதிர்களின் குவியலாக இருந்தது. ஜனனியைக் காதலிப்பது, அவளிடம் பேச வேண்டும் என்று மகாபலிபுரத்துக்கு அழைத்துச் செல்வது, அவசரம் அவசரமாக சாதம் பதப்படும் முன்னமே சாப்பிட விரும்புவது, அப்புறம் சமர்த்தாக அம்மாவோ, அக்காவோ கட்டிக் காட்டுகிற பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவது, இதென்ன, பலசரக்கு வியாபாரமாகிவிட்டதே, தாம்பத்யம்? அரிசி ஒரு கடையில், நெய் மற்றொன்றில், உப்பு பருப்பு இன்னொன்றிலுமா? வாழ்க்கை நுகர்ச்சி, நுகர் பொருள் கலாசாரமா, என்ன?

பிலோமினா, பிந்துவிடம் நிறையவே பேசினாள். நல்ல மாதிரியான, தெய்வத்துக்கு பயந்த மனுஷியாகத் தோன்றினாள். அம்மா காலமான பிறகு, சிரமப்பட்ட குடும்பத்தைத் தூக்கி நிறுத்தினாள், பிலோமினா. நிறைய லட்சியங்கள் கொண்டிருந்த அவள், குடும்ப நிலைமையின் பொருட்டு, வாத்தியார் உத்தியோகத்தை மேற்கொண்டாள். பசியையும் பட்டினியையும் தானேற்றுக் கொண்டு தம்பியை உருவாக்கினாள். இந்தக் கடமைச் சந்தடியில் கல்யாணம் பண்ணிக் கொள்ள மறந்து போயிருந்தாள்.

"இப்போ, பண்ணி இருக்கலாமேன்னு தோணுதுங்களா?" என்று கேட்டான் பிந்து.

லேசான புன்னகையோடு சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னாள்.

"இல்லை. தப்புன்னோ, சரின்னோ தெரியலை. ஆணோடு இருக்கிற சந்தோஷம் எனக்குச் சுத்தமா தெரியாது. அதனால, அது இழப்புன்னு சொல்றதுக்கு, இல்லை. வயசு நாற்பத்து ஆறாவது எனக்கு, தம்பிக்குக் கல்யாணம் ஆகிப் போயிட்டான்னா, நான் தனிமைப்பட்டுடுவேனோன்னு இருக்கு. ஆனா, அந்த நிலைமையையும் ஏத்துக்கத்தானே வேணும். கர்த்தர் என்ன வழியைக் காட்டுவார்னு எனக்குத் தெரியலை... எதுவானாலும், எனக்கு அது சரியாவே இருக்கும்..."

கடைத் தெருப்பக்கம் நடந்து கொண்டிருந்தான், பிந்து. தெரு பயங்கர பளபளப்பு விளக்குகளால், மேக்கப் போட்ட நாடக நடிகர்களைப் போலவே இருந்தது.

அவனுக்குப் பசித்தது. கண்ணில் பட்ட, கௌரவமாகத் தோன்றும் ஒரு ஓட்டலுக்குள் நுழைந்து, இட்டலிக்குச் சொன்னான். ஆறிப் போன இட்டலிகளும், ஊசிப் போன தேங்காய்ச் சட்னியும், மதியம் மீந்த சாப்பாட்டுச் சாம்பாரையும் கொணர்ந்து வைத்தார், சர்வர். சுற்றி இருந்தவர்களைப் பார்த்தான் பிந்து. எந்த முகச்சுளிப்பும் இன்றி, சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், மக்கள். எதையும், கொடுக்கப்படும் விதத்தில், அனுபவிக்கத் தயாராகி விட்டிருந்தார்கள் அவர்கள். நாலாம் தர தேயிலை, இரண்டாம் தரக் காப்பி, இரண்டாம் தர உணவு, மூன்றாம் தர வாழ்க்கை... என்று கீழ்ப்படியையே உச்சமாகக் கொண்டு ஒழுகும் மக்கள். அவனுக்கு வருத்தமாக இருந்தது. எதன் உற்பத்தி இது? சமூகத்தில் இந்த கோர முகம், கோரைப் பற்கள், ஆறாவது விரல்கள் எங்கிருந்து பிறந்தன?

பிந்து, காலனியை நோக்கி நடக்கத் தொடங்கினான். ஜனனியிடம் என்ன சொல்வது என்று குழப்பமாக இருந்தது அவனுக்கு. ஜனனிக்கு இதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவம்

இருக்குமா?' இருக்க வேண்டும். இல்லையென்றால் என்ன சொல்வது.'

'ஜனனி, மனசைத் தேற்றிக் கொள். ஒரு பெண்ணின் காதல் என்பது, ஒருத்தனோடு முடங்கிப் போவது அல்ல. அவன் நிராகரித்தாலும், நீ அவனை நிராகரித்தாலும், காதல் தொடர்ந்து கொண்டே

9



இருக்கும், கரையை நோக்கி வருகிற கடல் அலையைப் போல. தகுதி வாய்ந்த ஆண் மகன்கள், உலகில் தீர்ந்து போய்விட வில்லை. மலர்கள், நித்தம் நித்தம், நேற்றும், இன்றும் மாலையும் மலர்ந்து கொண்டே இருக்கும். மனசை, புதுசாக, குழந்தையுடையது போல் வைத்துக் கொள். இவனை விடவும் மேலான, சிறந்த, அன்பு மனம் கொண்ட ஆண் மகன்கள் கிடைப்பார்கள். அவர்களில் ஒருத்தனை நீ தெரிவு செய்து கொள்ள லாம். வீடல்ல வாழ்க்கை. வீட்டுக்கு அப்புறம் தெரு, தெருவுக்கு மேல் ஊர். ஊருக்கு மேலே நகரம். அதற்கு மேலே நாடு. அப்புறம் கண்டம்... உலகம்... வானம்... நட்சத்திரங்கள்... பிரபஞ்சம்... கண்ணீர் சிந்துவதை உடன் ஒழியுங்கள். அழக் கூடியவர்கள் பெண்கள் அல்லர். கண்ணில் தூசு விழுந்தால் மட்டுமே பெண்கள் அழ வேண்டும்...'

பிரபஞ்சன்

பிந்துவுக்கு ஒரு விஷயம், இன்னும் புரியத்தான் இல்லை. இப்படி, விட்டேற்றியாக இருப்பவன், ஜனனி வீட்டுக்கே வந்து, சுந்தா சாருக்குப் பழம் கொடுத்துச் சென்றது, எப்படி? ரெஸ்டாரெண்டுக்கு வரச் சொன்னது எதற்கு? அந்த நேரத்தில் அவன் இல்லாமல் போனது ஏன்?

அனுவின் அம்மா, மகளைப் பார்க்க வந்திருந்தாள். மகள், பிள்ளையாண்டு இருக்கிறாள் என்று ஆசை ஆசையாக, பட்சணங்கள் பண்ணி, கூடை கூடையாகப் பழம், பூ என்று கொணர்ந்திருந்தாள். அம்மா கொணர்ந்த பட்சணங்களைக்

கண்கள் விரியப் பார்த்தாள், அனு. தேன்குழல், பொரி விளங்காய் உருண்டை, கை முறுக்கு, சீடை, இனிப்புப் பணியாரம், தட்டை என்று 'டின், டின்'னாக அம்மா வீட்டு சீர். அத்தோடு, காஞ்சிபுரம் பட்டு, பெங்களூர், ஆந்திரா சுங்கடி என்று வகைக்கு ஒன்றாகப் புடைவை. பெண்ணுக்காக, அம்மாவே அன்று மதியம் சமைத்தாள். கடலைப் பருப்புருண்டை குழம்பும், காராக் கருணை வறுவலும், பூண்டு ரசமும், பெண்ணுக்குப் பிடிக்குமே என்று பண்ணிப் போட்டாள். சாப்பிட்டு முடித்து, சாவகாசமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் அம்மா சொன்னாள்.

"குழந்தை இத்தனை மாசங்களுக்கு, வயிறு இப்படிச் சாய்ந்ததுன்னா, ஆம்பிளைப் பிள்ளையாத்தான் இருக்கும் சந்தேகம் இல்லை. நம் பரம்பரையில் தலைச்சன்தான் வழக்கம். எல்லாம் நல்லபடியாகவே இருக்கட்டும்."

அனுவுக்கு, அம்மாவிடம் சொல்ல நிறைய விஷயங்கள் இருந்தன. தன் கணவனைக் குறித்து அவள் நிறையவே பேச வேண்டி இருக்கிறது.

"எப்படி இருக்கார், உன் வீட்டுக்காரர்?" என்று அம்மா கேட்டதும், அவள் கொட்டத் தொடங்கினாள்.

"அவருக்குக் கல்யாணமே தேவை இல்லை, அம்மா. அவருக்கு வயசு என்னமோ, இருபத்து ஆறுதான். மனசுக்கோ, அறுபத்து ஆறு. தினம் தினம், ராத்திரி எட்டு மணிக்கு மேலே வரு கிறார். என்ன என்றால், ஆபீசில் வேலை என்கிறார். இவருக்கு மட்டும் என்னதான் வேலையோ? இதோ, எதிர்வீட்டிலதான், அர்த்த நாரின்னு ஒருத்தர் இருக்கிறார். இவரைப் போலத்தான் அவரும். அவருக்கு மட்டும், பணம் கொத்துக் கொத்தாய்க் காய்க்கிறதே. எப்படி? நாலு அலமாரி, அத்தனையிலும் பட்டுப் புடைவையாக வாங்கி அடுக்கினாள் வள்ளி. விதம்விதமாக எத்தனை நகை. நெக்லஸ் என்ன, மாலை என்ன, தொங்கல் என்ன, மாட்டல் என்ன. ம்... எல்லாம் என் விதி. கேவலம், ஒரு கலர் டீ.வி. உண்டா? யாராவது வீட்டுக்கு வந்தால், 'என்ன, பிளாக் அன் ஒயிட் தானா' என்று கேட்கிறச்சே, நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் என்று இருக்கு. சாமியார்... எங்காவது இமய மலையில் ஒரு குகையில் தாடி மீசையோடு இருக்க வேண்டியவர், பேண்ட் சட்டை போட்டுக் கொண்டு ஆபீசுக்குப் போகிறார்... உப்பு இல்லாமல் போட்டாக் கூட சாப்பிடுகிற சாமியார்."

பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது, அனுவுக்கு. அழுவதைக் கண்டு மனம் பதறிப் போனாள், அம்மா. அவள் மனம், பயங்கரமான கற்பனைகளைச் செய்யத் தொடங்கியது.

அவள் மகள், ஒரு கிளி. அதை வளர்த்து ஒரு பூனையிடம் கொடுத்து விட்டாள். அழகு மகளைப் பாழும்கிணற்றில் தள்ளி விட்டாள். அவள்தான், அனுவை எப்படி வளர்த்தாள். குழந்தை இல்லையே என்று, மேலைக் காவேரி முண்டக்கண்ணி அம்மன் கோவிலில் மண் சோறு தின்று அனுவைப் பெற்றாளாக்கும். போகாத ஊருண்டா? சுற்றாத கோவில் உண்டா? வேண்டாத தெய்வங்கள் உண்டா? "தட்டில் சோறு போட்டால் தட்டு வந்து சேருமின்னு, தன் கையே தட்டாக்கித் தங்கமாக வளர்த்தேனே! இலையில் சோறு போட்டால் இளப்பம் வந்து சேருமின்னு, எண்ணத்தில் பருப்பிட்டு, நெய் போட்டு வளர்த்தேனே! வாழைக் குருத்துக்கு வன்கொடுமை வரலாமா? தங்கத்தால் தேர் பண்ணி, வைரத்தால் கயிறு பண்ணி, முத்தால் வடம் இயற்றி, பச்சை மாணிக்கப் படுதாவும் செய்வித்து, என் தங்கத் தேரை தரையிலே இழுத்ததென்ன? கண்ணீரின் அர்த்தத்தை என கண்மணிதான் அறிவாளா? துன்பத்தின் அர்த்தத்தை என் தோகை மயில் அறிவாளா? என்ன என்னமோ நினைச்சு என்பாட்டில் நான் இருந்தேன். என் உயிரைப் போல் வளர்த்து, எமனுக்குத் தந்தேனே..."

அம்மா மாலை மாலையாகக் கண்ணீர் வார்த்தாள். அன்றும் இரவு எட்டு மணிக்குத் திரும்பினான், சபேசன். மாமியாரைப்

ஜாலி போட்டி - 18 முடிவு

1. மழை முத்து முத்து பந்தலிட்டு
2. தேன்சிந்துதே வானம்
3. அந்தி மழை பொழிகிறது
4. துளித்துளி துளித்துளி மழைத்துளி
5. மேகங் கருக்குது மழை வரப் பாக்குது.

– இவைதான் அந்த ஐந்து பாடல்களின் முதல் வரிகள்.

சரியான விடை எழுதியவர்களுள் குலுக்கலில் தேர்வாகி ரூ.5000 பரிசு பெறும் வாசகர்:

சு. சுதர்சன்,
த/பெ. எம். சுப்ரமணியன்,
3/32ஏ. இருங்களூர் (அஞ்சல்),
திருச்சி மாவட்டம் - 621105

பார்த்தாள்.

"வாங்க... எப்போ வந்தீங்க?" என்றான்.

"காலமே, பத்து மணிக்கு."

"மாமா சௌக்யமா?"

"இருக்காங்க."

கதவுக்குச் சற்று வெளியே வந்தும் வராமலும், பதில் சொன்னாள், அவள். மருமகனுக்கு முன்பாகவும் வெளிப்படையாக நிற்கக் கூடாது என்று ஒரு வழக்கம் இருந்து கொண்டு உள்ளதே. சபேசன் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான். அம்மா, இருக்கிற தைரியத்தில், அல்லது அவனுக்குத் தெரியவேண்டும் என்கிற எண்ணத்தில், அது சொன்னாள்.

"என்ன இத்தனை நாழி?"

"வேலைதான். வேறு என்ன" என்றான் சபேசன் அலுப்போடு.

"அர்த்தநாரிக்கு மட்டும் வேலை சீக்கிரம் முடிகிறதே."

"அர்த்தநாரிக்கு வேறு வேலை. வேலைக்குச் சம்பந்தம் இல்லாத வேலை."

"அது மாதிரி நீங்களும் இருக்கிறதுக்கு என்ன?"

"மான் என்றால் ஓட வேண்டும். பாம்பு என்றால், ஊர்ந்து போக வேணும். நான் மான். ஒவ்வொருவரும் ஒரு வார்ப்பு. நான் அவன் இல்லை."

"கொஞ்சம் புரியும்படியாத்தான் பேசுங்களேன். அவர் சௌகரியமாகத்தானே இருக்கார். என்ன குறைஞ்சுட்டார்."

"உனக்குப் புரியாது. அது ஒரு சமுத்திரம். அரசாங்கத்தில் மூன்று வகையான ஆட்கள் இருக்கிறார்கள். ஒரு வகை வேலை செய்யும். ஒரு வகை வேலை செய்வது மாதிரி நடிக்கும். ஒருவகை எதுவுமே செய்யாது."

"நீங்க வேலை செய்யறீங்களா இல்லையான்னு முதல்வர் பார்க்கிறாங்களாமா?"

"நான் பார்க்கிறேனே! என்னை நான் பார்க்கிறேனே, அனு."

அவன் சொன்னான். சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த அனுவின் அம்மாவுக்கு 'சொரேல்' என்றது. என்னது இது தத்துப்பித்தென்று பேசுகிறார் மாப்பிள்ளை? ஐயோ. பைத்தியத்துக்கா அவள் பெண்ணைக் கொடுத்தாள். அவரை அவரே பார்க்கிறாராமா? இது என்ன, பிள்ளையார், பிள்ளையாரைப் பார்க்கிறார் என்கிற மாதிரி என்ன பித்துக்குளித்தனம், இது? இரவு ஒன்பது மணிக்கு மேலே, சபேசன் குளிக்கச் சென்றான். அம்மா கேட்டாள்.

"என்னடி இது. இத்தனை நாழிக்கு மேலே குளியல்?"

"அழுக்குப் போகணுமாம். அரசாங்க அழுக்கு. தெனம், ராத்திரி பத்து மணிக்குக்கூட அவருக்குக் குளிச்சாகணும்."

குரலை அடக்கிக் கொண்டு, அம்மா



"ஒரு மாசமா என் மனைவி என்கிட்டே கோபமே படல!"

"ஆச்சரியமாயிருக்கே? எப்படி சாதிச்சீங்க?"

"கோபப்படுறப்ப முகத்துல சுருக்கம் விழுதுன்னு சொன்னேன்!"

– அம்மை தேவா



"உங்களை அரசியலிலேர்ந்து ஓரம்கட்ட சதி நடப்பதா எப்படிச் சொல் நீங்க தலைவரே?"

"வருமானவரி பாக்கி உள்ளவங்க பட்டியலில் என் பெயரைக் காணோமே!"

– வரிந்துஸ்தானியன்



"உங்கள் இளமையின் ரகசியம் என்ன?"

"எங்கம்மாதான்!"

"என்னது உங்கம்மாவா?"

ஆமாம்! ஐம்பது வயசு ஆகிய எங்கம்மா தனக்கு முப்பது வயசுன்னு சொல்றாங்களே அதுதான் காரணம்!"

– ஆலங்குளம் அருள்

சொன்னாள்.

"சரியான பித்துக்குளி மாதிரி இருக்கே. என்னடீது?"

"அதில் என்ன சந்தேகம். தேடித் தேடி எனக்குக் கட்டி வச்சியே."

கண்ணைக் கசக்கிக் கொண்டாள், அனு.

"உனக்கு சாமர்த்தியம் போறலை. ஆம்பிளையைக் கைக்குள்ளாக வச்சுக்கிற சாமர்த்தியம் உனக்குப் போறலை. உன் அப்பாவும், தொடக்கத்தில் ரொம்ப முரடு. முரடுன்னா, சப்பாத்திக் கள்ளி முரடு, முள் முள்ளா. அவரையே நைச்சியம் பண்ணி, 'தாண்டுடா ராஜான்னா' தாண்டற குரங்காட்டம் கடைசி வரைக்கும், ஆட்டி வச்சேனே! நாமதாண்டி நைச்சியம் பண்ணிக்கணும். அந்தரங்கமா இருக்கறச்சே, இதையெல்லாம் அவருக்கு உணர்த்தும்மா... அவர் ஆசைப்பட்டு, யாரவன் அர்த்தநாரியா, அவனை ஜெயிக்கணும்னு இவரை நீ தூண்ட வேண்டாமோ?"

"இது, ஜடம்மா. ஜடம். என்னத்தைத் தூண்டறது? நெருப்பைத் தூண்டலாம். கரியை என்ன பண்ணலாம்?"

"உப்பு போட்டுக்கிறாரோ, இல்லையோ, சாப்பாட்டுக்கு?"

"அதுல குறை சொல்ல முடியாது. ஊறுகாய் மாதிரி, உப்பைத் தொட்டுக்குவார், பல சமயங்களிலே."

"உப்பு இருக்கிற இடத்துல, நீ இருக்கணும்."

"போம்மா, என்னை வெக்கப் படுத்தாதே" என்றாள் அனு.

சுந்தா சார், அப்போதுதான் உறங்க ஆரம்பித்து இருந்தார். உணவு தட்டத்தைக் கழுவி வைத்துவிட்டுத் திரும்பிய தேவகி, ஜனனி என்னமோ எழுதிக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

"என்னடி எழுதியாறது?" என்றாள் தேவகி.

"கடிதம்" என்று இடதுகையால் தலையைச் சொறிந்து கொண்டு சொன்னாள் ஜனனி. அப்போதுதான் ஜனனியின் நைட்டியின் மேல் பட்டன்கள் பிரிந்து, திறந்து இருப்பதைக் கண்டாள் தேவகி..

"மேல் பொத்தானைப் போடு. திறந்து கிடக்குது. இப்படித்தான், மூட வேண்டியது எது திறக்க வேண்டியது எதுன்னு தெரியாமே, கிடந்து தடுமாறரே?"

சுருட்டென்று கோபம் வந்தது, ஜனனிக்கு.

"சுற்றி வளைச்சுப் பேசாதே. நேருக்கு நேரா கேளு."

"ஆமாம். அந்த அழகைப் பளிச்சுன்னு கேக்கணுமாக்கும். அந்தப் பையனை அப்புறம் பார்த்தியா? என்ன சொல்றான். பாக்காமே விட்டது உறவுன்னு, அவனையும் தொலைச்சுட்டு நிக்காதே."

டியூப் லைட்டை மோதி மோதிச் சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தது ஒரு தும்பி. 'முட்டி முட்டிப் பால் குடிக்கும் குழந்தை'. ஜனனிக்குச் சிரிப்பு வந்தது.

"என்னடி இளிப்பு. எனக்கு இளிப்புதான் பதிலா?"

"இல்லை. ஒரு கவிதை ஞாபகத்துக்கு வந்தது."

"கவிதை, தாலி கட்டாது. புடைவை எடுத்துக் கொடுக்காது. காலனி, வழிச்சுட்டுச் சிரிக்குது. அதுக்கு வழியைப் பாரு. ஈஸ்வரா. என்ன குடும்பம்டா இது? அகத்துக்காரன், ஆகாயத்தைப் பார்க்கிறது. பொண்ணு தும்பியைப் பார்க்கிறது."


ஜனனி எழுதிக் கொண்டிருந்தாள்.

"அவனுக்குத்தான் கடுதாசியா?"

"ஆமாம்."

"அவன் வீட்டு பெரிய மனுஷாளை பேசச் சொல்லு. ஊர் சிரிக்கப்பிட்டது. இல்லைன்னா, அமுக்கமா, வேற பையனைப் பார்க்கலாம். என் தலையெழுத்து."

"எனக்கு எந்த நாயும் வேணாம். ஆல்பர்ட், வந்தா வரட்டும். இல்லைன்னா போறான்.



எவனண்டை யும் நான் கை ஏந்த முடியாது."

''உன்னை வேற எவனும் கட்டிப்பானா?"

"ஏன் மாட்டான்? இல்லாட்டி இப்படியே இருந்துடறேன். என்ன போச்சு கல்யாணம்தான் பெண்ணுக்கு, கடைசிச் சாதனையா?"

தேவகி, தட்டை பொட்டென்று சப்தம் வர மேசை மேல் போட்டாள். கதவு தட்டப்பட்டது. ஜனனி, அம்மாவிடம் சொன்னாள்.

"ஆல்பர்ட் என்னை மோசம் பண்ண மாட்டான்."

கதவைத் திறந்தாள். பிந்து நின்று கொண்டிருந்தாள்.

"ஜனனி. வா. உங்கிட்டே கொஞ்சம் பேசணும்."

"நீங்க போங்க. பின்னாலேயே வர்றேன்."

தேவகி உள்ளிருந்தபடியே கேட்டாள், சேலை திருத்தியபடி. "யாருடி?"

"வள்ளி அக்கா."

"என்னவாம்?"

"அந்த காலேஜ் பெண் வந்திருக்காளாம். என்னோட பேசணுமாம்."

"போய், சீக்கிரமா திரும்பு."

ஜனனி புறப்பட்டாள், பிந்துவின் வீட்டுக்கு.

(தொடரும்)

மல்லிகைத் தோட்டம் முதல் மீன் பண்ணை

"ஒன்னும் சிரமமே இல்லை... ஒரு டேப் ரெகார்டரையோ இல்லே வேறே ஏதாவது மெஷினையோ எடுத்துப் பிரிச்சுப் பார்த்தால் போதும். அதிலே விஷயம் தெரிஞ்சுக்கலாம். ஒரு மிஷின்தான் அதிகபட்சம் வீணாகும்.'' என்கிறார் சமரசம்.

பள்ளிப் படிப்பைப் போனால் போகிறது என்று மெட்ரிக்கோடு முடித்துக் கொண்ட சமரசத்தின் ஆர்வம் திரும்பியது சின்னச் சின்ன ஆராய்ச்சிகளில். அப்பாவின் ஆதரவு முழுமையாகக் கிடைத்தது. "எதையாவது பண்ணு... எதைப் பண்ணினாலும் நாட்டுக்குப் பயன்படுகிற மாதிரி பண்ணு!'' என்றார் அப்பா.

சமரசத்தின் அப்பா மிகவும் யதார்த்தமான மனப் போக்குடையவர். பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பது முதல் அவரிடம் ஓர் தனித் தன்மை உண்டு. தெலுங்கில் சில நூல்களை எழுதியிருக்கிறார். சமரசத்தின் ஒரு தம்பியின் பெயர் நாஸ்திகம். தங்கைகளுக்குப் பெயர் ஹலம் (கலப்பை), கலம் (பேனா), பலம் (வலிமை). பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டு விட்டு அவர்களின் வளர்ச்சியைக் கவனிக்கும் தந்தை.

மெட்ரிக் முடித்த பிறகு நான்கு ஆண்டுகள் மல்லிகைத் தோட்டம்தான். சாதனை அளவாக ஒரு கிலோ விளைந்த இடத்தில் மூன்று கிலோ விளைவித்துக் காட்டினார். எல்லாம் அனுபவ அறிவுதான். எண்பது வரை கவனித்து வந்த மல்லிகைப் பண்ணையிலிருந்து கவனம் திரும்பியது வண்ண மீன்கள் வளர்ப்பில். அது ஒரு பொழுது போக்கான முயற்சி.

அப்புறம் முழுமையாகக் கவனம் சென்றது 'மீன் சாகுபடி'யில். முறைப்படி மீன் குஞ்சுகளை வளர்த்து விற்பனை செய்வது என்பது தென் மாநிலங்களிலேயே ஆந்திராவில்தான் உண்டு. 81-82 ஆம் ஆண்டில் தாமே ஒரு சிறு குட்டை அமைத்துத் தொடங்கினார்.

மீன் வளத்துறையில் விசாரித்து இரண்டு வகை மீன் குஞ்சுகளை வாங்கி வந்து போட்டார். குன்றத்தூர் அருகில் இருந்த அரசாங்கப் பண்ணை அது. அந்த மீன்கள் மிகவும் மந்தமாக வளரக்கூடியவை. நல்ல தீவனங்கள் எல்லாம் போட்டும் சரியாக வளரவில்லை. 'இதன்மூலம் ஏற்பட்ட நஷ்டத்தில் கிடைத்தது நல்ல அனுபவம்' என்கிறார் சமரசம்.

ஆந்திரா, மேற்கு வங்கம் எல்லா இடங்களிலும் விசாரித்து, அலைந்து வெளிநாட்டு மீன்வகைகள் உட்பட ஆறு இனக் குஞ்சுகளைக் கொண்டு வந்தார். அவை மிகவும் விரைவான வளர்ச்சியடைந்தன. இருபத்தைந்து சென்ட் இருந்த மீன் குட்டை, இரண்டரை ஏக்கர் அளவுக்கு விரிவடைந்தது.

அப்போது காஞ்சிபுரத்தில், 'மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை' என்பதாக ஓர் அமைப்பை அரசு தொடங்கியது. அது தொடங்கப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே சமரசம் மீன் குஞ்சு வளர்ப்பைத் தொடங்கியிருந்தார்.

ஆகையால் அந்த முகமைக்குத் தேவைப்படும் மீன் குஞ்சு வழங்குவதில்கூட இந்தத் தனியார் அமைப்பு உதவியிருக்கிறது. தவிர, அரசு மீன் வளத்துறையைச் சேர்ந்த கோவிந்தராஜ் என்கிற அதிகாரியும் சமரசத்தின் மீன் குட்டையைப் பார்வையிட்டு, மீன் குஞ்சு வளர்ப்புக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்.

தொடர்ந்து 'ரோஹூ' என்கிற வங்காளி இனம், பில்கெண்டை, வெள்ளிக்கெண்டை போன்ற சீன வகைகள் என்று கொண்டு வந்து உற்பத்தியை விரிவுபடுத்தினார். இருபது மில்லியன் அளவுக்கு ஆண்டு உற்பத்தி உயர்ந்தது. ஆந்திரா தவிர மகாராஷ்டிரா, குஜராத், டெல்லி என்று பரவியது.

ஒருமுறை ஜெர்மனியிலிருந்து நிபுணர் குழு ஒன்று தமிழ்நாட்டு மீன் உற்பத்தி நிலையங்களைப் பார்வையிட வந்தது. அப்போது மீன் வளத்துறையில் ஆணையராக இருந்த சாந்தா ஷீலா நாயர், அந்த நிபுணர் குழுவை, சமரசம் நடத்திய பண்ணைக்கே அழைத்து வந்து காட்டினாராம்.

இந்தக் கால கட்டத்தில் தைவான், தாய்லாந்து போன்ற இடங்களுக்குப் போய் இவருடைய உறவினர் ஒருவர் நீலாங்கரையில்

எதிர்நீச்சல்:

ஜி.எஸ்.சமரசம்

வரை...

இறால் பண்ணை போட்டார். அது பற்றிய விவரங்களை எல்லாம் சேகரித்து, புஷ்பகிரியிலேயே ஒரு பண்ணையைத் தொடங்கினார் சமரசம்.

மழை பெய்யும்போது உப்பு நீரும் நல்ல ஆற்று நீரும் கலக்கும் இடங்களில்தான் இறால் நன்கு பொரியும் என்பது தெரிந்தது. அதனால் அந்த நீர் கூடும் இடங்களில் போய் வலை போட்டுப் பிடித்துக் கொண்டு வந்த குஞ்சுகளை புஷ்பகிரியில் வளர்த்



ததில் நஷ்டமே ஏற்பட்டது!

எனவே அங்கேயுள்ள நல்ல நீரோடு சேர்க்க வேண்டும் என்பதற்காகப் பெரிய பெரிய பீப்பாய்களில் கடல்நீரை வேனில் ஏற்றிக் கொண்டு வந்தார்.

ஒரே ஒரு இறால் குஞ்சையாவது பிழைக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். கண்டது தோல்விதான்! நாற்பத்தைந்து நாட்களிலேயே குஞ்சுகள் செத்துப் போய் விடும்!

மனம் தளராமல் ஒவ்வொரு கட்டத்தையும் பற்றி ரிப்போர்ட் எழுதி வைத்துக் கொண்டு தேவையான உரம், தீவனம் எல்லாம் போட்டுப் பாடுபட்டதில் கடைசியாக வெற்றி கிடைத்தது! தேறியவை எண்ணூறு இறால் குஞ்சுகள். இதுதான் சமரசத்துக்குத் தைரியம் ஊட்டியது.

அடுத்த சோதனையில் இன்னும் நிறைய உற்பத்தியானது. கடற்கரையை ஒட்டியதாக நல்ல இடம் தேடியதில் பாலவாக்கத்தில் இடம் கிடைத்தது. ஃபைபர் கிளாஸில் தொட்டிகளை வடிவமைத்தார். ஒன்றரை டன் கொள்ளளவுள்ள இருபது தொட்டிகள். இவற்றில் மீன்குஞ்சு உற்பத்தி. இன்னும் இதை விரிவுபடுத்த எண்ணியதில் கானத்தூரில் கடலோரமாக ஒரு பண்ணை அமைந்தது. 'ஆக்வா மாட்ச்சரீஸ்' என்கிற பெயரில் உயர்தரமான நன்னீர் இறால் குஞ்சுகளின் உற்பத்தியில் வெற்றி கிடைத்தது.

சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது என்றெல்லாம் சொல்லி இறால் பண்ணைகளுக்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. அண்மையில்கூட இந்தப் பண்ணைகளை வரும் மார்ச் மாதத்தோடு அழித்து விட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது.

இதனால் மனம் மிகவும் நொந்து போயிருக்கிறார் சமரசம். பதினைந்து ஆண்டுகளாக எந்தவிதமான பட்டப் படிப்பும் இல்லாமல் தாமே முன் வந்து கற்றுக் கொண்ட தொழிலின் எதிர்காலம் என்ன ஆகும்?

"தமிழ்நாட்டில் நிலம் நிறையவே இருக்கிறது. விவசாய நிலங்களைத் தொடவே வேண்டாம். ஒன்றுக்குமே உதவாமல் கிடக்கும் கட்டாந் தரைகளைச் செம்மைப்படுத்தி இந்த இறால் பண்ணைகளை உருவாக்கலாம்!'' என்கிறார்.

— சுப்ர.பாலன்,

படம் : யோகா

தீ நாக்கு

ராஜ்கோகுல்

முனீஸ்வரி முகத்திலும் மார்பிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு ஓங்காரமாக ஓலமிட்டுக் கதறினாள். புலம்பினாள்.

"பாவிச் சிறுக்கி, இன்னிக்குப் பாத்து டி.வி. முன்னாடி ஒக்காந்து தொலைச்சுட்டேனே..."

கண்ணுக்கெட்டியவரை கரும்புகை மண்டலம் வானை நிறைந்திருந்தது. தீயின் நெடிய 'கவாலை நாக்கு' தனக்கெட்டிய பொருளையெல்லாம் சுருட்டி இழுத்து விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது. அப்பிரதேசமே வெப்பக் காடாகியிருந்தது.

தீயில் விழுந்து தன்னையும் மாய்த்துக் கொள்ள ஓடியவளை யாரோ நாலைந்து பேர் பின்னால் இழுத்துக் கொண்டு போய் தூரத் தள்ளி உட்கார வைத்தனர். மூச்சிரைக்கக் கத்தியவள் சில விநாடிகளில் மயங்கிச் சாய்ந்து விட்டாள்.

முனீஸ்வரிக்கு யதேச்சையாகத்தான் அன்றைக்கு அந்த ஐடியா தோன்றியது. உடனே செயலில் இறங்கி விட்டாள்.

ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பெரியவள் ஸ்ரீதேவியை அழைத்து ஒரு கரித் துண்டை கையில் திணித்தாள். அடித்த கண்ணாம்பு பாதி மறைந்து பழுப்பாகியிருந்த குடிசைச் சுவரில் 'சைக்கிள் ஸ்டாண்ட்' என்று எழுதச் சொன்னாள்.

மாடர்ன் ஆர்ட் போல அச்சிறுமி 'சைக்கில் சாண்ட்' என்று சுவரில் எழுத, அன்று தான் அக்குடிசையின் சுற்றுப்புறம், சைக்கிள் பாதுகாக்குமிடமாக மாறியது.

அது நகரத்தின் புறநகர்ப் பகுதி. நான்கு சாலைகள் சந்திக்குமிடம். தஞ்சை நெடுஞ்சாலைக்குத் தெற்குப் புறம் கிடந்த பத்து ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஆக்ரமித்து இருநூற்றுக்கு மேற்பட்ட குடிசைகள். ரிக்ஷா ஓட்டுபவர்கள், தினக் கூலிகள், பக்கத்து பங்களாக்களில் வீட்டு வேலை செய்பவர்கள், ரேஷன் கடை கியூவில் நிற்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்று ஒரு அடித்தட்டு மக்கள் கூட்டம். 'உங்கள் குடிசைகளை உங்களுக்கே பட்டா போட்டு குடுக்க அண்ணன் ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கார்' என்று கூறிக் கொண்டு இதுவரை நாலைந்து பெருச்சாளிகள் 'செலவுக்கு'ப் பணம் வசூல் செய்து ஏப்பம் விட்டு விட, ஏமாந்து போயிருந்த ஏழை ஜாதியில் ஒரு குடும்பம்தான் அய்யப்பன்-முனீஸ்வரியுடையது.

இரண்டாவதாக சரிதா பிறந்த போதே, தர்ம ஆஸ்பத்திரியில் பிரசவம் பார்த்த டாக்டர் 'போதும்மா... ஆபரேஷன் பண்ணிக்கோ'ன்னு தான் சொன்னார். அவளும் அதைத்தான் முடிவெடுத்திருந்தாள். ஆனால் அய்யப்பன் ஒத்துக் கொள்ளவில்லை!- ஆண் வாரிசு வேண்டுமாம்- ஊருக்கு ஊர் வாங்கிக் குவித்திருக்கும் பொல்லாத சொத்தையெல்லாம் அனுபவிக்க!

அவனுடைய ஆசையும் நிறைவேறத்தான் செய்தது. குலதெய்வத்தை நினைத்து 'காளிராஜ்' என்று பெயர் சூட்டி பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். இரண்டு பேரும் பாசத்தைப் பொழிந்தார்கள். ஒன்றரை வயதாகியும் அவளிடம் தான் பால் குடித்தான். சேலையில் தொட்டில் கட்டி மணிக்கணக்கில் தாலாட்டுப் பாடுவாள்.

அய்யப்பன் ஒரு சினிமாப் பித்து. (அவளும் தான்) ரிக்ஷா ஓட்டிக் கிடைக்கிற காசில் ஓனருக்கு வாடகை கொடுத்தது போக மீதியில் பாதியை சினிமாவுக்கும் மறுபாதியை சாராயத்துக்கும் கொடுத்து விட்டால் குடும்பத்துக்கு?...

அவளும் இரண்டு பர்லாங் தள்ளியிருந்த 'கவர்மெண்ட் குவாட்டர்ஸ்' வீடுகளுக்கு வீட்டுவேலை செய்யப் போனாள். தெரு பைப்பிலிருந்து வீடுகளுக்குக் காவேரித் தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். அதில் கிடைத்த பணமெல்லாம் எந்த மூலைக்கு?- ஐந்தாவது படித்த பெரியவளுக்கும், மூன்றாவது படித்த சின்னவளுக்கும் நோட்டுப்



புத்தகமும், துணிகளும் வாங்குவது ஏகமாகச் செலவானது.

– அந்த நேரத்தில் தான் 'சைக்கில் சாண்ட்' உருவெடுத்தது.

'நாலு ரோட்'டுக்குத்தெற்கே நீண்ட தூரத்திற்கு முளைத்திருந்த விஸ்தரிப்புப் பகுதிகளுக்குப் போதிய பஸ் வசதி கிடையாது. அங்கிருந்து நகரத்திற்கு வேலைக்குச் செல்பவர்கள் சைக்கிளில் அல்லது டூவீலரில் நாலு ரோட்டிற்கு வந்து விட்டால், இங்கிருந்து பஸ் பிடித்து ஆபீஸ் போக வசதியாக இருக்கும்.

இச்சூழ்நிலையில்தான் அவர்களது 'சைக்கில் சாண்ட்' பிசினஸ் சூடுபிடிக்க ஆரம்பித்தது. ஐந்து சைக்கிள், பத்து சைக்கிள் என்று வளர்ந்து, வாடிக்கையாளர் கூட்டம் பெருகியது. ஸ்கூட்டர், மொபெட்டுகளையும் நிறுத்த வந்தனர். மொட்டை வெயிலில் நிறுத்த முடியுமா?

– வேறு வழியில்லை! கந்து வட்டிக் கடைக்காரர் அருணகிரியிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி, குடிசைக்குத் தெற்கிலும், மேற்கிலும் கிடந்த காலியிடத்தில் கொட்டகை போட, கூட்டம் பெருகியது. அருணகிரிக்கு தினமும் இருபது ரூபாயாக இரண்டு வருடத்துக்குக் கொடுத்து கடனை அடைக்க வேண்டும். அது பெரிய விஷயமாகத் தெரியவில்லை– தினமும் முப்பது நாற்பது சைக்கிளும், இருபது இருபத்தைந்து டூ வீலர்களும் வந்து நிற்க ஆரம்பித்து விட்டனவே!

ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அவன் வீட்டு வேலைக்குப் போன நேரங்களில், அய்யப்பன் ஸ்டாண்டைப் பார்த்துக் கொள்வான். இருவரும் இல்லாத நேரத்தில் பக்கத்து குடிசையில் பூக்கடை வைத்திருந்த சம்பத் ஒத்தாசை செய்வான்.

தொழிலில் அவ்வப்போது பிரச்னைகள் எழத்தான் செய்தன.

குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்து மருந்து மாயமென்று செலவு வந்து விட்டாலோ, அய்யப்பனுக்கு கிறுக்கு வந்து வசூல் பணம் முழுவதையும் தண்ணி அடித்து விட்டாலோ அருணகிரிக்குப் பதில் சொல்வதற்குள் திண்டாட்டமாகி விடும். மனுஷன் பணத்தில் கறார். கத்தி ஊரைக் கூட்டி மானத்தை வாங்கி விடுவார்– மனுஷனுக்கு 'தீ-நாக்கு'! ஒவ்வொரு வார்த்தையும் நெருப்புதான்.

சைக்கிளும், வண்டியும் நிறுத்தும் மனிதர்களில் தான் எத்தனை தினுசு!

நிறுத்திய சைக்கிளில் காற்று இறங்கி விட்டால் கூட தாட்பூட்டென்று குதிக்கும் தாலுகா ஆபீஸ் பியூன்– "ஒரே முள்ளாக் கிடக்கும்மா வேலிக்குப் போட்டிருக்கிற முள்ளை நல்லாக் கூட்டி வுடு. பஞ்சர் ஒட்டச் செலவு பண்ண மாளலை சனியன்..."

எங்கோ திருட்டுக் கொடுத்த சைக்கிள் பெல்லை. 'இங்கே தான் போச்சு'ன்னு சாதிக்கும் பள்ளி ஆசிரியர்; "புது ஸ்கூட்டர்ம்மா. இப்படி எவனோ உரசி பெயிண்டை சுரண்டுறதைப் பார்த்துக்கிட்டு இருந்திருக்கியேம்மா" என்று சத்தம் போடும் 'பெல்' அதிகாரி.

"இங்கே பெட்ரோல் திருட்டுப் போவுதுய்யா. நேத்துத்தான் ரெண்டு லிட்டர் போட்டுட்டு வந்து நிறுத்தினேன்" என்று அபாண்டமாக திருட்டுப் பட்டம் கட்டும் தொப்பிக்கார இளைஞர்; புது ஹீரோ ஹோண்டாவை நிறுத்தும் போதும் எடுக்கும் போதும் துடைத்துத் துடைத்து அழகு காக்கும் பாங்க் அதிகாரி என்று எத்தனையோ ரக மனிதர்கள்!

அருள்வாக்கு



மனுஷாள் மாதிரி இருந்து அவர்களோடு கலந்து பழகி அவர்களுக்கு வழிகாட்டி உத்ஸாஹப்படுத்த வேண்டுமென்று அவன் (பரமாத்மா) அவதாரமாக வருகிறபோது வேஷம் நன்றாகப் பொருந்துவதற்காகவே கொஞ்சங் கூடத் தயங்காமல், பயப்படாமல் மனஸின் நானாவிதமான உணர்ச்சிகளையும், 'அலவ்' பண்ணுகிறான். அதனால் ஒரு அவதார புருஷனுக்கும் கோபம் வரும், பயம் வரும், அழுகை வரும், ச்ருங்காரம் வரும். ஒரு ஞானி, சரீரம் எப்படி வேண்டுமானால் ஆடிவிட்டுப் போகட்டுமே என்று இருக்கிற மாதிரியே அவதார புருஷன் போகட்டுமே என்று விட்டு விடுவதால்தான் இப்படியெல்லாம் நடப்பது! அப்போதைக்கு மேல்மனஸிலேதான் அவதாரத்துக்கு இந்த உணர்ச்சிகளால் பாதிப்பு இருக்கிற மாதிரியே இருக்குமே தவிர, நம் மாதிரி அந்த உணர்ச்சிகளே அவனை அடித்துக் கொண்டு போய் விடுவதென்பது ஒருபோதுமில்லை. எத்தனை ஆசை, கோபம், அழுகை இருந்தாலும் அது அவனுடைய பரமாத்ம நிலையை பாதிக்க முடியாது; லோகத்தில் அவன் முடிவாகப் பண்ண வேண்டிய தர்மஸம்ஸ்தாபனத்தைப் பண்ணி முடிப்பதற்கும் குந்தகம் ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் ஃபெயிலாகிறதுபோல அவன் சாய்ந்தாலும் அப்புறம் நிமிர்ந்து நின்றுபாஸ் பண்ணி விடுவான். சாய்ந்தும் நிமிர்ந்தும் ஆடுவது அவனுக்கு விளையாட்டு!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

என்றைக்கும் போலத்தான் சம்பவத்தன்றும் 'குவாட்டர்ஸு'க்கு' தண்ணீர் எடுத்துக் கொடுக்கப் போனாள் முனீஸ்வரி. குழந்தைக்கு வயிறு முட்ட பால் புகட்டித் தொட்டிலில் தூங்க வைத்து விட்டு, சம்பத் அண்ணனிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள். ரேஷனில் கெரசின் வாங்க 'கேனை'யும் எடுத்துக் கொண்டாள்.

தண்ணீர் எடுக்கும் வேலை முடிந்து ரேஷனுக்குப் போன போது மூணு மணிக்குத்தான் லோடு வருதுன்னு சொன்னதால 'கேனை' கியூவில் நிறுத்திவிட்டு நாலாவது பிளாக்கில் தாசில்தார் வீட்டுக்குள் போய்ப் புகுந்து கொண்டாள்!– அரை மணி நேரமிருக்கே– டீ.வி. பார்க்கலாம் என்று.

பழைய படத்தில் லயித்து விட்டாள். யாரோ பலமாக கதவை இடித்தார்கள். 'கெரசின் லோடு வந்துடுச்சா? ஐயய்யோ மூணரை ஆச்சே'...

"டீ... முனீஸ்வரி!.. நம்ம குடிசையெல்லாம் தீப்புடிச்சு எரியுதாண்டி..."– திறந்த கதவுக்குள் அவசரமாக முகத்தை நீட்டித் தகவல் சொல்லி விட்டு ஓடினாள் மல்லிகா. மாடியில் வேலை செய்பவள்.

அவளும் ஓடினாள். அவ்வளவு வேகமாக அவள் அதற்கு முன் ஓடியதேயில்லை. வெறி பிடித்தது போல் ஓடியவளை எல்லோரும் திகைப்போடு பார்த்தார்கள்.

மதியம் சவாரி முடிந்து வீட்டுக்கு வந்து, இருந்ததைச் சாப்பிட்ட அய்யப்பன்,

முனீஸ்வரி வரும் நேரம் தானே என்று நினைத்து அரை நாளோடு கடை மூடிய சம்பத்தையும் இழுத்துக் கொண்டு முல்லை தியேட்டரில் மலையாளப் படம் பார்க்கப் போயிருக்கிறான்.

இரண்டரை மணி வெயிலில் தீ பரவியிருக்கிறது. அரைமணிக்குள் ஒன்று பாக்கியில்லாமல் எல்லாக் குடிசைகளுமே தீயின் பிடிக்குள் சிக்கி விட்டன. டூ வீலர்களின் பெட்ரோலும் சேர்ந்து கொள்ள 'ஸ்டாண்டில்' நெருப்பு ஆக்ரோஷமாக எரிந்திருக்கிறது.

தீயணைக்கும் படையினர் போராடித் தீயைக் கட்டுப்படுத்தி குடிசைக்குள் புகுந்து கரிக்கட்டை போல் வெந்து விறைத்த குழந்தையின் உடலைக் கொண்டு வந்து சாக்கில் கிடத்தினார்கள். மயக்கம் தெளிந்து பார்த்த முனீஸ்வரி அலறியபடி மீண்டும் மயக்கமானாள். திரும்பி வந்த அய்யப்பன் முதலில் வாயடைத்து நின்றான். பின்னர் அரற்றிப் புலம்பி அழுதான். பள்ளியில் இருந்து வந்து விட்ட பிள்ளைகளும் சேர்ந்து அழுதனர்.

தீயின் வெம்மை இன்னும் பூமியில் மிச்சிருந்தது. தாமதம்ாக வந்த தீயணைப்புப் படையால் சாம்பலை மட்டுமே மிச்சமாக்க முடிந்திருந்தது.

தீ பலி கொண்ட ஆண் வாரிசை மண்ணுக்கு இரையாக்கி விட்டு, கரிபூசிக் கொண்ட திண்ணையில் குடும்பத்தோடு உட்கார்ந்து காலைச் சூரியனை வெறித்துக் கொண்டிருந்தனர்.

அரைகுறையாகத் தப்பித்த பொருட்களை மீட்பதில் குடிசை வாசிகள் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தனர். தாசில்தார், கலெக்டரெல்லாம் பார்க்க வருவாரென்றும், சாப்பாட்டுப் பொட்டலம் வருமென்றும் குடிசைக்கு ஐநூறு ரூபாய் என்றும் பேசிக் கொண்டார்கள்.

அவள் ஸ்டாண்டின் கதியைப் பார்த்தாள். சுடுகாட்டில் வெந்து உடைந்து சாம்பலில் அமிழ்ந்து கிடக்கும் எலும்புகள் போல- சைக்கிள், ஸ்கூட்டர், மொபெட், பைக் எல்லாம் எரிந்து கருகி எஞ்சிய இரும்புப் பாகங்கள் மட்டும் மண்டியிட்டுக் கொண்டிருந்தன. வரிசை வரிசையாக பரிதாபமாக, எரிந்த ரப்பர் வாடை இன்னும் அடங்கவில்லை.

அய்யப்பனுக்கும், முனீஸ்வரிக்கும் குழந்தை துக்கத்தை விட இந்தக் காட்சியின் வெறுமை அதிக சோகத்தைத் தந்தது.

'எப்படி சமாளிக்கப் போகிறோம்? என்ன பதில் சொல்லப் போகிறோம்? இருபதாயிரம் முப்பதாயிரம் மதிப்புள்ள வண்டிகள். என்ன திட்டுவார்களோ? வட்டிக்கடை அருணகிரி எப்படிக் கத்துவாரோ? என்ன சமாதானம் சொல்வது!'

எல்லோரும் வந்தார்கள்- ஒருவர் பின் ஒருவராகப் பார்த்தார்கள். செத்துச் சவமாகியிருந்த தங்கள் வாகனத்தை அடையாளம் காண முயற்சி மேற்கொண்டார்கள். பின் உதட்டைப் பிதுக்கி விட்டு இவர்களைப் பார்த்தார்கள். அதிகம் பேச முற்படவில்லை. "ஏம்மா, கைக்குழந்தையை விட்டுட்டுப் போகலாமா? கையோட தூக்கிட்டு போக வேண்டியதுதானே..."- அவ்வளவுதான் கேட்டார்கள். அவள் அழுதாள். கை குவித்துக் கும்பிட்டபடி அழுதாள்.

வட்டிக்கடை அருணகிரி வந்தார். அவர் கண்களில் கூடவா கண்ணீர் கரப்பி இருக்கிறது?- கலங்கினார்.

"இன்னொரு ரெண்டாயிரம் தரேன் அய்யப்பா. குடிக்கிறத வுடு. சிக்கனமா இரு. திரும்பவும் ஸ்டாண்ட் போடு. இல்லேன்னா பொட்டிக் கடை போடு... பழைய பாக்கியையும் சேர்த்து படிப்படியா அடைச்சுடலாம்..."

'இத்தனை இயந்திர கதியிலும் மனிதருக்குள் இப்படிக் கொஞ்சம் ஈரம் இருப்பதால் தான் உலகம் இன்னமும் பொசுங்கி அழியாமல் பத்திரமாக இருக்கிறதோ?'- என்று நினைத்துக் கொண்டாள் முனீஸ்வரி.



"அந்த போலீஸ்காரர் ரொம்ப நேர்மையானவர்..."

"எப்படிச் சொல்ற?"

"நேத்து அவர்கிட்டயே பிக்பாக்கெட் அடித்து மாட்டிக்கிட்டேன்!"

"ஐயய்யோ! அப்புறம் என்னாச்சு?"

"அதில் இருந்த பணத்தில் அவர் மாமூலை மட்டும் எடுத்துக்கிட்டு மீதியை என்கிட்டயே கொடுத்திட்டார்!

— எஸ். சிவகாமி

குறையொன்றுமில்லை

மகாபாரத ஆரம்பத்தில் இந்தக் கதை இருக்கிறது. பரீக்ஷித்தை தக்ஷகன் என்கிற பாம்பு கடித்துவிட, அவன் இறந்து போகிறான். அதனால் பரீக்ஷித் மகன் ஜனமேஜயன் சர்ப்ப யாகம் என ஒன்றைப் பண்ணினான்.

அந்த யாகத்துக்குப் பயந்து கொண்டு தக்ஷகன், இந்திரனிடத்திலே போய் சரணாகதி பண்ணினான். இந்திரன் அபயம் அளித்துச் சொன்னான்: "நான் உன்னை ரக்ஷிக்கிறேன்; இங்கேயே இரு..." என்று.

ஜனமேஜயனின் ஹோமம் நடக்கிறது. எங்கெங்கோ இருந்த பாம்புகள் எல்லாம் அக்னி குண்டத்திலே வந்து விழுந்தன. யாகம் நடத்தியவரிடம் ஜனமேஜயன் கேட்டான், "என் அப்பாவைக் கடித்த பாம்பு மட்டும் இன்னும் வரவில்லையே...?"

தேடிப் பார்த்தால், இந்திர லோகத்திலே இருந்தது அந்தப் பாம்பு! இந்திரனுடைய சிம்மாசனத்தின் காலைச் சுற்றி வளைத்துக் கொண்டு சுருண்டு கிடந்தது. உடனே எல்லாரும் இந்திரனை அழைக்க ஆரம்பித்தார்கள். 'இந்த்ராய தக்ஷகாயஸ்வா:' என்று ஹோமம் பண்ணினார்கள். இந்திரன் தக்ஷகனோடு வந்து இதிலே விழவேண்டும்...' என்பது வேண்டுகோள்!

இந்திர லோகத்திலிருந்து சிம்மாசனம் கிளம்பி விட்டது. இந்திரனும் அக்னியில் விழுவதற்காக வந்து கொண்டிருக்கிறான். அந்த சமயத்திலே தக்ஷகன் அவனை விட்டு ஓடியே போயிடுத்து...! பிற்காலத்திலே அந்த தக்ஷகன் ரக்ஷிக்கப்பட்டான்.

ஆனால் பாருங்கள், இந்திரன் தக்ஷகனை ரக்ஷிக்கிறேன் என்று சொன்ன போதும் அவனால் அதைச் செய்ய முடியவில்லை! அவனிடத்திலே காருண்யம் இருந்தது; சக்தி இல்லையே! அதனாலேதான் ரக்ஷிக்க முடியவில்லை.

பரசுராமரிடத்திலே சக்தி இருந்தும் காருண்யம் இருக்கவில்லை என்பதைப் பார்த்தோம்.

காருண்யம்-சக்தி ஆகிய இரண்டையும் உடைய பகவானிடத்திலே நான் நாம் சரணாகதி பண்ணணும்.

பரமார்த்த ஸ்துதி என ஒன்றை சுவாமி தேசிகன் பண்ணியிருக்கிறார்- திருப்புட்குழி (காஞ்சிபுரம் அருகே) என்கிற க்ஷேத்ரத்தில் இருக்கும் எம்பெருமான் பேரிலான பத்து ச்லோகங்கள். அதை நித்திய பாராயணம் பண்ணணும் என்பது தேசிகரின் திருவுள்ளம்.

அந்த பரமார்த்த ஸ்துதியில் அவர் அழகாகச் சொல்கிறார்.

நாம் எத்தனையோ யக்ஞம் பண்ணுகிறோம். ஆனால், பகவான் ஒரு யக்ஞம் பண்ணுகிறான்... அது அவனைத் தவிர வேறொருத்தரால் பண்ண முடியாத யக்ஞம்! அது தான் சரணாகத ரக்ஷணம் என்னும் யக்ஞம்.

யக்ஞம் பண்ணணும் என்றால் தர்மபத்தினி பக்கத்திலே இருக்க வேண்டாமா...? அந்த ஸ்ரீயோடு கூட சேர்ந்தே விளங்கி சரணாகத ரக்ஷணம் என்கிற யக்ஞத்தை நடத்துகிறான் பரமாத்மா. அந்த சரணாகத ரக்ஷண யக்ஞத்திலே ரித்விக்குகள் யார் என்று கேட்டால், எம்பெருமானிடத்திலே இருக்கும் படியான அவனுடைய கல்யாண குணங்கள். அவற்றுள் தயைதான் முக்கியமான ரித்விக். மற்றவை துணையானவை.

எந்த யக்ஞமும் தக்ஷிணையில் முடிய வேண்டும். தக்ஷிணை இல்லாவிட்டால் அதற்குப் பூர்த்தி கிடையாது. பகவான் பண்ணுகிற சரணாகத



முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார் 33



ரக்ஷணம் என்கிற யக்ஞத்தில் யார் யார் தக்ஷிணை பெறக் கூடியவர்கள்?

யார் யாரெல்லாம் அவன் சரணாகத ரக்ஷகன் என்பதை உணர்ந்து வருகிறார்களோ, அத்தனை பேருக்கும் தக்ஷிணை உண்டு.

பகவானிடத்திலே கை கூப்புவதற்கு அதிகாரி, அதிகாரி அல்லாதவன் என்றெல்லாம் வேறுபாடு உண்டோ! யார் வேண்டுமானாலும் தொழலாம்; சரணாகதி பண்ணலாம். சுத்தி பண்ணிக் கொண்டு வரவேண்டும்; சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் தேடிப் போக வேண்டியதில்லை. இருக்கிற இடத்திலேயே சரணாகதி பண்ணலாம்.

உயர்ந்த ரீதியிலே பகவானை உணர்ந்து சரணாகத ரக்ஷணம் பண்ணிவிட்டால், மோக்ஷ தக்ஷிணையை-சாச்வதமான நித்யானந்தத்தைக் கொடுக்கிறான் அவன். சரணாகதி பண்ணுபவர்கள், பரப்ரும்மத்துக்குத் துல்லியமான, சமானமான போக்யாதிகளை அடைந்து மோக்ஷத்தை அடைகிறார்கள்.

'அவனை'த் தவிர வேறு யாரும் அப்படி சரணாகத ரக்ஷணம் பண்ண முடியாததனாலே அவனுடைய திருவடியை நாம் பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார் சுவாமி தேசிகன்.

அயோத்யா காண்டத்தில், சீதா பிராட்டியினிடத்திலே லக்ஷ்மணன் சரணாகதி பண்ணினான். அந்த சரணாகதிக்குப் பயனாய், பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்கிற வாய்ப்பு லக்ஷ்மணனுக்குக் கிடைத்தது. கூடவே வனவாசம் அழைத்துப் போனான் பகவான். அந்த லக்ஷ்மண சரணாகதி பூரண பலனைக் கொடுத்தது.

வசிஷ்டாதிகளை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமான் திருவடிகளிலே சரணாகதி பண்ணினான் பரதன். பரமாத்மா தன் பாதுகைகளை அவன் சிரஸில் வைத்து அனுக்ரஹித்தான். அவன் பண்ணிய சரணாகதியின் பூரண பலனை அயோத்தியிலே இருக்கிற புல் பூண்டுகூட அனுபவித்து உயர்கதி பெற்றதாம்!

பாதுகைகளை ஆச்சர்யமாக நந்தி கிராமத்தில் பிரதிஷ்டை பண்ணி, பாதுகா ஆராதனம் செய்தான்-பதினான்கு ஆண்டுக்காலம்! யாருக்காவது கிடைக்குமா இப்படி ஒரு பாக்கியம்! முக்தி ஐஸ்வர்யத்தைக் காட்டிலும் உயர்ந்த ஐஸ்வர்யம் அவனுக்குக் கிடைத்ததே! பரதனுடைய சிரஸுக்கு அத்தனை அழகாகப் பொருந்தியது பாதுகை! சிரஸ் அதற்கு ஒரு பீடம்போல அமைந்திருந்ததாம்.



ஆரண்ய காண்டத்தில், மகரிஷிகள் அத்தனை பேரும் எம்பெருமான் திருவடியில் சரணாகதி பண்ணியபோது, தண்டகாரண்யத்தையே ஒரு யாகம் செய்வதற்கு அனுகூலமான இடமாக ஆக்கித் தந்தான் பரமாத்மா. சுக்ரீவ சரணாகதிக்குப் பூரண பலனைக் கொடுத்து, அவன் சொன்ன காரியத்தை பகவான்



"எங்கள் தலைவி எங்களை வழிநடத்திச் செல்வார்னு சொன்னீங்களே...?"

"இப்படி ஜெயில் வரைக்கும் அழைச்சிட்டு வருவாங்கன்னு எதிர்பார்க்கலை சார்!"

— சீர்காழி வி. ரேவதி

பண்ணினான்.

சுந்தர காண்டத்திலே திரிசடை சீதா பிராட்டியிடம் சரணாகதி பண்ணினாள். சீதா பிராட்டி அந்த சரணாகதிக்குப் பலனாய் ஆஞ்சநேயனிடமிருந்து அத்தனை ராக்ஷஸ ஸ்த்ரீகளையும் ரக்ஷித்து விட்டாள்.

சீதா பிராட்டியை இத்தனை நாட்களாக விரட்டிக் கொண்டிருந்தார்கள் அந்த ராட்சஸ ஸ்த்ரீகள். "அத்தனை பேரையும் முஷ்டியினாலே, காலினாலே உதைத்துத் தள்ளிவிடுகிறேன்– ஆக்ஞை கொடுங்கள்" என்றான் ஆஞ்சநேயன்.

அதற்கு சீதாபிராட்டி சொல்கிறாள்: "அப்பா! இத்தனை நாளாக இவர்கள் என்னை ஏசியதும் பேசியதும் ராவணனிடத்திலே உள்ள பயத்தினாலே... அவன் ஆக்ஞைக்குக் கட்டுப் பட்டுச் செய்தார்கள். உலகத்திலே, உன் திருஷ்டியினால் (பார்வையில்) இவர்கள் தப்பு பண்ணியவர்களாகவே இருக்கட்டும். என்னுடைய திருஷ்டியில் இவர்கள் நல்லவர்கள் என்றே நினைக்கிறேன். தப்பு செய்தவர்களானாலும் நல்லதையே பண்ணக் கூடியவர்களானாலும், காருண்யத்தால் அவர்களை ஆட்கொள்வதே நல்லது. ஏனென்றால், உலகத்தில் தப்பே பண்ணாதவர்கள் கிடையாது..."

ஆஞ்சநேயனின் முகம் வெளுத்துப் போய் விட்டதாம்! ராமனைத் தன் ஹ்ருதயத்திலே வைத்திருந்தவன் அல்லவா ஆஞ்சநேயன்? 'இப்போது சீதை சொன்ன வார்த்தையிலே ராமனும் அல்லவா அடிபட்டுப் போய்விட்டான்!' என்று அவனுக்கு அதிர்ச்சி. ராமனும் தப்பு செய்தவன் என்றல்லவா ஆகிவிட்டது!

அதைப் பார்த்து சீதாபிராட்டி சொல்கிறாள்: "ஹே, ஆஞ்சநேயா! உன் முக விகாரத்திலேயிருந்து உன் எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். ராமன் தப்பு பண்ணவில்லையா? அவனும் தப்பு பண்ணியவன்தான்..."

"என்ன தப்பு?" என்று கேட்டானாம் ஆஞ்சநேயன்.

"அவன் வந்து என்னை மீட்காவிட்டால் அவன் பௌருஷம் நிலைக்குமா என்று கேட்கும்படி உன்னிடம் நான் சொல்லியனுப்பினேன். அப்புறமே அவன் என்னை மீட்க வந்திருக்கிறான். பத்தினி இங்கே இருக்கிறாள் என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியாத விஷயமா என்ன? உடனே ஓடி வந்து என்னைக் காப்பாற்ற வேண்டாமா? அபலையான ஒரு ஸ்த்ரீ, ஒரு காமாதுரனுடைய முன்னிலையிலே தன்னுடைய பதிவ்ரத்யத்தை எத்தனை நாள் ரக்ஷித்துக் கொள்ள முடியும்? எவ்வளவு சிரமம்! அதைத் துளிக்கூட நினைக்காமல் இவ்வளவு நாள் என்னை இந்த இடத்திலே விட்டு வைத்தது அவன் பண்ணின குற்றமில்லையா?"

ஆஞ்சநேயன் பார்த்தான்... "ஆமாம். அது ரொம்பப் பெரிய குற்றம். உடனே வந்து மீட்டிருக்க வேண்டாமா? இது இத்தனை நாள் எனக்குத் தெரியாது போயிடுத்தே..." என்று ராமனின் தவறை ஒப்புக் கொண்டு விட்டான்.

அதற்குப் பிறகும் ஆஞ்சநேயனுக்கு இன்னொரு சந்தேகம்! "அம்மா **நீங்கள்** என்ன தப்பு செய்தீர்கள்?" என்று கேட்டான்.

"நானும் தப்பு பண்ணியவள்தான்" என்றாள் சீதை. "தன் கணவன் எப்படி இருந்தாலும் அவனைக் குறித்து மற்றவரிடத்திலே விமர்சித்துப் பேசக் கூடியவள் உத்தம பத்தினியாகமாட்டாள். இப்போது என் பர்தா ராமபிரான் என்னைப் பத்து மாதம் இங்கே விட்டு வைத்தார் என்று உன்னிடம் சொன்னேனே... அதுதான் பெரிய தப்பு!"

ஆஞ்சநேயன் அதையும் ஒப்புக் கொண்டான். "அடியேன் என்ன தப்பு செய்தேன்?" என்று கேட்டான் அடுத்தபடியாக!

"நீயும் தப்பு பண்ணியவன்தான். இந்த ராக்ஷஸிகளையெல்லாம் அடிக்கிறேன், உதைக்கிறேன்" என்று சொன்னாயே... அதுதான் பெரிய தப்பு! அந்த மந்தரையையே (கூனி) பகவான் ரக்ஷித்தானே... நாம் அதை நினைக்க வேண்டாமா?" என்றாள் சீதா பிராட்டி!

விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் எழுதிய பராசர பட்டர், மஹாலக்ஷ்மியின் திருக்கல்யாண குணங்களை வர்ணிக்கக்கூடிய ஸ்தோத்திரம் இயற்றியிருக்கிறார். குணரத்ன கோஷம் என்று அதற்குப் பெயர். அதில் சீதா பிராட்டியுடைய கோஷ்டி, ராமபிரானுடைய கோஷ்டி என்று இரண்டாகப் பிரித்து, 'சீதையினுடைய கோஷ்டியே உயர்ந்து நிற்கிறது' என்று தீர்ப்புச் சொல்கிறார்.

பிராட்டியின் கோஷ்டி ஏன் உயர்ந்து நிற்கிறதாம்...? அதற்கான விளக்கத்தை அடுத்த வாரம் தருகிறேன்.

(தொடரும்)

நிலாவைக் கையில் பிடிப்பது மட்டுமல்ல, சுத்தமாய் அங்கேயே போய்க் குடியேறவும் போகிறார்கள் ஜப்பானியர்கள்!

அடுத்த 50 ஆண்டுகளுக்குள் அங்கே போய்க் காலூன்றிவிட, ஜப்பானிய விஞ்ஞானிகள் இப்போதே முயற்சிகள் தொடங்கிவிட்டார்கள். சந்திரனில் உள்ள தாதுப் பொருட்களையும், ரசாயனப் பொருட்களையும் முறையாக மதிப்பீடு செய்யும் ஜப்பானியர்களின் ஆர்வத்தைக் கண்டு ஐரோப்பிய-அமெரிக்க விஞ்ஞான வட்டாரம் வாயடைத்துப் போயிருக்கிறது.


ரோட் ஐலண்டிலுள்ள ப்ரௌன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்ல் பீட்டர்ஸ், "இது தவிர்க்க முடியாதது. பூமிக்கு அடுத்தபடியாக மினரல் பொருட்கள் அதிகம் உள்ள இடம் சந்திரன்தான்!" என்கிறார்.

2003ல் ஒரு ரோபோவை அனுப்பி வைத்து, நிலாவின் வரைபடத்தைத் தயார் செய்து கொண்டு, பிறகு அங்கே போய் இடங்களைக் குறித்துக் கொண்டு, ஸ்பேஸ் ஸ்டேஷன் கட்ட உதவும் தாதுப்பொருட்களும், ரசாயனப் பொருட்களும் எங்கெங்கே இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுவது முதல் கட்டமாக இருக்குமாம்.

இந்த விஞ்ஞானிகள் ரொம்பவும் எதிர்பார்ப்பது, அங்கே கிடைக்கும் சக்தி வாய்ந்த ஹீலியத்தை பூமிக்குக் கொண்டு வந்து, பொல்யூஷன் துளியுமில்லாத அணுமின் உற்பத்தி செய்யும் திட்டம்! ஒரு டாங்க் ஹீலியம், அமெரிக்காவின் ஒருவருட மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்கிறார் பெல்ஜியத்திலுள்ள ஜீன் பியர் ஸ்விங்ஸ் என்கிற பேராசிரியர்!

படிப்படியாக, மனிதன் அங்கே குடியேறி ஓர் ஆதார ஆராய்ச்சி நிலையம் அமைத்துவிட முடியும் என்கிறார் சடோரு உடகாவா என்கிற ஜப்பானிய விஞ்ஞானி.

21ஆம் நூற்றாண்டின் மின்விசைப் பிரச்னைகளுக்கு நிரந்தர முடிவுகாண, பூமியையும் தாண்டி நம் தேடல்களைத் துவங்க வேண்டும் என்று க்யோடாவில் நடந்த அறிவியல் மாநாட்டில், தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.



நிலாவில் ஹோட்டல்!

சுற்றுச் சூழலைப் பாதிக்காத சுத்தமான, அதே சமயம் ஏராளமான, மின்விசை கிடைக்க வேண்டும் என்றால் நிலாவை விட்டால் வேறு வழி கிடையாது என்கிறார்கள் ஜப்பானிய விஞ்ஞானிகள்.

நிலாவில் 26 பிலியன் டாலர்கள் செலவில் ஒரு ஸ்பேஸ் ஸ்டேஷன் கட்டி, 15 பேரை அங்கே நிரந்தரமாக அமர்த்திவிடவும் திட்டமாம். அடுத்த கட்டம்–

நிலாவில் ஹோட்டல்கள்!

சுற்றுலா வளர்ச்சி!

சொல்லுவது ஜப்பானியர்கள். அதனால் நம்பலாம்!

ஒரு நியாயமான சந்தேகம்... மனிதன் போய் சகட்டுமேனிக்கு நோண்டினால் நிலாவின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாதோ!

– சித்தார்த்

"மொள்ள, மொள்ள! அண்ணா, ஜாக்ரத!" முத்துவின் கையைப் பற்றிக் கவன மாய் நடத்திக் கொண்டு வந்தான்.

"பாத்து வா, என்னப் பிடிச்சுக்கோ, படி இருக்கு!"

வெளியில் போனால் அம்மாவோ, அப்பாவோ தன் கையைப் பிடித்துக் கொண்டு "பார்த்து வாடா! பஸ் வருது, இப்படி வா" என்று சொல்லும்போது அவனுக்குக் கோபம் வரும். கையை உதறிக் கொண்டு ஓட முயன் றாலும் விடமாட்டார்கள். சாலையின் இந்தப் பக்கம் அப்பா காரை நிறுத்தியபின் மூவரும் இறங்கி அந்தப் பக்கமுள்ள கடைக்கு நடந்து



போவதற்குள் இந்த அமர்க் களம். அவன் சின் னப் பாப்பாவா என்ன?

அந்த அவமானத்துக்கு ஈடு செய்வது போல் இருக்கும் முத்து அண்ணாவின் கையை இவன் பற்றி அழைத்து வரும் போது.

"நாலு படி.. ஒண்ணு... ரெண்டு.. மூணு... நாலு... அவ்ளதான்! இந்தா, இங்க உக்காந் துக்கோ அண்ணா. சேர் இருக்கு..."

நாற்காலியை மெல்லத் தொட்டுத் தடவிப் பார்த்துச் சரியான பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு முத்து புன்னகை செய்து "தாங்க்ஸ் அருண் பையா!" என்னும்போது அருணுக்கு ரொம்பப் பெருமையாய் இருக்கும். முத்து அண்ணாவுக்குப் பதினேழு வயது. இவனுக்கு ஐந்து. ஆனாலும் இவனால் அவர் கையைப் பிடித்து நடத்தி வந்து உதவ முடிவது எவ் வளவு பெரிய விஷயம்!

ஆறு மாதம் முன்பு முத்து அண்ணாவும் அவர் அப்பா அம்மாவும் பக்கத்துப் பலமாடிக் கட்டடத்தின் கீழ்த் தளத்துக்குக் குடிவந்த போது, அருண் அவரை விநோதமாய் வெறித்து வெறித்துப் பார்ப்பான். ஏன் எப்போதும் ஒரு கறுப்புக் கண்ணாடியை மாட்டிக் கொள்ள வேண்டும், அப்புறம் நடக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டு ஒவ்வொரு அடியாய் ஜாக்கிரதை யாய் எடுத்து வைக்க வேண்டும்? அப்புறம் தான் அம்மா விஷயத்தைச் சொன்னாள். ஒரு வாரத்துக்குள் அம்மாவும் அந்த ஆன்ட்டியும் நெருக்கமாகி விட்டார்கள், பரஸ்பரம் குடும்ப விவரங்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு.

"என்ன! அண்ணாவால பாக்க முடியாதா?"

"முடியாது. ரெண்டு கண்ணும் பார்க்க முடியாமலே போயிடுத்து. பாவமில்லே?"

"ஏன் பாக்க முடியாம போயிடுத்து?"

"ம்?" வைசூரி என்றால் குழந்தைக்கு என்ன புரியும்? "அது வந்து... சாமி அப்படிப் பண் ணிட்டார். நீ பெரியவனாப்புறம் புரியும்."

அருணுக்குக் குழப்பமாக இருந்தது. அதெப்படி கண்ணால் பார்க்க முடியாமல் போகும்? கண் என்பதே பார்க்கத்தானே! 'நாம் கண்ணால் பார்க்கிறோம், காதால் கேட் கிறோம், மூக்கால் முகர்கிறோம்' என்றெல்லாம் டீச்சர் சொல்லிக் கொடுத்திருக்கிறாரே!... பார்க்க முடியவில்லை என்பது எப்படி இருக் கும்? தூங்கும்போது நாம் பார்ப்பதில்லை. கண் கள் மூடியிருப்பதாலா?

தனியாய்ப் போய் இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு நடந்து பார்த்தான். மெள்ளத் தான் நடக்க முடிந்தது. அதுதான் அந்த அண்ணாவும்... படீரென்று சுவரில் தலையை மோதிக் கொண்டான். "அம்மா!" என்ற கூவலு டன் கண்களைத் திறந்து தலையைத் தடவி விட்டுக் கொண்ட கணத்தில் முத்து அண் ணாவிடம் அவனுக்கு ஒரு பரிதாபமும் அன்பும் தோன்றிவிட்டன.

தூரத்திலிருந்து ஆவலுடன் அவரை எட்டி எட்டிப் பார்த்துச் சில நாட்களைக் கடத்தி னான். முத்துவின் தாய் கவனித்துவிட்டு "இங்கே வாயேண்டா கண்ணா!" என்று ஆசையாய் அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போனாள். விரைவில் அவனும் முத்து அண் ணாவும் நல்ல நண்பர்களாகி விட்டார்கள். ஒருவர் வீட்டுக்கு மற்றவர் வந்து போனார்கள். முத்துவை "அண்ணா" என்று அழைக்கும் வழக்கம் வந்தது.


முத்து அண்ணா காலேஜில் படிக்கிறார் என்ற தகவல் இவனுக்குப் பெரும் வியப்பு.

"எப்படி முடியும் அண்ணா? படிக்க கண்ணு வேணாமா?"

"வாத்தியார்கள் சொல்றப்போ கவனமாய்க் கேட்டுப்பேன். சிநேகிதங்களும் உதவுவாங்க. வீட்டுக்கு வந்து பாடங்களை எழுதிப்பேன்."

"எழுதிப்பியா! எப்படி?"

அண்ணாவின் அறையில் அவருடைய வித்தியாசமான டைப்ரைட்டரையும் அவர்



காகிதத்தைக் கட்டி 'எழுத்து' என்று சொன்ன வெறும் மேலெழும்பிய புள்ளிகளையும் பார்த்தபோது அவரிடம் அவன் இரக்கம் அதிகரித்தது. அவை எழுத்தே இல்லை. எழுத்துக்கள் எப்படி இருக்கும் என்று அவனுக்குத் தெரியும். யு.கே.ஜி.யில் படிக்கிறானே! அண்ணா, பாவம், வெறும் புள்ளிகளை எழுத்து என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். பார்க்க முடியாதல்லவா? அதெல்லாம் எழுத்துக்கள் இல்லை என்பதைச் சொன்னால் வருத்தப்படுவார். சொல்லக் கூடாது.

கண்பார்வை இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டம்!

"நீயும் இப்படி என் பக்கத்தில் உக்காந்துக்க" என்றார் அண்ணா, "தாங்ஸ் அருண் பையா" சொன்ன பிறகு.

பக்கத்து நாற்காலியில் அருண் உட்கார்ந்து கொண்டான். வராந்தாவில் காற்று குளுமையாய் இருந்தது. ஒரு வாரமாய் விடாமல் பெய்திருந்த மழையின் ஈரம் அதில் இன்னும் வற்றவில்லை. மரங்கள் அசையும்போதெல்லாம் இலைகள் பன்னீர் தெளித்தன. மாலை ஆறு மணி. சுற்றிலும் சூழ்ந்து வரும் இருட்டால் வராந்தாவின் குழல்விளக்கொளி சாம்பிய நிலையிலிருந்து சிறிது சிறிதாய் விடுபட்டு, ஆற்றல் அதிகரித்து, இப்போது பளிச் சென்று அந்த வராந்தாவை நாடக மேடையில் ஃப்ளாஷ் லைட் போட்ட வெளிச்ச சதுரமாகச் செய்திருந்தது.

இந்த மாலை நேரத்திலும், 'கேட்' தாண்டி உள்ளே வந்துவிட்டபிறகும், முத்து அண்ணா கறுப்புக் கண்ணாடியைக் கழற்றவில்லை. கழற்ற மாட்டார். ஒரு சமயம் அவன் கேட்டதன் பேரில் அவர் கழற்றிய போது, பெரும்பாலும் வெள்ளையாய்த் தெரிந்த விழிகளைப் பார்த்து அவன் பயந்து விட்டான். அவன் மௌனத்திலிருந்து அந்தப் பயத்தை உணர்ந்த முத்து, உடனே கண்ணாடியை மறுபடி அணிந்து கொண்டான். அதன் பிறகு அவன் அருணுக்கெதிரே

ஆர். சூடாமணி

"ஜெயிலுக்குப் போயும் அந்த தலைவருக்கு புத்தி வரலை பாருங்க."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"மிக அதிகமான தொகையை ஊழல் செய்து ஜெயிலுக்கு வந்ததுக்காக கின்னஸ்ல பேர் வருமான்னு ஆதரவாளர்கள்கிட்ட கேட்டிருக்காங்களே!"

– சீர்காழி வி. ரேவதி



கண்ணாடியைக் கழற்றுவதில்லை, அருணும் கழற்றும்படி கேட்கவில்லை.

இந்தக் குழந்தையின் நட்பு எவ்வளவு இதமாயிருக்கிறது! மிகவும் நெருக்கமான தோழர்கள் கூட ஏதாவதொரு சமயம் "ஏ திருதராஷ்டிரா!" என்று "தமாஷு"க்காகக் கூப்பிடும் சபலத்தை வெல்ல முடியாதபோது இந்த மழலைக் குரலின் மாறாத பரிவு, "அண்ணா அண்ணா" என்று ஒட்டிக் கொள்ளும் நெருக்கம்– இவை ஒரு பூவிதழ் ஒத்தடம். இந்த வராந்தாவுக்கு எத்தனை படிகள் என்று அவனுக்குத் தெரியும். பிளாஸ்டிக் வார்ப்பு நாற்காலிகள் எந்த எந்த இடத்தில், கோணத்தில், போடப்பட்டுள்ளன என்று தெரியும். அறிவு நுட்பமும் நினைவாற்றலும் பார்வையாய்ப் பணியாற்றின. எனினும் இந்த வழிகாட்டும் மழலை "அண்ணா, ஜாக்ரத, படி இருக்கு" "அண்ணா, நாற்காலி இங்க இருக்கு, இப்படி வா" என்று கைபிடித்து அழைத்து வரும்போது வெள்ளைக் கைத்தடியை மடித்து வைத்துவிட்டு அந்தப் பிஞ்சுக் குரலுக்குக் கீழ்ப்படிவதில் ஒரு சுகம் இருந்தது.

அருண் அவன் கையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

"உன்னால ஏன் பாக்க முடியாது அண்ணா? எல்லாரும் பாக்கறாளே!"

முத்து சிரித்தான். பழக்கமான கேள்வி. நாளடைவில் மரத்துவிட்டது. நல்ல வேளையாய் இந்தக் குழந்தைக்கு விளக்கமாக ஒரு சோகக்கதை சொல்ல வேண்டாம்.

"நான் சின்னப் பாப்பாவாய் இருந்தப்ப, எனக்கு ஒரு கெட்ட ஜுரம் வந்தது. அது என் கண்ணுங்களைப் பார்க்க முடியாம பண்ணிடிச்சு. அதான்."

"கெட்ட ஜுரமா!"

"ஆமாம். ரொம்ப நாளைக்கு முந்தி. அது போகுது, நீ இன்னிக்கு ஸ்கூல்ல என்ன பண்ணினே சொல்லு."

அருணுக்குப் பேச்சில் மனம் செல்லவில்லை. அப்படிக்கூட ஒரு ஜுரம் உண்டா என்ன?

அருணின் அம்மா வாசலுக்கு வந்தாள்.

"எப்ப வந்தே முத்து? இவனென்ன, வழக்கம் போல் உன்னைத் தொணப்பிண்டிருக்கானா?" என்றாள் சிரிப்புடன்.

"இவன் என்னைத் தொணப்பறதே இடையாதே ஆன்ட்டி! நாங்க ஃப்ரெண்ட்ஸ். இல்லையா அருண் பையா? ஆன்ட்டி, நீங்க எங்கம்மாகிட்ட ஏதோ மாகஸின் கேட்டிருந்தீங்களாம். அதை வேறு யாரோ எடுத்துப் போயிக்காங்களாம். திரும்பி வந்ததும் கொண்டு வந்து தராங்களாம். என்னைச் சொல்லிட்டு வரச் சொன்னாங்க."

"அதுக்கென்னப்பா, ஆகட்டும். கொஞ்சம் டீ குடிக்கிறயா?"

"வேணாம் ஆன்ட்டி, தாங்க்ஸ். குடிச்சுட்டுத்தான் வரேன்."

ஊரெல்லாம் அந்தக் காய்ச்சல். வீட்டுக்கு ஒரு கேஸாவது இருப்பதாய்ச் சொன்னார்கள். விறுவிறு என்று ஏறும் உஷ்ணம். சிலருக்கு உடல்வலி. சிலருக்குத் தலைவலி. சிலருக்குக் குளிர், இருமல்– ஏதோ ஒன்று. நாலு நாள் ஆறு நாள் என்று உடம்பைச் சக்கையாய்ப் பிழிந்து போட்டுவிடுகிறது.

குழந்தை படுக்கை நடுவில் பெரிய தாம்பாளத்தில் வைத்த மல்லிகை மொட்டுப் போல் வெள்ளைப் போர்வைக்குள் சுருண்டு சின்னதாய்க் கிடந்தான். காய்ச்சலில் முகம் உலர்ந்து பளபளத்தது. சற்றைக்கொருதரம் கண்களைத் திறந்து அம்மா என்று முனகினான்.

"இங்கேதான்டா இருக்கேன் கண்ணா. இந்தா, இப்ப மாத்திரை சாப்பிடணும்."

"வாணாம்..." குரலே முனகல்தான்.

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. மாத்திரை சாப்பிட்டாத்தானே என் செல்லக் கண்ணனுக்கு உடம்பு சரியாகும்? வாயத் திறம்மா."

வெகு நேரம் மன்றாடி, அம்மா எதையோ வாயில் போட, விழுங்கினான்.

"இப்ப கொஞ்சம் பால் குடிக்கிறயா?"

"வாணாம், பிடிக்கலே. நீ என்கிட்டயே இரும்மா."

"இங்கதான் இருக்கேன். நீ தூங்கு."

கண்களை மூடிக்கொண்டான். இருட்டாய் இருந்தது. பாவம், முத்து அண்ணாவுக்கு எப்பவுமே இப்படித்தானே... விழிப்பும் உறக்கமு

மாய் ஒரு புரியாத நிலையில் ஆழ்ந்தான்.

யாரோ தொடுவது போல் இருந்தது. டாக்டரின் குரல் கேட்டது. அவர்தான் தன்னைத் தொட்டுப் பரீட்சித்திருக்க வேண்டும்.

"ஜுரம் எதிர்பார்த்த அளவு குறையலேம்மா: ஆன்ட்டிபயாடிக் மாத்திரை எழுதித் தரனே. எதுக்கும் மலேரியா, டைஃபாய்ட் ரெண்டு டெஸ்ட்டும் பண்ணிப் பார்த்துடலாம்."

"அப்படியெல்லாம் சந்தேகமிருக்கா?"

"ஒண்ணும் சொல்றதுக்கில்லை. இப்ப ஊரில் பரவியிருக்கிற ஜுரம் ரொம்ப விசித்திரமாயிருக்கு. பல வியாதிகளோட அறிகுறிகள் கலந்தாப்பல வந்து ஏமாத்திடுது. ஒவ்வொண்ணாய் 'எலிமினேட்' பண்ணிடறது நல்லது. ரொம்ப சள்ளை பிடிச்ச கெட்ட ஜுரம்."

"ஐயோம்மா!"

"என்னடா கண்ணா?"

காய்ச்சலில் குழந்தை திடீரென்று அலறவே அம்மா பதறி அணைத்துக் கொண்டாள்.

"என்ன அருள் கண்ணா? தலை வலிக்கறதா? உடம்பை ஏதானும் செய்யறதா?"

"அம்மா... அம்மா..."

கெட்ட ஜுரம்...வாயிலிருந்து வார்த்தையாய் ஒலிக்கத் தொடங்கி உங்களுக்குள் இறங்கி உறைந்து விட்ட சொற்கள். கெட்ட ஜுரம்... எனக்குகெட்ட ஜுரம்... முத்து கண்ணாவுக்கு வந்த மாதிரி...

காய்ச்சல் சுர்ரென்று ஏறியது. அரை மயக்க நிலையிலேயே குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய் பலவித ரத்தப் பரிசோதனைகளுக்கு ரத்தம் கொடுத்து விட்டு வந்தார்கள். "இதோ ஒரே செகண்ட். எறும்பு கடிக்கறாப் போல் இருக்கும், அவ்வளவுதான்! அருண் அழமாட்டானே! அருண் இஸ் எ ப்ரேவ் லிட்டில் பாய்!" என்ற டாக்டரின் ரெடிமேட் பேச்சுகளோ, நரம்பில் ஊசி ஏறுவதோ, குழாய்க்குள் கறுப்பாய் ரத்தம் புகுவதோ எதுவும் அறியாத இறுக்க மூளைக்குள் குழந்தையின் உணர்வுகள் அடைபட்டிருந்தன. மூச்சின் இழையாய் அடிமனத்தில் நினைவோட்டம். "எனக்கு ஒரு கெட்ட ஜுரம் வந்துது. அது என் கண்ணுங்களைப் பார்க்க முடியாம பண்ணிடிச்சு."

எனக்கும்... எனக்கும்... ஒண்ணுமே பாக்க முடியாமல்.... ஆயிடுமா?

முத்து அண்ணாவுக்கு எவ்வளவு கஷ்டம்! அதே மாதிரி எனக்கும்... எல்லாம் இருட்டாய்...

"அம்மா அம்மா... கெட்ட ஜுரம்..."

"என்னடா கண்ணா சொல்றே?

குழந்தை கண்ணைத் திறக்காம இப்படிப் பினாத்தறதே!"

கெட்ட ஜுரம்... கறுப்புக் கண்ணாடி... வெள்ளை முழி... கவத்துல இடிச்சுப்பேனா? அம்மா, என் கையைப் புடிச்சுக்கோம்மா... என்னால பாக்க முடியலே...

"ஐயோம்மா, எனக்கும் அப்படி ஆயிடுமா?" திடீரென்று கண் விழித்துக் குழந்தை அரற்றினான்.

"எப்படிடா கண்ணா?" அம்மா தவித்தாள்.

"கெட்ட ஜுரம்... புள்ளிய எழுத்துன்னு சொன்னா டீச்சர் அடிப்பார்..." மறுபடியும் கண்கள் செருகிக் கொண்டன.

"என்னடா சொல்றே? ஐயோ, குழந்தை ஜுர வேகத்துல ஏதேதோ பேசறானே! ஸ்கூல்ல என்னிக்கானும் டீச்சர் அடிச்சிருப்பாரா? அதுல பயந்து போய்த்தான் ஜுரம் வந்துடுத்தா? ஒண்ணுமே புரியலையே பகவானே!"

ஐந்தாம் நாளும் காய்ச்சல் இறங்கவில்லை. அப்பா கவலைப்பட்டு, வேறு டாக்டரைப் பார்க்கலாமா என்று யோசித்தார்.



" தலைவர் என்ன காரியம் பண்ணிட்டார் தெரியுமா?

" என்ன பண்ணிட்டார்?

" பழக்க தோஷத்திலே ஜாமீனையும் பினாமி பேர்ல வாங்கிட்டார்!


— ஆனந்த பத்மாவதி

உடம்பு மெலிந்து குன்டு முகம் சதை இழந்து கசங்கிய துணியாய், தூக்கமா மயக்கமா என்று புரியாத நிலையில் படுத்திருந்த குழந்தையைப் பார்த்து அம்மாவுக்கு வயிறு கலங்கியது. நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டுக் கவலையுடன் திரும்பினாள். அறைக் கதவிடை முத்துவின் தாய் வந்திருந்தாள்.

"எப்படிம்மா இருக்கு குழந்தைக்கு?"

அம்மாவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. "என்னன்னு சொல்றதும்மா. எந்த மருந்துக்கும் அசைஞ்சு குடுக்காத அதிசய நோயாயிருக்கு.

"ஏதேதோ ரத்தப் பரீட்சையெல்லாம் பண்



எட்டு அடி உயரம் கொண்ட இந்த நடராஜர் விக்கிரகமானது தமிழகத்திலேயே உயரமானது. எடை 1500 கிலோ. பெங்களூரில் உள்ள சாண்டூர் மஹாராஜாவான எம்.ஒய். கோர்படேயின் அரண்மனையில் வைக்கப்பட உள்ளது. இதனை வடிக்கும் பொறுப்பை தேவசேனாபதி ஸ்தபதியிடம் ஒப்படைத்தவர் காஞ்சி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

— பிரசன்ன குமார்

நாராய்ப் படுத்திருக்கிறதைப் பார்த்தா பயமாயிருக்கு. மயக்கத்துல அனத்தறான். நல்ல ஜுரம்."

அருணின் கண்ணிமைகள் யாரோ வெட்டிப் பிரித்தது போல் திறந்தன. சிறிது நேரம் பார்வை விரிந்த நிலை மாறவில்லை. இளைத்துப் போன மார்புக்கூட்டுக்குள் ஒரே சலசலப்பு. அம்மாவின் பேச்சின் எதிரொலி காதுகளில் ஒட்டிக் கொண்டு வருடியது. கொஞ்சம் கொஞ்சமாய் பிரக்ஞைக்குள் புகுந்து பரவியது.

நெஞ்சுக்குள் ஒரு குளிர்ந்த கை மெல்லப் படிந்து தடவிக் கொடுத்தது. மெத்தென்று ஒரு குரல் ''ஏண்டா இன்னும் படுத்திருக்கே அருண்? உனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லே!'' என்றது.

காய்ச்சலில் உலர்ந்த சின்ன உதடுகள் மெல்ல விரிந்தன. "அம்மா, பால் வேணும்" என்றான் அருண்.

''ஜாக்ரத அண்ணா, பாத்து வா. இங்க படி இருக்கு. நாலு படி. ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு–அவ்ளதான்! இப்ப உக்காந்துக்கோ."

முத்துவும் அருணும் இரு நாற்காலிகளில் அருகருகே அமர்ந்தார்கள். முத்துவின் கறுப்புக் கண்ணாடியில் மாலைக் கதிரொளியின் அம்பு மோதி அந்தக் கருமையைத் துளைக்க முடியாமல் விழுந்தது. முத்து கையிலிருந்த வெள்ளைத் தடியை மடித்துத் தரையில் மெள்ள வைத்தான். அருணின் கையைத் தேடி எடுத்துத் தடவிக் கொடுத்தான்.

''உனக்கு ஜுரம் சரியாகணும்னு நான் சாமியையெல்லாம் வேண்டிகிட்டேண்டா அருண் பையா!"

அருண் அவன் முகத்தைப் பார்த்தான். அவனுக்கே தெரியாமல் வயதுக்கு மீறிய கனிவும் வேதனையும் குரலில் ஊடுருவ, கேட்டான்:

''உனக்கு மட்டும் ஏன் கெட்ட ஜுரம் வந்துது முத்து அண்ணா? எனக்கு வந்த மாதிரி நல்ல ஜுரம் ஏன் வரல்லே? அப்போ உனக்கும் பாக்கமுடியாம ஆயிருக்காதில்லையா?''

ணாங்கன்னு சொன்னீங்களே?''


"எல்லா ரிசல்ட்டும் வந்தாச்சு. எதுவும் கெடுதலா ஒண்ணும் இல்லையாம்."

''அப்போ கவலையில்லை தானே? முத்து தினம் கேக்கறான், அருணுக்கு எப்படி இருக்குன்னு."

முத்து அண்ணா... அவர் மாதிரி நானும்...

மயக்க ஆழத்திலிருந்து மேலே வந்து வந்து மீளும் பிரக்ஞை. அம்மாவும் அந்த ஆன்ட்டியும் பேசுவது தொலைவில் காற்றலையும் ஒலிகளாய்க் காதுகளை உரசிப் போயின.

''கெடுதலாய் எதுவும் இருக்க முடியாதுன்னுதான் டாக்டர் சொல்றார். 'வைரஸ்' காய்ச்சலுக்கு மருந்து கொடுத்துண்டிருக்கார். ஆனா என்ன காரணமோ, டெம்பரேச்சர் லெவில் இறங்கமாட்டேங்கறது. அஞ்சு நாளா குழந்தை கண்ணைத் திறக்காம ஜிழிச்ச



• நாட்டிய நாடக நிகழ்ச்சிகள்



நாட்டியத்தில் குச்சுபுடியின் சாயல். நாடக வேஷங்களின் யக்ஷகான சாயல். வசனங்கள் யாவும் தெலுங்கில். நடப்பது தமிழ் நாட்டில். தஞ்சாவூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள மெலட்டூர் என்கிற அழகான கிராமத்தில் உள்ள வரதராஜ பெருமாள் சன்னதிக்கு எதிரே ஒவ்வொரு வருடமும் நரசிம்ம ஜெயந்தி அன்று இந்த நாட்டிய நாடகத் தொடர் தொடங்குகிறது. பாகவதமேளா என்கிறார்கள்.

மிக எளிமையான மேடை. ஆர்ப்பாட்டமில்லாத அரங்க அமைப்புகள். பெயருக்குச் சில வண்ண விளக்குகள். ஒற்றை ஸ்கிரீன். அவ்வளவே! ஆனால் கர்நாடக இசையிலும் நாட்டியத்திலும் எங்கோ போய் விடுகிறார்கள்!

முதல் நாள் பிரஹலாத சரித்திரத்தில் நாட்டிய நாடகம் தொடங்குகிறது. பிறகு ஹரிச்சந்திரா (இரண்டு நாட்கள் - இரண்டு பாகங்கள்), ருக்மணி

ஹிரண்யனைக் கொல்லாத நரசிம்மர்!



ஒரு சமயம் முல்லா தம்முடைய கழுதை காணாமல் போய்விட்டதால் வருத்தமுடன் கண்ணீர் சிந்தியபடி இருந்தார். அவருடைய நண்பர்கள், "முல்லா, உங்களுடைய முதல் மனைவி இறந்த போது கூட இவ்வளவு வருத்த மடையாத நீங்கள், ஒரு கழுதையைப் பறி கொடுத்ததற்கு ஏன் இவ்வாறு வருத்தப்படு கிறீர்கள்?" என்று வினவினார்கள்.

அதற்கு முல்லா, "என்னுடைய முதல் மனைவி இறந்த சமயம், உங்களைப் போன்ற தோழர்கள் என்னிடம் வந்து 'வருத்தப்படா தீர்கள். வேறு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறோம்' என்று சொல்லி அதே போல் செய்து காட்டினீர்கள். ஆனால் இப்பொழுது, 'கவலைப்படாதீர்கள். வேறு நல்ல கழுதை ஒன்று வாங்கித் தரு கிறோம் என்று யாரும் கூறவில்லையே?' என்று சொல்லி மேலும் அழுதார்!

'முல்லாவின் வேடிக்கைக் கதைகள்' நூலிலிருந்து
தகவல் : ஆர். பிரகாசம்

கல்யாணம் போல ஐந்தாறு நாட்டிய நாடகங்கள். கடைசி முத்தாய்ப்பாய் ஒரே ஒரு தமிழ் நாடகம். வள்ளித் திருமணம். யாவும் பத்து நாட்களில் முடிந்து விடுகின்றன.

இந்த நாட்டிய நாடகங்களில் உள்ள ஒரு விசேஷம் - எல்லாப் பெண் வேடங்களையும் ஆண்களே செய்வது. ஒன்றல்ல, இரண்டல்ல, எக்கச்சக்கமாய் அவ்வை சண்முகிகள்! பெண்களின் நளினங்களை மிகப் பிரமாதமாய் செய் கிறார்கள். (குரல் மட்டும்தான் கொஞ்சம் இடிக்கிறது.)

இந்த நாட்டிய நாடகங்களில் முழுக்க முழுக்கப் பாடல்கள்தாம்! எப்போதாவது வசனம் வரும்! ஸ்வரசுத்தமான கர்நாடக இசையும் ஜதிகளின் சாம்ராஜ்ஜியத்தில் நாட்டியங்களும் அதன் கூடவே வெளிப்படும் பாவனைகளும் வசனங்களின் முக்கியத்துவத்தை தேவையில்லாததாக ஆக்குகின்றன.

ஒவ்வொரு நாடகத்தின் துவக்கத்திலும் 'கோணங்கி' என்கிற கோமாளி வந்து குதியாட்டம் போடுகிறார்! அவர் போனதும் நீண்ட ராக ஆலாபனை தொடங்குகிறது. ஆலாபனையின் முடிவில் விநாயகர் வருகிறார். அவருக்கு கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது.

அதாவது விநாயகர் ஒருமுறை ஸ்ரீசக் கரத்தை விழுங்கி விட்டாராம். அதை வெளிக் கொணர விஷ்ணுவே கோமாளி கோணங்கி வேடம் பூண்டு தைய்யா தக்கா என்று குதிக்கவும், விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தாராம். அப்போது ஸ்ரீசக்கரம் வெளிவந்து விழுந்ததாம். இந்த ஐதீகத்தின் அடிப்படையில் காட்சி அமைப்பு உள்ளது.

பிரஹலாத சரித்திரம்தான் மிகப் பிர தான நாடகம். இதன் க்ளைமாக்ஸில் ஹிரிண்யாட்சன் தூணைப் பிளக்க, நரசிம்மமூர்த்தி பிரத்யட்சம் ஆகிறார். இதற்கென்றே நரசிம்ம மூர்த்தியின் முக அமைப்பு வரதராஜ பெருமாள் சன்னதியில் எப்போதும் உள்ளது. (நாடகம் இல்லாத சமயங்களில் வருபவர்கள் பார்க்க வேண்டி இந்த ஏற்பாடு). இந்த முக அமைப்பு மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. நரசிம்மமூர்த்தியின் பாத்திரப் பிரவேசத்துக்கு சில நிமிடங்கள் முன்புதான் இந்த முக அமைப்பை அந்த வேடமேற்பவருக்குப் பொருத்துகிறார்கள்.


இந்த முகம் பொருத்தியதுதான் தாமதம். நரசிம்மமூர்த்தியின் கோபாவேசம் அவருக்கு 'சாமி'யாக வந்து விடுகிறது. நாலைந்து பேர் அவர் இடுப்பில் முன்னேற்பாடாக கட்டியுள்ள துண்டை இறுக்கி பிடித்து 'கண்ட்ரோல்' செய்கிறார்கள். ஜல் ஜல் என சலங்கை சத்தம் முழங்க அதே ஜதி சப்தத்திற்குப் பாடல் ஒலிக்க, நரசிம்ம அவதாரம் பிரத்யட்சம் ஆகிறது.

நரசிம்மரின் கோபக்கனலை தாங்க முடியாத ஹிரண்யாட்சன் மேடையை விட்டு இறங்கி கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கொண்டு நரசிம்மரை வசைபாடுகிறான்!

கதைப்படி ஹிரண்யாட்சனை நரசிம்மன் வதம் செய்வதாக இருந்தாலும் உண்மையாகவே வந்து விட்ட 'சாமி' ஏதாவது ஏடாகூடமாய் செய்து விட்டால் என்ன செய்வது என்ற ஐதீகத்தில் நரசிம்மரை பாட்டுகள் பாடி சாந்தி செய்து நாடகத்தை முடிக்கின்றனர்!

ஒவ்வொரு நாடகமும் இரவு எட்டு மணிக்குத் தொடங்கி நள்ளிரவு வரை நடக்கின்றன. நாடகங்கள் பார்க்க ரசமாக இருக்கின்றன. டிசம்பர் சீசனில் சபாக்காரர்கள் இவர்களை கவனிக்கலாம்!

- அனுராஜன்



பின்னணியில் ஒரு பெருமூச்சு

மரபுகளும் புதுமைகளும் மோதும் அவசர யுகத்தில் உதித்திருக்கிறது 'அகிலா நியூஸ் சர்வீஸ்' என்ற சிறு தகவல் தொடர்பு நிறுவனம்.

அவர்கள் தேடிப் பிடித்துச் சேகரித்த 14 கட்டுரைகளின் தொகுதி இந்தப் புத்தகம். கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு பத்திரிகைகளில் வெளியானவை.

கரகாட்டக் கலை, பொய்க்கால் குதிரை, தப்பாட்டம், தோற்பாவைக் கூத்து, நாடகக் கலை பாய்ஸ் கம்பெனிக்காலம், சிலம்பாட்டக் கலை கிராமியப் பாடல்கள், பத்மநாபபுரத்து மர அரண்மனை, சிதைந்து போன புதுக்கோட்டை மன்னர் குடும்பம்.

இப்படிச் சில விஷயங்கள்.

பற்பல தகவல்கள்.

நுனிப்புல் மேயாமல் விஷயங்களின் வேர் தரிசனம் காண, அலைந்து திரிந்து ஆழ்ந்து தேடிய உழைப்பு.

'சீரியஸ் ரீடர்ஷிப்' என்ற தமிழில் மகா பஞ்சமாகி விட்ட அம்சத்துக்கு ஒரு விடிவு நாடி ஓடும் தனியோட்டம்.

புரியும் படியான சுவையான எழுத்து வடிவம். நிறையப் படங்கள்.

ஆனால் புத்தகம் முடியும் போது புலப்படுவது ஒரு நெடிய பெருமூச்சின் பின்னணி.

வரலாறு, பண்பாடு, கலை இவற்றில் தமது பெருமையை உணராத, உள்ள பெருமையைப் போற்றிக் காக்காத தமிழர் மனோபாவத்திற்காக விடப்பட்ட பெரு மூச்சுத்தான் அது.

'விதியே விதியே தமிழச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா?'

மகாகவி கேட்ட கேள்வி மனசில் மறு ஒலிபரப்பு ஆகிறது.

என்ன பதில்?

முன்னுரையில் சின்னக் குத்தூசியின் ஆதங்கமும், அணிந்துரையில் ஜே.பால் பாஸ்கரின் வேதனையும், தன்னுரையில் அகிலா நியூஸ் எஸ்.டி.லக்ஷ்மணனின் தன்னடக்கமும் பல அலைகளை எழுப்புகின்றன.

இந்தக் கட்டுரைகள் அகிலா நியூஸ் நிறுவனம் சொல்லிக் கொள்வது போல் வெறும் நுரைக்குமிழிகளா?

இல்லை. தமிழர்கள் எதையும் இனி சுலபத்தில் மறக்க மாட்டார்கள். இந்தப் புத்தகத்தின் உத்தியே அதற்குச் சான்று.

— **வையவன்**

–'தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்'
வெளியீடு: நியூ எட் பப்ளிகேஷன்ஸ்
அண்டு கம்யூனிகேஷன்ஸ் (பி) லிமிடெட்.
124, என்.ஜி.ஓ. காலனி,
திண்டுக்கல்- 624 009.
விலை ரூ.50. பக்கங்கள் 124.

22 உன்னை வரலாமா?

"சசி! என்ன விளையாடறே...! உனக்கு என்னைக் கண்டு பொறாமையா...? கமான்!"

– சுகன்யா தன் உணர்வுகளை மறைக்காமல் வெளிப்படுத்தியபோது பாய்ந்தாள் சசி.

"பின்னே.... இப்படி அரை நிஜாரோட ஜாலியா.... புருஷன் பக்கத்துல இல்லையேன்னு ஏங்காம, நாத்தனாரோட தாம்பத்திய சிக்கல் பத்தின கவலை இல்லாம.... உன்னைப் போல இருக்க முடியுதா.... 'வா ஒரு ட்ரிப் சந்திரனுக்குப் போய்ட்டு வரலாம்'னு யாராவது கூப்ட்டா கூட உடனே ரப்பர் செருப்பை மாட்டிக்கிட்டுக் கிளம்பற நிலைமைல இருக்கே நீ..."

"நீயும் அப்படித்தான் இருந்தே... ஸ்ரீராமைக் காதலிக்கற வரைக்கும்..."

"ஹ¬ம்...!"

"என்ன இவ்வளவு அலுப்பு? ஸ்ரீராம் இல்லைங்கற ஏக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்தறது, மறக்கறதுன்னு தெரியாம... ஏதேதோ பேசி திண்டாடற நீ... சரி டாக்டர் மகேஷ் என்ன சொன்னார்...?"

"அவங்களை அழைச்சுட்டு வரச் சொல்லியிருக்கார்."

"அப்பவே எதிர்பார்த்தேன். எப்ப அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணியிருக்கே...?"

"இப்ப அதான் ரொம்ப யோசனையா இருக்கு சசி... அவங்க இரண்டு பேருக்கும் உண்மையைச் சொல்லி அழைச்சுட்டுப் போறதா? சொன்னா, வர ஒத்துப்பாங்களா? வீட்டுல மத்தவங்களுக்குத் தெரியாம எப்படி அழைச்சுட்டுப் போறது....?"

"உங்க வீட்டுக்கு வரவழைக்க இரண்டு பேர்கிட்டேயும் உடைச்சுச் சொல்லிடு..."

"சொல்லிடலாம். ஆனா டாக்டர் என்ன ட்ரீட்மெண்ட் குடுப்பார்னு வேற இப்ப கவலையா இருக்கு..."

"அனேகமா இதுக்கு மருந்து ட்ரீட்மெண்டெல்லாம் எதுவும் தேவைப்படாது சுகி. கவுன்சிலிங்லேயே சரி பண்ணிடுவாங்க. பிரச்னையை இரண்டு பேர்கிட்டேயும் தனித் தனியா பேசணும்னு டாக்டர் சொல்லுவார். இதைப் போல ஒண்ணு, இரண்டு கேஸ் நான் பார்த்திருக்கேன். ஒரு சைகாலஜிஸ்டை உதவிக்கு வைச்சுக்கிட்டு அவங்களை விட்டு லேடி பேஷண்ட்கிட்டே பேசச் சொல்லுவாங்க. சேகர்கிட்டே டாக்டர் மகேஷ் தனியா பேசிடுவார். அப்புறம் இரண்டு பேரையும் சேர்த்து வைச்சு அறிவுரை சொல்லுவார்..."

"அறிவுரை!"

"அப்படிச் சொன்னா சிரிப்பாத்தான் இருக்கும் சுகி. ஆனா மனுஷங்களுக்கு அறியாமையால எவ்வளவு பிரச்னை பாரு....! ரொம்ப இயல்பா பூ மலர்ற மாதிரி நடக்கறதையெல்லாம் தப்பு. அருவருப்புன்னு சொல்லிக் குடுத்து... ரம்மியமான எண்ணங்களுக்குக் கூட 'அசிங்கம்'னு முத்திரை குத்தி கடிவாளம் போட்டு.. இனி அந்தக் கடிவாளம் தேவையில்லைன்னும் போது கூட அதை உதறிட்டு வர அவங்களால முடியலை... அதையெல்லாம் எப்படி தூக்கியெறிஞ்சுட்டு இயல்பா ஆகறதுன்றதைத்தான் டாக்டர் அறிவுரையா சொல்லுவார்..."

"எனக்கு இந்த மனோதத்துவ ட்ரீட்மெண்ட்ல நம்பிக்கை இல்லாம போயிடலை சசி. ஆனா, இந்த விஷயத்துல நாம உணராததை மூணாவது மனுஷர் எப்படி வந்து உணர்த்த முடியும்ங்கறே...?"

"நடந்திருக்கே...! அறிவுரை தர்றவர் மூணாவது மனுஷர் என்கிறதே ஒருவிதத்துல உதவுது. அவர் பேஷண்டுக்கு ரொம்ப நெருங்கினவர் இல்லை; ஆனா அதே சமயத்துல விஷயம் தெரிஞ்சவர். எப்படி பேசினா அவங்க மனசைத் திறப்பாங்க, ரிலாக்ஸ் ஆவாங்க என்கிறதெல்லாம் ஒரு மனோதத்துவ டாக்டருக்குத் தெரியாதா... அந்தரங்கமான விஷயங்களைக் கூட கூச்சமில்லாம பேசி வரவழைச்சுடுவாங்க..."

"உனக்கெப்படி சசி, இவ்வளவு தூரம் தெரிஞ்சிருக்கு...?"

"எங்க சோஷல் சர்வீஸ் பயிற்சில சைக்கியாட்ரியும் கொஞ்சம் உண்டு. அதுல ஓரளவு சொல்லித் தருவாங்க. அப்புறம் நானா நிறைய புத்தகம் படிச்சுத் தெரிஞ்சுக்கிட்டேன்... இந்த மாதிரி பயந்துக்கறவங்க, அருவருப்புப் படறவங்களுக்கு டாக்டர் முக்கியமா சொல்ற அறிவுரை என்ன தெரியுமா...?"

"என்ன....?"

"ஐயோ! மத்தவங்களை மாதிரி நம்ம



வாழ்க்கை தொடங்கலையேன்னு நினைக்கவே நினைக்காதீங்க... இதை ஒரு தோல்வியா பாராட்டாதீங்க..."

"இன்ட்ரஸ்டிங்"

"தனிமைல இருக்கும்போது, பெட்ரூமை மட்டும் பகிர்ந்துக்கறதுக்காக கல்யாணம் பண்ணிக்கலை... வாழ்க்கையையே பகிர்ந்துக்கப் போறோம்னு ஒருத்தருக்கொருத்தர் உணர்த்திக்க முயற்சி பண்ணுங்க. நிறைய பேசுங்க. மெள்ள மெள்ள ஸ்பரிசப் பரிமாற்றங்களை அறிமுகப்படுத்திக்குங்க... ஒருநாள் கண் விழிச்சுப் பார்த்தா, உங்க தாம்பத்யம் முழுமையடைஞ்சிருக்கறதை உணர்ந்து நீங்களே 'அட'!ன்னு ஆச்சர்யப்படுவீங்க... இதுதான் சுருக்கமா டாக்டர் சொல்லக்கூடிய சமாசாரம்."

மௌனத்தில் மூழ்கினாள் சுகன்யா.

"ஓய்! என்ன அப்படியே அடங்கிப் போயிட்டே?"

"இல்ல சசி... திடீர்னு யோசனை வந்துடுத்து. இப்பத்தானே இந்த மாதிரி பிரச்னைக்கெல்லாம் டாக்டர் உதவி கேட்கலாம்ங்கற வழக்கமே வந்திருக்கு... டாக்டர்களும் இதுலெல்லாம் ஸ்பெஷலைஸ் பண்ண ஆரம்பிச்சிருக்காங்க. ஒரு அம்பது வருஷத்துக்கு முந்தி இப்படிப்பட்ட பிரச்னை ஒரு பொண்ணுக்கு ஏற்பட்டிருந்தா...?"

"என்ன ஆகியிருக்கும்....? அவ புருஷன் பலவந்தப்படுத்தியிருப்பான்; இல்ல மாமியார் கிட்டே சொல்லியிருப்பான். பயத்துல அந்தப் பொண்ணுக்கு மனப் பிராந்தி புடிச்சிருக்கும். எல்லாருமா சேர்ந்து வேப்பலை அடிக்கறேன்னு அவளை ஒரு வழி பண்ணியிருப்பாங்க..."

சுகன்யாவுக்குள் ஒரு சிறு நடுக்கம் ஓடியது.

"யூ நோ சசி...? ஸ்ரீராமோட அப்பா அவசரப்பட்டு வசந்தி கல்யாணத்துக்கு முன்னாடியே எங்களுக்குப் பண்ணி வைச்சாரேன்னு இப்ப நான் ரொம்ப சந்தோஷப்படறேன்.. அதனாலதானே இந்த விஷயத்துல என்னால

வாஸந்தி | **?**

வசந்திக்கு உதவ முடிஞ்சிருக்கு. மத்த வங்க இந்தப் பிரச்னையை உணர்ச்சிவசப் படாம பார்த்திருப்பாங்களான்றது சந்தேகம் தான்."

''ஏன்... ஸ்ரீராம் கூடவா அப்படி பார்த் திருக்க மாட்டார்...?''

"ஸ்ரீராமை விடு... ஹி இஸ் எ ரேர் ஜெம். ஆனா வசந்தியால ஸ்ரீராம்கிட்டே மனசு திறந்து பேச முடி யுமா...? அவன் வெளிநாடு போற நேரத்துல இதையெல் லாம் சொல்லி டென்ஷனாக்க வேண்டாம்னு நானும் மறைச்சுட்டேன்."

"உன் ஸ்ரீராம் நிஜமாகவே ரொம்ப அதிர்ஷ்டசாலி சுகன்யா!'' என்றபடி இடைரென்று கட்டிப் பிடித்துத் தோள்களிலிருந்து தொங்கி ஊசலாடினாள் சசி.

"ஏய்! வலிக்கறது..'' விடுவித்துக் கொண்டு கேட்டான் : "சரி... நீ எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?''

"ஐயோ! வேண்டாம்பா... அப்புறம் ரப்பர் செருப்போட சந்திரமண்டலத்துக்குப் போக முடியுமா...? இப்படி அரை நிஜாரோட திரிய முடியுமா? இல்லை, என்னைப் பார்த்துப் பொறாமைப்படத்தான் உன்னை மாதிரி ஒரு அசடு இருக்குமா...?''

"விளையாடாதே! நான் சீரியஸா கேட் கறேன்."

"பண்ணிக்கலாம். ஆனா....'' விழிகளை உருட்டி, புருவங்களை உயர்த்திச் சொன்னாள் சசி. "ஸ்ரீராம் மாதிரி ஒரு ஜெம் ஆஃப் எ மான் கிடைக்கணுமே..."

தங்க நகை பரிசு!

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"நான் எதுக்கு?'' என்றான் சேகர், விஷயத்தைச் சொன்னதுமே. வசந்தி ஓசையின்றி அழுது கொண்டிருந்தாள்.

கோப்பைகளில் டீ அப்படியே ஆடை படிந்து ஆறிக் கிடந்தது. 'அதைக் குடித்து முடித்த பிறகு சொல்லியிருக்கலாமோ?'

"இல்லை சேகர்... டாக்டர் இரண்டு பேரையும் வரச் சொல்லியிருக்கார்..."

"எனக்கொரு பிரச்னையுமில்லே..'' குரலுடன் சேகரின் கண்களிலும் கோபம் மின்வெட்டியது.

"இப்ப யாருக்கும் எந்தப் பிரச்னையும் இல்லே. கொஞ்சம் மனோதத்துவ உதவி தேவைப் படுது: அவ்வளவுதான். அதைப் பெரிய சிகிச்சையா நினைச்சுக் குழப்ப வேண்டாம். சின்ன வழிகாட்டல்..."

''எனக்கது அவசிய மில்லே..."

"சரி, வசந்திக்கு அவசியம்னு ஒத்துக்கறீங்களா?"

"ஊம்..."

''அப்ப அவளுக்குத் துணையா வர்றதா நினைச்சு வாங்க.... ப்ளீஸ். அவ டாக்டரைப் பார்க்கும்போது கூட இருக்கறதுக்காக..."

"எங்கேயிருக்கு அவர் கிளினிக்?''

"மந்தைவெளில..." - முகவரியைச் சொன்னாள்.

''ஐயோ! வேண்டவே வேண்டாம் அந்த ஏரியா பூரா எங்க கிளையன்ட்ஸ் இருக்காங்க யாராவது ஒருத்தர் பார்த்துட்டாங்கன்னா நான் ஒழிஞ்சேன்..."

"ப்ளீஸ் சேகர், அப்படி நினைக்காதீங்க. ஒரு நிமிஷம்தான் ஆகும், காரை விட்டு இறங்கி கிளினிக் உள்ளே போகறதுக்கு. அதுக்குள்ளே எத்தனை பேர் பார்த்துடப் போறாங்க...?''

"சுகன்யா! உங்களுக்குத் தெரியாது. என் கார் ஒரு இடத்துல நிக்கறதுன்னாலே நாலு பேர் அதை அடையாளம் தெரிஞ்சுக்கிட்டு என்னைப் பார்க்கணும்னு வந்துடுவாங்க. அவ்வளவு நண்பர்கள் எனக்கு... நான் இந்த மாதிரி ரிஸ்க்கெல்லாம் எடுக்கறதா இல்லை... நீங்க வசந்தியோட ஆட்டோல போய்ட்டு வாங்க..."

அலுப்புடன் கோபமும் வந்தது. 'டாக்டரை சந்திக்க வராமலிருக்க சாக்கு போக்குச் சொல்கிறான். ஏதோ பிரச்னை... இல்லாவிட்டால் இவனுக்கும் வசந்தியைப் போல் இவ்விஷயத்தில் ஏதேனும் அசாதாரண உணர்வு இருக்குமோ...?'

'தேவையில்லாத சந்தேகம்' என்று அதை அப்புறப்படுத்திவிட்டு, பொறுமையை வலிய அழைத்து தனக்குள் இறுத்திக் கொண்டான் சுகன்யா.

"ஏன் சேகர் இவ்வளவு பயப்படறீங்க...? அப்படியே யாராவது பார்த்துட்டாத்தான் என்ன...? சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே போகறது, திருட்டுத்தனமா செய்ய வேண்டிய தப்புக்

காரியமில்லையே... நமக்கு உதவி தேவை, நாம போறோம்... வேற ஏதோ ஜுரம், வலி வந்தா பிசிஷியன்கிட்டே போகிற மாதிரி..."

"உதவியே தேவைப்படாதவங்களுக்கு, இப்படி உதவின்னு போய்க் கேக்கறதுல உள்ள சிறுமையும் கொடுமையும் எங்கே புரியப் போகுது..." – சேகரின் அடிபட்ட பார்வை சங்கடப்படுத்தியது.

"வேண்டாம்னா விட்டுட வேண்டியது தானே மன்னி..." ஜன்னல் அருகே நின்று வெளியே வெறித்துக் கொண்டிருந்த வசந்தி, முதல் முறையாக வாய்திறந்து பேசினாள்.

இருவரும் சின்னக் குழந்தைகளைப் போல் அடம்பிடிக்கிறார்கள். 'ஊட்டி விடு' என்று கெஞ்சிவிட்டு பிறகு சோற்றைப் புறங்கையால் தள்ளும் குழந்தைகள்! விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

"சரி" என்றாள் சுகன்யா. "இன்னும் இரண்டு நாள் டயம் எடுத்துக்குங்க... யோசிச்சுப் பார்த்து பதில் சொல்லுங்க. நான் திரும்பவும் புதன் கிழமை போன் பண்றேன்.

"இதுல யோசிக்க என்ன இருக்கு...? கொட்டிவாக்கம், சோழிங்கநல்லூர்னு ஏதாவது கண்காணாத இடத்துல டாக்டர் இருந்தா சொல்லுங்க.... வந்து பார்க்கறோம். மந்தைவெளியில போய் கன்ஸல்ட் பண்றது தலைல மண்ணை அள்ளிப் போட்டுக்கறா மாதிரி..."

'இப்படியே எல்லாரும் நினைச்சாங்கன்னா சைக்ரியாட்ரிஸ்ட்களெல்லாருமே புறநகர் பக்கம்தான் இடம்பெயரணும்...' வார்த்தைகளை வெளிப்படுத்தாமல் எண்ணத்துக்கு அணைபோட்டாள் சுகன்யா.

"**டா**க்டர் மகேஷ்...?"

"ஸ்பீக்கிங்..."

"நான் சுகன்யா. நேத்து வந்திருந்தேன். ஒரு தம்பதியோட பிரச்னை சம்பந்தமா..."

"யெஸ் சுகன்யா. ஞாபகமிருக்கு. அப்பாயிண்ட்மெண்ட் வேணுமா? ஒரு நிமிஷம்..."

"இல்ல டாக்டர், ஸாரி... உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன். சம்பந்தப்பட்டவங்களை என்னால கன்வின்ஸ் பண்ண முடியலை. உங்க க்ளினிக் வரவே பயப்படறார் அவர்... அந்த ஏரியா முழுக்க கிளையன்ட்ஸ் இருக்காங்களாம் அவருக்கு. யாராவது பார்த்துட்டா என் கதி அதோகதிங்கறார்."

"அவர் என்ன வேலைல இருக்கார்மா?"

"விளம்பர ஏஜென்ஸி வைச்சிருக்கார் டாக்டர். சேகர் அஸோஸியேட்ஸ்"

"ஓ! தெரியுமே. காஜல் சோப், முல்லை பட்டு சென்டர், விளம்பரமெல்லாம் அவங்களுதுதானே.... கவனிச்சிருக்கேன். அவர் பயம் நியாயமானதுதான்மா. இந்த ஏரியாவுல அவருக்கு வேண்டியவங்க எக்கச்சக்கமா இருக்காங்க."

"கொட்டிவாக்கம், சோழிங்கநல்லூர்ல யாராவது டாக்டர் இருந்தா சொல்லுங்க, வரேன்ங்கறார்... இப்ப நான் வேற டாக்டரைத் தேடணும்..."

"வேண்டாம் சுகன்யா...!"


"டாக்டர்...?"

"என் வீடு சோழிங்கநல்லூர்லதான் இருக்கு. விலாசம் தர்றேன். அங்க கூட்டிட்டு வாங்க. அந்த இடத்துல அவர் பயப்படற மாதிரி யார் கண்ணுலையும் பட்டுட மாட்டார்."

"தாங்க்யூ டாக்டர். நான் அவங்க சௌகரியம் கேட்டுட்டுத் திரும்பவும் கூப்பிடறேன்."

நேரம் குறித்து, வசந்தியையும் சேகரையும் சோழிங்கநல்லூர் அழைத்துப் போனபோது டாக்டர் மகேஷின் வார்த்தையும் சேகரின் எதிர்பார்ப்பும் ஒருசேரப் பொய்யாகிப் போயின!

(தொடரும்)



தனக்குக் கிட்டும் ஊதியத்தின் மதிப்பை விட தனது உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் முன்னேற முடியும்.

– ஆபிரகாம் லிங்கன்

தகவல் : குணாபார்த்திபன்

- மனிதர்களுடைய மனச்சாட்சி அவர்கள் நிலையை நிர்ணயிப்பதில்லை. அவர்கள் நிலைதான் மனச்சாட்சியை நிர்ணயிக்கிறது.

– காரல் மார்க்ஸ்

- **எதிரிகள் இல்லாமல் முன்னேற்றம் இல்லை.**

- வில்லியம் பிளேக்

- கொள்ளைக்காரர்கள் பணத்தைக் கொடு, இல்லையேல் உயிரைக் கொடு என்று சொல்லி வருகிறார்கள். பெண்களோ இவை இரண்டையுமே கொள்ளை கொள்கிறார்கள்.

- சாமுவேல் பட்லர்

தகவல் : வெ. ஆனந்தி



GOKULAM

The monthly magazine for children

JANUARY '97 ISSUE

GOKULAM
47, JAWAHARLAL NEHRU ROAD,
EKKADUTHANGAL,
CHENNAI - 600 097.

"கமலின் சாதனையை வரலாறு புகழும்!"

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்!

✉ தலையங்கம் பார்த்தேன். 'சூப்பர்மா' என்று சும்மா எழுதிவிட்டுப் போவது சரியல்ல என்பதால் கொஞ்சம் விரிவாகவே எழுதுகிறேன்.

தமிழ் என்றுமே தமிழனைப் பொறுத்தவரை முத்தமிழ்தான்! ஆனால், அது இயல், இசை, நாடகம் அல்ல. மாறாக – 1. கலப்புத்தமிழ், 2. நடைமுறைத் தமிழ், 3. தனித் தமிழ் – என்பதுதான் அது! (நாம் நடுத்தர ஜாதி?)

'தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ஒருவன், தமிழே அறியாமல் பிஎச்.டி. வரை பட்டம் பெற்றுப் பதவியும் பெறக் கூடிய நிலை'யைக் கண்டித்திருப்பது சரியானது. 'உயர் கல்வி வகுப்புகளில் ஆங்கிலப் பாடநூல்களையே பயன்படுத்தலாம்; விளக்கங்களை மட்டும் தமிழில் தரலாம்' என்னும் ஒரு பகுதி சரி. 'இன்னும் எத்தனை வருடம் அப்படி நடக்கலாம்?' எனும் கேள்வி மறு பகுதியாக இருந்திருக்க வேண்டும். 'எதிர்காலத்தில் விஞ்ஞானத்திலோ, மருத்துவத்திலோ உயர்கல்வி பெற அயல்நாடுகளுக்குப் போகும் ஒருவர் 'தமனி–சிரை' அறிந்திருந்தால் மட்டும் போதுமா?' எனும் கேள்வியே தவறு. "எதிர்காலத்தில் உயர்கல்விக்காக வெளிநாட்டுக்கே போகத் தேவையில்லாமல் அனைத்து உயர்கல்வியையும் தமிழில் தர தமிழ்க்குடிமகனார் என்ன முயற்சி எடுத்து வருகிறார்?" என்றல்லவோ கேட்டிருக்க வேண்டும்!

மொத்தத்தில் இது வெறும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி விடக்கூடிய சங்கதியல்ல! மக்கள் மன்றத்தில் தொடர வேண்டிய மாற்றம்.

உங்கள் தலையங்கம் அந்த விவாதத்தைத் தொடரும் வகையில், அருமையான ஒன்றுதான்.

புதுக்கோட்டை,
நா. முத்துநிலவன்.

✉ இந்துமதி தமது வனவாசத்தை விரைவில் முடித்துக் கொண்டு எழுத்துலக ராஜ பாட்டையில் மீண்டும் கம்பீரமாக நடக்க வேண்டும்.

சேலம்-2, சூர்ய நிலா.

✉ கவர்னர் சென்னா ரெட்டியின் பல்வேறு இயல்புகளை இனம்காட்டிய தொகுப்புக் கட்டுரை அவருக்குச் சிறந்த அஞ்சலி செய்யும்விதத்தில் அமைந்தது!

சிதம்பரம்,
த.கு.பா. பட்டுதுரை.

✉ "இங்குள்ளவர்கள் மைக்கேல் ஜாக்சனின் 'பாப்'பிலும் 'பேட்டா ராப்'பிலும், மேலை நாட்டு இசைகளிலும் மூழ்கித் திரிய, நம்மூர் பரதக்கலையை அமெரிக்காவில் சத்தமில்லாமல் காதரீன் – குன்னிராமன் தம்பதிகள் கற்றுத் தருகிறார்கள் என்பதை அறியும் போது நெஞ்சம் நெகிழ்கிறது!

விராலிமலை, ச. நாகராஜன்.

✉ 'பிரசன்னா' வழங்கிய 'தி.நகரில் ஒரு திடீர்க் கச்சேரி' படித்ததும், அந்த நாத மழையில் நனையக் கொடுத்து வைத்த மக்களை எண்ணி ஏக்க மூச்சுத்தான் வந்தது!

திருச்சி – 17,
உஷா முத்துராமன்.

✉ அவ்வை சண்முகி படத்தில் கல்கி விமர்சனம் பற்றி, தணிக்கைக் குழு உறுப்பினர் சுசிலா பத்மனாபன் அவர்கள் கருத்தைப் படிக்க, சங்கடமாக உள்ளது. ஒழுக்க மீறல்களை, 'சிறிதுதானே' என்று விடப்பட்ட காரணமே இன்றைய அரசியல்வாதிகளின் கைமூட்டு, ஊழல்களுக்கு அடிப்படை. பாலியல் உணர்வைத் தூண்டும் காட்சிகளையும் இரட்டை பொருள் தரும் வசனங்களையும் கமல்ஹாசன் போன்றவர்கள் தவிர்த்து இதைவிடச் சிறப்பாகச் செய்திருக்க முடியும். அப்படிச் செய்யாததை, அதனால் விளைந்த வேதனையைத்தான் 'கல்கி' உணர்த்தியது. சுசிலா பத்மனாபன் அவர்களின் சொந்தக் கருத்து என்பது வேறு. கல்கியின் சமுதாய அக்கறை என்பது வேறு.

வேலூர்,
காமாட்சி சத்தியநாராயணன்.

✉ "அவ்வை சண்முகி" விமர்சனம் படித்ததும் தோன்றிய முதல் உணர்ச்சி வருத்தம் தான். நகைச்சுவைப் படமாக முத்திரை விழுந்தபின், அதனை நகைச்சுவைக் கண்ணோட்டத்தில் பார்ப்பது தான் சரி... அதை விட்டு, 'நல்ல கலைஞனின் "சரிவை" சகிக்க இயலவில்லை' என்பது அபத்தம்! கமல்ஹாசனுக்கு ஆதரவாக வாதிட்ட சென்சார் போர்டு உறுப்பினர் சுசிலா பத்மநாபனை ஆர்.பி.ஆர். வேண்டுமானால், கமலுக்கு பீஸ் வாங்காத வக்கீலாக வர்ணித்து, கிண்டலடிக்கலாம்! நிஜமாகவே நாங்கள் கமலுக்கு அப்படித்தான். நாளை உலகப் புகழ் பெறவிருக்கும் எங்களின் இதயங் கவர்ந்த சூப்பர் ஆக்டர் கமலின் சாதனைப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வரலாற்று ஏடுகள் "புதுமைப்பித்தன்" என்று அவரைப் புகழும்... அதில் எங்களுக்கும் ஒரு மாபெரும் பங்கு உண்டு என்பதில் எங்களுக்கு எல்லையில்லா ஆனந்தம்.

மதுரை,
மதுரை மாவட்ட கமல் ரசிகர்கள்.

சசிகலாவுக்கு சட்டம் தெரியாது என்கிறாரே ஜெ..?



• ஜெராக்ஸ்!



• திடீர் பிரபலம்!

● எம். ராஜேந்திரன், வால்குடி.

? முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சிறை வாழ்க்கை பற்றி...?

! சிறை வாழ்க்கையா அது...? சொகுசு வாசம்! சட்டத்தின் முன் அனை வரும் சமம் எனில் அந்தச் சலு கைகளை எங்களுக்கும் கொடுங்கள் என்று தடா கைதிகள் கேட்பதில் அர்த்தமிருக்கிறது.

● எஸ்.ஏ.என். செந்தில் குமார், சூலூர்.

? 'கல்கி பத்திரிகையை எந்த பா.ம.க. தொண் டனும் படிப்பதில்லை' என ராமதாஸ் கூறியுள் ளது பற்றி...?

! முன்னர் ராமதாஸ் செய்த நல்ல காரியங் களை எடுத்துக்காட்டிய பேட்டியும் அட்டைப் படத்தில் அவர் மரம் நடுவதும் பிரசுரமான போது, பல நூறு பிரதி களை விலை கொடுத்து வாங்கி வினியோகித் தார்களே... அவர்கள் பா.ம.க.வைச் சேர்ந்தவர்கள் அல்லவா...?



• காமெடி—



• ...எப்படி...?

● ஜான். சாமுவேல், பம்பாய் – 19.

? கிரிக்கெட் வீரர்களுக்குக் கிடைக்கும் பிராபல்யம் மற்ற விளையாட்டு வீரர்களுக்குக் கிடைப்பதில்லையே... ஏன்? (உம் : தன்ராஜ் பிள்ளை)

! தமது விளையாட்டை விமர்சித்த ஒரு ரசிகரை, கூட்டத்தில் தேடிக் கண்டுபிடித்து அடித்துத் தள்ளிய தன்ராஜ் பிள்ளையும் கூட, ஏகமாக பிரபலமடைந்து விட்டாரே...!

● அ. ஷண்முகசுந்தரம், சென்னை – 64.

? 'சசிகலாவுக்கு இங்கிலீஷ் தெரியாது; சட்டம் தெரியாது... அதனால் அதிகாரிகளால் அவ ரைத் துன்புறுத்த முடிகிறது...' என்கிறாரே ஜெயலலிதா!

! ஆனால், கருட்டத் தெரிந்திருக்கிறதே...!

● ஜெ. ரஜினி ராம்கி, மயிலாடு துறை.

? 'கலைஞர் ஆட்சி யில் கருத்துச் சுதந் திரம் இல்லை' என்கிறாரே வை.கோ...?

! புலிகளைப் புகழும் சுதந்தரத்தைக் குறிப் பிடுகிறார் போலும்...!

● எஸ். சேகர், திருவாரூர்.

? 'ஜெ'யின் வீழ்ச்சி யாருக்கு லாபம்?

! தூய்மையான அரசியலுக்கு!

● எஸ். கார்த்திக், கோவை.

? 'அவ்வை சண்முகி title song grossly inspired by 'வளையோசை கலகலகலவென...' (படம் 'சத்யா'; இசை இளையராஜா...) இது எந்தவிதத்தில் நியாயம்?

! தேவாவுக்கு, ஜெராக்ஸ் தேவா என ஒரு செல்லப் பெயர் இருப்பது உங்களுக்குத் தெரியாது போலும்...!

● திருப்பூர் பாசு, திருப்பூர் – 4. ☐

? உண்மைகளை மட்டுமே பேசிக் கொண்டு இந்த உலகத்தில் உயிர் வாழ்ந்து விட

☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
திருப்பூர் பாசு,
202, தென்னம்பாளையம்,
திருப்பூர் – 641 604.

முடியுமா...?

! முடியும். ஆனால், பொய் பேசினாலோ, உயிர் போன பிறகும் அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்பதற்கு சமீபத்திய உதாரணம் : விமான விபத்தில் இறந்த போலி பாஸ் போர்ட்தாரர்களின் உடல்கள் கேட்பாரற்றுக் கிடப்பது!

● **எம். இரத்தினவேல், பொன்மலை.**

? குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருப்பவர்கள், அவர்களின் படிப்புக்காக இருபதாயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற சுப்ரீம் கோர்ட் உத்தரவு குறித்து...?

! நல்ல உத்தரவு என்றாலும் நிரந்தரப் பரிகாரம் அல்ல... குழந்தைகளை நம்பித்தான் குடும்பம் பிழைக்க வேண்டும் என்கிற பொருளாதார நிலை மாறினால்தான் பிரச்னை தீரும்.

● **எம். எம். அபிதாட்சயா, மதுரை – 10.**

? பங்காரப்பா, பழைய காங்கிரஸில் சேர்ந்து விட்டது நியாயமா?


! அவர் மட்டுமா...? விரட்டப்பட்ட பழம்பெருச்சாளிகள் வேறு பலவும் காங்கிரஸ் வீட்டுக்குள் திரும்பவும் வந்து கொட்டமடிக்கப் போகின்றன! அரசியலில் நியாய அநியாயங்களை யார் பார்க்கிறார்கள்...? எல்லாம் சந்தர்ப்பவாதம்தான்.

● **கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.**

? 'ஒரு பவுன் நூறு ரூபாய் என்று அந்தக் காலத்தில் வாங்கியதையெல்லாம் இன்றைய மார்க்கெட் நிலவரப்படி மதிப்பிட்டுள்ளனர் லஞ்ச ஒழிப்பு போலீஸார்...' என்று ஜெயலலிதா கூறியிருப்பது பற்றி!

! சினிமாவில் சம்பாதித்த போது வாங்கியவை; பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு சேர்த்தவை; முதல்வராகி ஒரு ரூபாய் சம்பளம் பெற்றபோது கொள்ளையடித்தவை என்று

மறந்து விட்டார்!



'சுதந்திர' புகார்!



சுக வாழ்க்கை!



நியாயம்தானா?



ஜாலி மூட்!





கபிலின் கண்டனம்!

பகுத்துப் பார்த்து மதிப்புப் போட்டு, குற்றச் சாட்டு சமர்ப்பிப்பது கஷ்டம்தான். ஆனால் இயலாத காரியம் அல்ல....

● **சிவராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.**

? கவுண்டமணி – மணிவண்ணன் காமெடி நடிப்பு – ஒப்பிடுக...?

! இரண்டும் வேறு வேறு துருவங்கள். கவுண்டமணியின் காமெடியை தியேட்டரில் மட்டுமே ரசிக்கலாம். டையரை (அதாங்க இலேசான – நாசூக்கான கிண்டல்) நினைத்து நினைத்து சிரிக்க வைப்பது மணிவண்ணன் ரகம்.

● **எஸ். வைத்திய நாதன், மதுரை - 14.**

? சங்கீதா பிஜ்லானியைக் கைப்பிடித்த பிறகு அசாருதீன் காட்டில் ஒரே ரன் மழையாய் இருக்கிறதே, கவனித்தீர்களா?

! கிரிக்கெட்டில் மட்டுமின்றி வீட்டிலும் காப்டன் பதவியைத் துறந்ததால் ஒரு ஜாலி மூடில் விளாசியிருக்கலாம்...!

● **ஜி. மாஜினி, சென்னை – 52.**

? இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் மூலமாக ஆதாயம் அடைந்தவர்களுள் முக்கிய த.மா.கா. தலைவர்களும் அடங்குவர் என்று செய்திகள் வந்துள்ளதே...?

! த.மா.கா.வின் முக்கிய பிரமுகர் இவ்விஷயத்தில் சம்பந்தப்படவில்லை என்று தற்போதைய இந்தியன் வங்கி தலைவர் எழுதியே கொடுத்திருப்பதாக நிதியமைச்சர் ப. சிதம்பரம் பார்லிமெண்டில் தெரிவித்திருக்கிறார். இன்றைக்கு அதனினும் முக்கியமான பிரச்னை, இந்தியன் வங்கி முன்னாள் தலைவர் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கையினால் இதர வங்கித் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள பயம். இந்த பயம் காரணமாக கடன் வழங்குவதில் தயக்கமும் தாமதமும் அதிகரிக்க, தொழில் துறையில் பெரிய தேக்கமே உண்டாகியிருக்கிறது.

● **கே. ராஜாபாலு, சேலம் – 1.**

? நம்மூர் ராமனை அணியில் சேர்த்தது ரொம்ப சந்தோஷம்தான்... அதே சமயம், அற்புதமான ஆட்டக்காரர்களான ஜடேஜா, ஜோஷி, ராபின் சிங் ஆகியோரை நீக்கியது என்னங்க நியாயம்?

! அதானே! அதிலும் ஜடேஜா நீக்கத்தை கபில் தேவே எதிர்த்து அறிக்கை விட்டிருப்பது கவனத்துக்குரியது.

ஒரு கனவும் சில நிஜங்களும்

சி.என். ராஜராஜன்

ரவீந்திரன் அதிர்ச்சியிலிருந்து விடுபடாமலேயே கண் விழித்துக் கொண்டான்.

இதுவரை கண்டது வெறும் கனவுதான் என்று விளங்கவே அவனுக்குச் சிறிது நேரம் ஆயிற்று.

'சே... எவ்வளவு பயங்கரமான கனவு!'

அவன் உடம்பு மெல்ல நடுங்கியது. தலைக்குமேல் சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறியின் சப்தத்தைவிட, இதயம் வெகு வேகமாகத் துடிக்கும் ஓசைதான் அவனுக்குப் பெரிதாகக் கேட்டது.

இனி உறங்க முடியாது என்று எழுந்தான். கடிகாரத்தில் மணி பார்த்தான். மூன்றுதான் ஆகியிருந்தது. இன்னும் மதியப் பொழுது முடிந்திருக்கவில்லை.

மின்விசிறியை நிறுத்திவிட்டு வெளியில் வந்தான். முகத்தைக் கழுவிக் கொண்டான். குளிர்ந்த நீரைக் குடித்து விட்டு சோபாவில் சாய்ந்தான்.

மனம் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது. மறுபடி மறுபடி அந்தக் கனவு ஞாபகத்திற்கு வந்தது.

மருத்துவமனையில், அப்பாவின் அறைக்கு வெளியே நின்று ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறான் அவன். அப்போது தற்செயலாக அப்பாவைத் திரும்பிப் பார்க்கிறான். அவன்து பார்வையில் படுகிற அப்பா கழுத்துவரை போர்த்திக் கொண்டு கண்மூடிப் படுத்திருக்கிறார். முகம் அமைதியாக இருக்கிறது.

அதைப் பார்த்து அவன் மனம் ஏனோ கலவரமடைகிறது. அவசரமாக அறைக்குள் நுழைகிறான். அப்பாவை நெருங்குகிறான். "அப்பா... அப்பா" என்று முதலில் மெல்லவும், பின் உரத்தும் கூப்பிடுகிறான். பதிலே இல்லை. அவன் கலக்கமடைந்து அவர் தோள் களைப் பிடித்து உலுக்குகிறான். அவர் தலை தலையணையிலிருந்து சரிகிறது. ரவீந்திரன் "அப்பா" என்று பெரும் குரலில் அலறுகிறான்.

அப்போதுதான் அவனுக்கு விழிப்பு வந்தது.

இது வெறும் கனவுதானா என்று அவனுக்குள் ஒரு சந்தேகம் உருவானது.

ஏனென்றால், அவன் அப்பா இப்போது நிஜமாகவே மருத்துவமனையில்தான் இருக்கிறார். நெஞ்சு வலிக்காக, தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருந்து விட்டு, இரண்டு நாட்களுக்கு முன்புதான் பொதுப் பிரிவுக்கு அவரை மாற்றியிருந்தார்கள். இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் அவரை டிஸ்சார்ஜ் செய்து விடலாம் என்றும் டாக்டர் சொல்லியிருந்தார். அவனுக்கு அதைக் கேட்டபோது அப்பாடா என்றிருந்தது.

ஆனால் அந்த நிம்மதியை, இப்போது வந்த கனவு கலைத்துப் போட்டுவிட்டது.

அந்தக் கனவே ஒரு கெட்ட சகுனம் போல அவனுக்குத் தோன்றியது.

அவன் மனத்தில் சந்தேகங்களும், சஞ்சலங்களும் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டே இருந்தன.

ரத்த சம்பந்தம் கொண்டவர்களுக்கு ஏதேனும் கெடுதல் நேரும்போது உள்மனம் அதை எப்படியாவது உணர்த்திவிடும் என்பார்களே... கதைகளில் படித்ததும், சினிமாக்களில் பார்த்ததுமான அந்த மாதிரியான கனவுகள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

அதுபோல் வந்ததுதான் இந்தக் கனவா?

அப்படியானால்... அப்படியானால்...

அப்பா இப்போது மருத்துவமனையில் இறந்துதான் போய் விட்டாரா?

அவனுக்கு 'திக்'கென்றது. அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை.

அப்படியெல்லாம் நிகழ்ந்திருக்கக்கூடாதே என்று கவலையாகப் போய் விட்டது. அதுவரை வேண்டாத கடவுள்களை மானசீகமாக வேண்டிக் கொண்டான்.

அலைபாய்ந்த மனதை திசைதிருப்ப செய்தித்தாளை எடுத்தான். செய்திகளை

உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை.

ரிமோட் கண்ட்ரோலை எடுத்து பட்டனை அழுத்தினான். டீ.வி.யில் ஓடிக் கொண்டிருந்த படத்தோடு ஒன்ற முடிய வில்லை.

எல்லாமே பைத்தியக்காரத் தனமான பயம் என்று நம்பிக்கை கொள்ளப் பார்த்தான். முடியவில்லை. அந்தக் கனவை அப்படியே அலட்சியம் செய்துவிட்டு இயல்பாக இருக்க முடியவில்லை.

திரும்பத் திரும்ப அந்தக் கேள்விகளே அவனைத் துளைத்தன.

பதில் தெரியாத கேள்விகள். அதனாலேயே அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

வீட்டில் யாரும் இல்லாத தனிமையும், வெற்று அமைதியும் அவனது கலக்கத்தை இன்னும் இன்னுமென்று அதிகப்படுத்திக் கொண்டே இருந்தன.

என்ன செய்வது என்று யோசித்தான். பேசாமல் மருத்துவமனைக்கு போன் செய்து விசாரித்து விடலாம் என்று முடிவு செய்தான்.

பிறகு ஒருகணம் கூடத் தாமதிக்காமல் விரைவாகக் கிளம்பினான்.

கடைசியாக வாசல் கதவைச் சாத்தி, பூட்டிக் கொண்டிருந்தபோது ஆட்டோ சப்தம் கேட்டது.

ரவீந்திரன் திரும்பிப் பார்த்தான்.

ராதா ஆட்டோவிலிருந்து இறங்கினாள்.

அவள் மருத்துவமனையிலிருந்துதான் வருகிறாள். அவள் என்ன செய்தி கொண்டு வருகிறாளோ என்று நினைத்து ரவீந்திரன் திகிலடைந்தான்.

அவள் அவனை நெருங்கியதும், பதற்றமாக அவன் கேட்டான்.

"அப்பா இப்ப எப்படி இருக்கார்?"

அவள் சாவகாசமாக, "பரவாயில்லை. நேத்திக்கு, இப்பப் பரவாயில்லை. கஞ்சி குடிச்சார். கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தார்" என்றாள்.

அந்தப் பதில் அவனைச் சமாதானப்படுத்தவில்லை.

"நீ ஹாஸ்பிடலை விட்டுப் புறப்படறப்ப அப்பா என்ன பண்ணிக்கிட்டிருந்தார்?"

இதற்கு அவள் சொன்ன பதில், அவனை திடுக்கிட வைத்து விட்டது.

"நல்லா தூங்கிக்கிட்டிருந்தார்!"



"தூங்கிக்கிட்டிருந்தாரா? நல்லா பார்த்தியா? தூக்கத்தில்தான் இருந்தாரா?" என்று அவன் கேட்டபோது குரல் கொஞ்சம் நடுங்கியது.

"ஆமாம். தூங்கிக்கிட்டுத்தான் இருந்தார். ஏன் இப்படி ஓர்ரி பண்ணிக்கறீங்க? என்னாச்சு உங்களுக்கு?" என்றபடியே அவன் கையிலிருந்த சாவியை வாங்கி கதவைத் திறந்து உள்ளே போனாள் அவள்.

அவன் வாசலிலேயே உறைந்து போய் நின்றிருந்தான்.



இரண்டு வயதில் தன் பெயரை எழுதிக் காட்டுகிறாள் அந்தச் சிறுமி. மூன்று வயதில் முட்டை ஆம்லெட் தயாரிக்கிறாள். ஐந்து வயதில் நூலகத்துக்குப் போய் புத்தக வேட்டை – காமிக்ஸ் ஆர்வம் அல்ல; 'பெரிய' புத்தகங்களின் மீது காதல்!

பெற்றோர் இவள் திறமையை அறிந்து கொள்ளாமல் அலட்சியம் காட்டுகிறார்கள். பணமும், பணம் சார்ந்த வாழ்க்கையுமே அவர்கள் குறி. பள்ளியில் சேர வேண்டும் என்று நச்சரிக்கும் மகளை, ஓர் 'ராட்சஸி' நடத்தும் பள்ளியில் சேர்த்து விடுகிறார்கள். நல்லவேளையாக அங்கு ஓர் இளம் ஆசிரியை மழலை மேதையை இனம் கண்டு கொண்டு ஊக்குவிக்க, இனிய நட்பு மலர்கிறது.

'கடவுளே' என்று அவன் மனம் அரற்றியது.

ஏதோ அசம்பாவிதம் நேர்ந்து விட்டதாக அவனுக்குள் உறுதிப்பட்டு விட்டது.

'அந்தக் கனவு வெறும் கனவல்ல; நிஜம்; நிகழ்ந்து விட்ட யதார்த்தம். எல்லோரையும் ஏமாற்றி விட்டு, தூங்குவது போன்ற தோற்றத்துடனேயே அப்பா இறந்துதான் கிடக்கிறார்!'

அதற்கு மேல் அவனால் தாங்க முடியவில்லை.

"ஹாஸ்பிடல் போய்ட்டு வரேன். கதவைத் தாழ் போட்டுக்க" என்று உள்பக்கம் நோக்கிக் குரல் கொடுத்துவிட்டு, தனது ஸ்கூட்டரிடம் வந்தான்.

ஒரே உதையில் அதைக் கிளப்பினான்.

"இவ்வளவு அர்ஜென்டா ஏன் கிளம்பறீங்க?" என்றபடியே ராதா வாசலுக்கு வந்தான்.

அவளிடம் அந்தக் கனவைப் பற்றிச் சொல்லி விடலாமா என்று நினைத்தான். அவள் ஆறுதலாக நாலு வார்த்தை சொன்னால் மனத்தவிப்பு கொஞ்சம் குறையுமே என்று உள்ளூர ஆசையாக இருந்தது.

ஆனாலும் தயங்கினான். தன் கவலையும், அச்சமும் கேலிக்குள்ளாகி விடுமோ என்று நினைத்தவன், அவளிடம் ஏதும் சொல்லாமலே புறப்பட்டான.

ஸ்கூட்டர் விரைந்து முன்னேறிப் போக அவனது ஞாபகங்கள் மௌனமாகப் பின் தங்கி விட்டன.

அப்பாவின் முழு வாழ்க்கையும், அவன் மனத்தில் காட்சி காட்சியாகத் தோன்றி மறைந்தது. அவருடனான தனது வாழ்வையும் அந்த நினைவுகளில் சேர்த்துக் கொண்டான்.

அப்பாவுக்கு இப்போது எழுபத்தி எட்டு வயது என்பது அநத கணத்தில் அவனுக்கு நினைவு வந்தது. அது அவனை இன்னும் கொஞ்சம் கலவரப்படுத்தியது.

மனத்தில் பொங்கிய ஞாபகப் பிரவாகத்தோடு ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு போவது எளிதாக இல்லை.

கைகளும் கால்களும் கண்களும் மூளையும் தன்னிச்சையாகச் செயல்பட்டு, ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டிருந்தன.

ஆர்.கே. ஹாஸ்பிடலுக்குள் வேகமாக நுழைந்தான் ரவீந்திரன்.

அது பார்வையாளர் நேரம். கூட்டம் அதிகமாக இருந்தது.

கண்ணில் பட்ட நர்ஸை விசாரிக்கக்கூட விரும்பவில்லை அவன்.

நீண்ட வராந்தாவில் நடந்து, மாடிப்படி ஏற ஆரம்பித்தான்.

அப்போது மேலேயிருந்து இருவர் பேசிக் கொண்டே அவனைக் கடந்து போனார்கள். அவர்களில் ஒருவர் மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டு போனது அவன் காதில் தெளிவாக விழுந்தது.

"மாடில இருந்த வயசான ஒரு கிழவர்... ஹார்ட் பேஷண்டாம். இறந்துட்டார். பத்து நிமிஷம்தான் ஆச்சாம்!"

ரவீந்திரனுக்குச் சந்தேகம் முழுவதும் தெளிந்து விட்டது.

'அது அப்பாவேதான்.'

அவன் இதயம் வினாடிக்கும் குறைவான நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டு, பின் துரித கதியில் துடிக்க ஆரம்பித்தது.

துக்கம் தொண்டையை அடைத்தது. கால்

மடில்டா

இன்றைய உலகின் முக்கிய பிரச்னைகளில் ஒன்று கதைக்கரு. பாத்திரத்துக்குப் பொருத்தமான நடிக, நடிகைகள். பெரும்பாலும், தேர்ந்த காமிராக் கோணங்கள்.

ஆனால் வசூலை மனத்தில் கொண்டோ என்னவோ மழலை மேதையாக மட்டுமில்லாமல் அபூர்வ சக்தி கொண்டவளாகவும் மடில்டா சித்திரிக்கப்படுகிறாள். (கோபத்துடன் உற்றுப் பார்த்தால் டீவி செட் உடைகிறது, வீட்டுக்குள்ளிருந்து பொம்மை தானாக வெளியேறுகிறது) தவிர மகளைப் பெற்றோர் அந்த அளவுக்கு வெறுத்து ஒதுக்க எந்தக் காரணமும் தென்படவில்லை. (ஒருவேளை அதுதான் மேலைநாட்டின் லேட்டஸ்ட் நாகரிகமோ?)

தலைமையாசிரியையின் வீட்டில், அவரிடமிருந்து சிறுமியும், அவள் மனம் கவர்ந்த ஆசிரியையும் தப்புமிடம் பரபரப்பாகப் படமாக்கப்பட்டிருக்கிறது. (முக்கிய உபயம் : இசையமைப்பாளர்)

படத்தின் பாத்திரங்களெல்லாம் ஒன்று மிக நல்லவர் அல்லது மட்டமானவர்! கலவையானவர்களே காணோம்!

'மடில்டா' மூலக் கதையை எலிசபெத் ராணி படித்துப் பாராட்டினாராம். படம் குழந்தைகளுக்கும், குழந்தை மனம் கொண்ட பெரியவர்களுக்கும் ரொம்பவே பிடிக்கும்!

– குல்லூர

கள் துவண்டன. கண்ணெதிரே காட்சி ஏதும் புலப்படாதபடி பார்வை ஒருகணம் இருண்டது. மயக்கம் வரும் போலிருந்தது.

சமாளித்துக் கொண்டு இரண்டு இரண்டு படிகளாகத் தாவி ஏறி மேலே வந்தான்.

வலதுபக்கம் கடைசி அறை.

அதை நோக்கி ஓட்டமும் இல்லாத, நடையும் இல்லாத வேகத்தில் விரைந்தான். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அதற்குள் முகம் முழுதும் வியர்த்து விட்டது.

"அப்பா... அப்பா" என்று மனதுக்குள் கதறிக்கொண்டே அறைக்குள் நுழைந்தான்.

அங்கே அப்பா 'அர்த்தமுள்ள இந்துமதம்' படித்தபடி கட்டிலில் கால்நீட்டி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்.

அவனைக் கண்டதும், "வாப்பா ரவி" என்றார் வாஞ்சையோடு.

"இப்பதான் ராதா வீட்டுக்குக் கிளம்பிப் போனா. அதுக்குள் நீ வந்துட்ட...?"

அவனுக்குள் இருந்த சஞ்சலமெல்லாம் நீங்கி, ஒரு திரை விலகினாற்போலிருந்தது. மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

அவர் கால்களின் அருகே உட்கார்ந்தான்.

"இப்ப எப்படி இருக்கீங்க? தேவலாம்ல?"

'சே... ஒரு கனவு எப்படி கலங்கடித்து விட்டது!'

அவன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

ரவீந்திரனுக்கு மனத்தில் மகிழ்ச்சி வெள்ளமாகப் பெருகியது. அது கொஞ்சம் கொஞ்சமாக ஒரு குதூகலமாக மாறியது. அதை அப்படியே முழுமையாக அனுபவித்து விட வேண்டும் என்று அவனுக்குள் ஒரு வேகம் பிறந்தது. அந்தக் குதூகலத்தை ஆரவாரமாகக் கொண்டாட வேண்டும் போலிருந்தது. இல்லாவிட்டால், அதுவே மனதுக்கு ஒரு பெரிய பாரமாகி விடும் என்று தோன்றியது.

சில நிமிடங்கள் அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தவன், "நான் கொஞ்சம் வெளில போய்ட்டு வரேன்" என்று எழுந்தான்.

அறையை விட்டு வெளியில் வந்தான்.

வராந்தாவில் கைவீசி நடப்பது சுகமாக இருந்தது.


உலகத்திலேயே மிக அதிகபட்ச சந்தோஷத்தை அனுபவிக்கும் மனிதனாக அந்த நேரத்தில் அவன் இருந்தான்.

மாடிப்படியை நெருங்கிய சமயம், எதேச்சையாக ஓர் அறையைப் பார்த்து விட்டான் ரவீந்திரன்.

அங்கே கட்டிலில் ஒரு வயோதிகர் சலனமற்றுப் படுத்திருந்தார். அவர் கைகளைப் பற்றியபடி வயதான ஒரு பெண் – அவர் மனைவியாக இருக்கும் – அழுது கொண்டிருந்தாள். சப்தமே இல்லாத அழுகை அது. அவளது அழுகைதான் அவர் இறந்து விட்டார் என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தது. படுக்கையைச் சுற்றி இருவர் கண்கலங்கி நின்றிருந்தனர்.

அப்போது, வெள்ளை உடை அணிந்த மருத்துவமனைப் பணியாளர்கள் இருவர் ஸ்ட்ரெச்சரோடு அறை வாசலில் வந்து நிற்க, அழுது கொண்டிருந்தவள் பரிதாபமாக எழுந்து நின்றாள்.

அந்த அறைக்குள் சுற்றிச் சூழ்ந்திருந்த சோகம், அந்த அறையையும் தாண்டி வந்து தன்னையும் பற்றிக் கொண்டு விட்டது போல அப்போது உணர்ந்தான் அவன்.



ஊழலை ஒழிப்போம்
"பேசும்போது குறுக்கிடறதுக்கு மன்னிக்கணும்... உங்க வீட்டுல சி.பி.ஐ. ரெய்டு நடத்தி எக்கச்சக்கமா கறுப்புப் பணம் கண்டுபிடிச்சிருக்காங்க..."
"அஞ்சு வருஷ ஆராய்ச்சிக்கப்புறம் அறிக்கை வெளியிட்டிருக்காங்க.... ஊழலைக் குறைக்கறதுக்கு ஒரே வழி ஊழலைக் குறைக்கறதுதான்!"
ஆஹ்ஹாஹ்ஹா...
"எங்ககிட்டே சரியான புள்ளி விவரங்கள் இல்லை சார்... பொதுமக்களுக்கு இத்தனை நாளா கொடுத்துக்கிட்டிருந்த புள்ளி விவரங்களையே கொடுத்துடலாமா...?"
"இந்தப் பாலத்துக்கு அரசாங்கம் எவ்வளவு செலவழிச்சிருக்கும்னு யோசிக்கறீங்களா...? சும்மா ஒரு தொகையைக் கற்பனை பண்ணி, அதோட ஒரு பத்து கோடி ரூபாயைச் சேர்த்துக்குங்க... அவ்வளவுதான்!"
— இந்தியன் ஃபீச்சர்ஸ் ஸிண்டிகேட்

“எனக்கு எல்லாமே

“பக்கத்து செக்‌ஷனில் புதுசா ஒரு கண் காணிப்பாளர் பிரமோஷனில் வந்திருக்கிறார். அவருக்கும் இலக்கியம், நாடகம் என்றால் ஆர்வம் அதிகம்; பல நாடகங்கள் போட்டி ருக்கிறார். உனக்கும் இலக்கியம் என்றால் பிடிக் குமே! வா, போய் பார்த்துப் பேசிவிட்டு வரலாம்!” - அனந்தகிருஷ்ணனை நண்பர்கள் அழைத் தார்கள்.

“சரி” என்று நண்பர்களுடன் போனார் அனந்தகிருஷ்ணன். அந்தக் கண்காணிப்பாளரது அழுத்தமான பேச்சும், புதுப் புது சிந்தனைகளும் அவரை மிகவும் கவர்ந்து விட்டன. அந்தக் கவர்ச்சியே ஒரு பந்தமாக மாறி, இன்று வரை தொடர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்து இருக்கிறது.

அந்த நண்பர்களில் ஒருவர்தான் ‘அனந்து’ என்று சினிமா வட்டாரத்தில் அழைக்கப்படும் அனந்தகிருஷ்ணன். மற்றொருவர் உங்களுக்குச் சொல்லாமலேயே புரிந்திருக்கும்- அவர்தாம் இயக்குனர் சிகரம் கே. பாலசந்தர்.

காரைக்குடி - திருப்பத்தூர் அருகில் இருக் கும் கண்டிரமாணிக்கம்தான் அனந்துவின் ஊர். அப்பா திருவேங்கடம் சவுத் இந்தியா கார்ப்ப ரேஷனில் வேலை பார்த்து வந்தார். புதுக் கோட்டையில் நான்காவது வரை படித்த அனந்து, மதுரையில் படிப்பைத் தொடர்ந்து, பி.எஸ்ஸி., (ரசாயனம்) முடித்தார்.

“அப்புறம், மதுரை மற்றும் சென்னையில் உள்ள கல்லூரிகளில் சிறிது காலம் ‘டெமான்ஸ் டிரேட்டர்’ வேலை. 1959-ல் ஏ.ஜி. அலுவலகத்தில் மேல்நிலை குமாஸ்தா வேலை கிடைத்தது. “அங்குதான் சாரை (பாலச்சந்தர்) சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆங்கில இலக்கியப் புத் தகங்கள், குறிப்பாக சாமர்ஸெட்மாம், ஹெமிங்வே ஆகியோரது எழுத்துக்கள் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். இலக்கியம், சமூகம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சாருடன் விவாதம் செய்வேன். அதனால் அவருடனான தொடர்பு பலப்பட்டது. அப்புறம் இரண்டு வருடங்கள் மதுரைக்கு மாற்றலாகிச் சென்றேன். அந்தச் சமயத்தில் தந்தை இறந்து விட்டார். பின்னர் அம்மாவுடன் சென்னைக்கு வந்து செட்டிலானேன். மீண்டும் சென்னைக்கு மாற்றல் கிடைக்க உதவியவர் சார்தான்!” என்கிறார் அனந்து.

அந்தக் காலகட்டத்தில் நாடக மேடைகளை கலக்கிக் கொண்டிருந்தார், பாலச்சந்தர். மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம், நீர்க்குமிழி, நாணல் என்று தொடர்ந்து வெற்றி நடைபோட்டன அவரது நாடகங்கள்.

“ஆபீஸ் வேலை, ரிகர்சல் என்று கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார் அவர். அவருக்குக் கொஞ்சமேனும் உதவியாக இருக்கலாமே என்ற எண்ணத்தில், மேடை நிர்வாகம், மற்றும் சில ஏற்பாடுகளில் பங்குகொண்டேன். சாருடைய ‘பஞ்சிங் டயலாக்’குகள் அரங்கத்தில் உண் டாக்கிய கலகலப்பைப் பார்த்துப் பார்த்து, நாமும் வசனம் எழுத முயற்சி செய்தால் என்ன என்று தோன்றியது. அப்போது மெழுகுவர்த்தி என்ற நாடகத்துக்கான ரிகர்ஸல் நடந்து கொண்டிருந்தது. சில சீன்களுக்கு வசனம் எழுதினேன். அதை போஸ்டல் இலாகாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த சாரின் நண்பரான கோவிந்தராஜிடம் (பின்னாட்களில் ‘கலாகேந்திரா’ கோவிந்தராஜன் என்றழைக்கப் பட்டவர்) காட்டினேன். அவருக்குப் பிடித்துப் போய் பாலசந்தர் அவர்களிடம் காட்டப் பட்டது. நான் அங்கீகரிக்கப்பட்டேன். அதன் பின்னர், கதை விவாதங்களிலும் பங்குகொள்ள அனுமதித்தார் அவர்!” என்று நினைவுகளை அசைபோடுகிறார் அனந்து.

நாடக மேடையில் வெற்றி நடைபோட்ட பாலசந்தருக்கு சினிமா வாய்ப்புகள் தேடி வந்தன. இதன் காரணமாக அடிக்கடி லீவு போட வேண்டி வந்தது. அரசுப் பணியா, சினிமாவா என்ற கேள்வி முன்வந்தபோது, அரசுப் பணியை ராஜினாமா செய்துவிட்டு முழு நேரத்தையும் சினிமாவுக்கு ஒதுக்கி விட்டார் கே.பி.

“1965-ல் அவர் அரசுப் பணியை ராஜினாமா செய்தார். நான் தொடர்ந்து 25 வருடங்கள் பணிசெய்து விட்டு ’84-ல் தான் ஓய்வு பெற்றேன். அந்த இடைப்பட்ட காலகட்டத்தில் ஆபீஸ் வேலை, கதை விவாதம், ஸ்கிரிப்ட் எழுத உதவு வது என்று கே.பி. சாருக்கு உதவியாக - மிகவும் பிஸியாக இருந்தேன். ‘அதிர்ஷ்டவசமாக’ எனக்குக் குழந்தைகள் இல்லாததால், மிக அதிக பட்சமான நேரத்தை சாருக்காக செலவிட முடிந்தது” என்று மெல்லிய புன்னகையுடன் சொல்கிறார் அனந்து.

கவிதாலயா அலுவலகத்தில் பாலசந்தர் அறைக்கு முன்னால் இருக்கும் அனந்துவின் அறையில் டீ.வி., வி.சி.ஆர். என்று எல்லாம் இருக்கின்றன. பல சமயங்களில், அலுவலக கணக்கு வழக்குகள், கடிதம் எழுதுவது போன்ற பணிகளையும் அனந்து கவனித்துக் கொள்கிறார். வி.சி.ஆரில் படங்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. உலக அளவிலான சினிமாக்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்

தெரிந்து கொள்ள சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் படிப்பது மட்டுமல்லாமல், பி.பி.சி., சி.என்.என் நிகழ்ச்சிகளையும் பார்த்து, தம்மைச் சுற்றி நடப்பது என்ன என்பதைத் தெரிந்து கொள்கிறார்.

"பாலசந்தர் ரொம்பவும் கோபக்காரர் என்று சொல்வார்கள். உங்களிடம் கோபப்பட்டிருக்கிறாரா?"

"கூட வேலை செய்பவர்கள், அல்லது நடிகர், நடிகைகள், அவர் சொல்வதை சரியாகச் செய்யாமல் போனால் கோபம் வராதா? ஆனால் ஒன்று, அந்தக் கோபம் உடனே பறந்து போகும். என்னைப் பொறுத்தவரை அவருடைய மனத்தைப் புரிந்து கொண்டவன் என்று சொல்லலாம். ஒரே wave lengthல் சிந்திக்கிறோம்; செயல்படுகிறோம். அதனால் கோபதாபங்களுக்கு இடம் இல்லை."



பாலசந்தர், தமது படங்களில் கதைக்கான கரு பற்றி அனந்துவுடன் மட்டும்தான் விவாதிக்கிறார். ஸ்டோரி டிஸ்கஷன் என்று ஹோட்டல்களில் அறை எதுவும் போடப்படுவதில்லை. கவிதாலயா மற்றும் டைரக்டர் வீட்டில் உள்ள அறைகளில்தான் விவாதம் செய்வதும், ஸ்கிரிப்ட் எழுதுவதும் நடக்கிறது.

"இவ்வளவு நீண்ட காலம் அவருடன் இணைந்து பணியாற்றி வருகிறீர்கள். நீங்கள்

சினிமாதான்!"

அவரிடம் பிரமிக்கும் விஷயம் எதுவும் உண்டா?"

"சுறுசுறுப்பு. அவரது சுறுசுறுப்பைக் காணும் போது பிரமிப்பு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதே போல தேக்கநிலை இல்லாத சிந்தனை. அவரது ஒவ்வொரு படமும் 'பாலசந்தர்' முத்திரையுடன் வருவதற்குக் காரணம், காலத்தோடு போட்டி போட்டுச் செல்லும் அவரது சிந்தனைதான். தவிர ஒரு படம் வசூலில் தோல்வி அடைந்தால் கூட, அதைப் பற்றி போஸ்ட் மார்ட்டம் பண்ணிக் கொண்டிருக்காமல், அடுத்து என்ன என்று செயல்படும் அவரது சுபாவமும் எனக்குப் பிடித்த ஒன்று."

"ஒரு வெற்றிகரமான டைரக்டரின் பின்னணியில் இருந்தும் வெளிப்படையான முறையில் பிரபலம் அடைய முடியவில்லையே என்று நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா?"

"அது போன்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. நமது கருத்துக்களும், யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படும் இடத்தில் கிடைக்கும் சந்தோஷம், திருப்தியே தனி. அது எனக்குக் கிடைக்கிறது. அதுவே போதும் எனக்கு. வெளிப்படங்களுக்குக் கதை எழுதவும் கதை விவாதங்களில் கலந்து கொள்வதற்கும் சார் தடைசொல்வதில்லை. அவரது நிறுவனம் சார்பாக 'சிகரம்' படத்தை டைரக்ட் செய்யும் வாய்ப்பையும் எனக்குக் கொடுத்தாரே!"

சினிமா நுட்பங்களைத் தெரிந்து கொள்ள வெளிநாட்டுப் பயணங்களும் மேற்கொள்கிறார் அனந்து. இந்தியாவில் எங்கு திரைப்பட விழா நடந்தாலும் ஆஜராகி விடுவார். இப்போது உடல்நிலை சரியில்லாததால்தான் பயணங்களைத் தவிர்க்கிறார்.

"உங்களுக்கு வேறு ஏதாவது பொழுது போக்கு?"

"என் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்கள் என்று கூட எனக்குத் தெரியாது. அந்த அளவுக்கு என்னுடைய சிந்தனை, செயல் எல்லாமே சினிமாதான். எனது நல்ல நண்பர் கமல். கவிதாலயா அலுவலகத்தில் பணி இல்லாத காலத்தில் கமல் வீட்டுக்குப் போய் படம்பார்ப்பது, விவாதம் செய்வது என்று பொழுது கழியும்!"

- ப்ரியன்

படம் : யோகா

தைரியமிருந்தால்...

கால்கள் திடீரென்று தண்ணீரில் கரைந்து போனால் எப்படி இருக்கும்...?

வாசல் கதவைத் திறந்தபோது சுபா அப்படித்தான் உணர்ந்தாள். எதிரே நின்றவன் கணேஷ்!

"உங்க அப்பா இருக்காங்களா...?" – அவன் கேட்டபோது வயிற்றில் பந்துகள் குதியாட்டம் போட்டன. தலை மட்டும் 'இல்லை' என்பது போல் அசைந்தது சுபாவுக்கு.

"அம்மா....?"

அம்மா சமையலறையில் அலமாரிகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

'இவன் முகத்தின் மீது அறைகிறாற்போல் கதவைச் சாத்திவிட்டால் என்ன...?'

அப்படிச் செய்ய முடியாதபடி அவன் சரியாக நிலைப்படியில் நின்று கொண்டிருந்தான். நீல ஜீன்ஸ் அவனை இன்னும் உயரமாய்க் காட்டியது. மஞ்சள் டீ ஷர்ட். அதன் வட்டக் கழுத்தின் மேல் தெரிந்த முகம் உருண்டையாக எலுமிச்சம் பழத்தை நினைவுபடுத்திக் கொண்டு.... இதென்ன கையில் ஒரு வெள்ளைக் கவர்...?

"அம்மாவைக் கூப்பிடு; இதைக் கொடுக்கணும்..."

கரைந்த கால்களால் நடக்க முடியுமா...? நடந்தன.

"அம்மா..."

"என்னடி...?"

"வாசல்ல பாரு..."

அம்மா கை துடைத்து வாசலுக்கு வருவதற்குள் பெட்ரூமுக்குள் நடுக்கத்துடன் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டதில் புஜங்கள் வலித்தன.

காலையில் கணேஷ் வந்து 'உங்கிட்டே கொஞ்சம் பேசணும்' என்றபோதும் இப்படித்தான் அடித்துக் கொண்டது...

சில நாட்களாகவே கவனித்துக் கொண்டுதான் இருந்தாள் சுபா. பக்கத்து ஃப்ளாட் கணேஷின் பார்வை எங்கு போனாலும் பட்டும் படாமல் பின்தொடர்ந்தது.

எட்டேமுக்காலுக்கு காலேஜ் பஸ் பிடிப்பதற்காக சரியாக எட்டரைக்கு கீழ் ஃப்ளாட் கலைச்செல்வி வீட்டு பெல்லை அழுத்துவாள்.

"ஹேய்... இன்னிக்குக் குடுக்க வேண்டிய அஸைன்மென்ட் முடிக்கவேயில்லைடி" என்று ஞாபகமாக ஒத்திக்கொண்ட லிப்ஸ்டிக் உதடுகளால் கொஞ்சியபடி கலை வெளிப்படுவதற்குள்... கணேஷ் படி இறங்கி வந்து கொண்டிருப்பான்.

அபார்ட்மெண்ட் காம்பவுண்ட் கடந்து தெருமுனை திரும்பி, மெயின் ரோடுக்கு மூன்று நிமிடம் நடந்து பஸ் ஸ்டாப்பில் சிதறிக் கிடக்கும் வண்ணங்களுடன் இவர்கள் சங்கமமாகும் வரை அவன் பார்வை முதுகுப் பக்கம் ஒட்டிக் கொண்டு வரும். பிறகு எதிர்ப்புற பஸ் ஸ்டாப்பில் ஏக்கத்துடன் பார்த்தபடி நிற்பான்.

எட்டு நாற்பத்தாறுக்கு தகரக் கதவறைந்து சாத்தப்பட்டு, காமாக்ஷி கல்லூரி பஸ் அவ்விடம் விட்டு அகலும் நேரம், கணேஷ் ஒரு பிரியாவிடை பார்வையை வீசி விட்டுக் கிளம்புவான்.

கலைச்செல்விக்காகத்தான் அவன் வருகிறான் என்று தீர்மானமாயிருந்தாள் சுபா. அது பொய் என்பது விரைவில் புரிந்து போனது.

" 'போர் டீ!" என்று கலை ஒதுங்கிக் கொள்ளும் கோயில் விஜயங்களின் போதும் முதுகுப் பக்கம் கணேஷின் பார்வை ஒட்டிக் கொண்டு தொடர்ந்தது.

'திரும்பிப் பார்த்து திட்டித் தீர்த்து விட்டால் என்ன...?'

'வேண்டாம்! நீ என்ன பெரிய ரதியென்று நினைப்பா, உன் பின்னாலே நான் அலையறதுக்கு...?' என்று கேட்டுவிட்டால் அந்தச் சிறுமையைத் தாங்க முடியாது.

தான் ரதியில்லை என்பதைத்தான் தினம் தினம் நிலைக்கண்ணாடி நினைவூட்டுகிறதே. சொல்லப் போனால் மணமகள் தேவை விளம்பரத்தில் போடக்கூடிய 'மாநிறம்' 'மிதமான உயரம்' போன்ற சராசரி

வர்ணனைகளுக்குக் கூடத் தகுதியில்லாத கறுப்பு, குள்ள உருவம்.

கறுப்பு அவனுக்குப் பிடித்த நிறம் என்பது இன்றைக்குக் காலைதான் உறுதியானது.

"வயித்து வலி டீ!" என்று நொண்டிச் சாக்குடன் கலை ஹிந்தி பரீட்சைக்கு டிமிக்கி கொடுத்துவிட, இவள் மட்டும் தனியாகப் படியிறங்கிப் போனாள்.

சந்தடியில்லாத குறுக்கு வழிப் பாதையில் பார்த்து மடக்கிக் கொண்டான் கணேஷ்.

"உங்க கூட கொஞ்சம் பேசணும்" என்று அவன் நேருக்கு நேராகப் பார்த்துச் சொன்னபோது... பயத்தில் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

தொட்டு விடக்கூடிய தூரத்தில் இருந்தான். கையில் ஒரு வெள்ளை கவர். காதல் கடிதமா...? கெஞ்சிய அவன் கண்களும், தடித்த கனமான உதடுகளும், பழகாத கை மோசமாய்ச் செதுக்கிய மீசையும் மிக மிக குளோஸ் அப்பில் தெரிய.... அருவருப்பும் ஆத்திரமும் பொங்கின அவளுக்கு.



எங்கிருந்து துணிச்சல் வந்ததோ... சொல்லிவிட்டாள் : "தைரியம் இருந்தா எங்க வீட்ல வந்து என் அப்பா அம்மா முன்னாடி பேசு...!"

விதிர்விதிர்த்துப் போனான் அவன்.

திரும்பிப் பார்க்காமல் நடந்து போய் பஸ் ஸ்டாண்டை எட்டியபோது வெடவெடவென்று கால்கள் நடுங்கின அவளுக்கு... வீடு திரும்பியதும் அம்மாவிடம் சொல்லி விட வேண்டும்...

சங்கல்பத்தை நிறைவேற்றும் கட்டத்தில் தயக்கமும் கூச்சமும் வந்து தடைபோட்டது. எப்படிச் சொல்வது என்று யோசித்து யோசித்து, அலமாரிக் காகிதங்கள் மாற்றிக் கொண்டிருந்த அம்மாவைச் சுற்றி வர....

"வாசல்ல மணியடிக்கறது... போய்ப் பாரு!"

பார்த்தபோதுதான் அவன் கையில் கடிதத்துடன் நின்றிருந்தான். காலையில் சொன்னதை சீரியஸாய் எடுத்துக் கொண்டு...

பெட்ரூம் கதவு படபடவென்று தட்டப்பட்டது. திறந்துதான் ஆக வேண்டும்.

"எதுக்குடீ சும்மா சும்மா தாழ்ப்பாள் போட்டுக்கறே...?" சிடுசிடுவென்று அம்மா பாத்ரூம் பக்கம் போனாள்.

மெள்ள வெளியே எட்டிப் பார்த்தாள். அவன் போயிருந்தான். ஹால் டீபாயின் மேல் வெள்ளைக் கவர். மெதுவாக அதை எடுத்துப் பிரித்தாள். உள்ளே... இரண்டு பால் கார்டுகள். அரை லிட்டருக்கு ஒன்று; ஒரு லிட்டருக்கு ஒன்று— நானூற்று சொச்ச ரூபாய் சில்லறை...

கையைத் துடைத்துக் கொண்டு வெளிப்பட்ட அம்மா சொன்னாள், "நாளைக்கு ஞாபகப்படுத்து சுபா— கணேஷ் வீட்டுக்கும் சேர்த்து பால் கார்டு வாங்கிடணும்..."

ஒரு மாபெரும் ஏமாற்ற அலை அவள் உள்ளே கிளம்பி, வெறும் நுரையும் குமிழியுமாய்ச் சிதறிப் போனது.

சிஷ்யா

அருவருக்க வேண்டாம், அமிர்தம் இது!

ஹேங்கானியா கடுமையான வயிற்றுக் கோளாறுக்கென்று டாக்டரிடம் சென்றார். அவரோ, 'நீ தினமும் முதலில் கழிக்கும் சிறு நீரை ஒரு பாட்டிலில் எடுத்து வா; சோதனை பிட வேண்டும்" என்றார். நோயாளி அப்படியே செய்ய, டாக்டர், தினமும் ஒரு சிவப்பு நிற மருந்தைக் கொடுத்து, 'தவறாமல் குடி' என்றார். வருடக்கணக்கில் தொல்லை கொடுத்த வலி, ஒரே வாரத்தில் 'சூ மந்தர்' ஆகிவிட, "ஆஹா! நீங்களல்லவோ உண்மையான டாக்டர்!" என்று நோயாளி ஆனந்தக் கூத்தாட, அவரும் சிரித்துக் கொண்டே "பேஷண்டும் நீயே, டாக்டரும் நீயே! நான் உனக்குக் கொடுத்தது நீ கொண்டு வந்த உன் சிறுநீரையே! அதில் கொஞ்சம் கலரும், தேனும் கலந்தேன்" என்றாராம்! இது நடந்தது ஜப்பானில்! நம்ப முடிகிறதா?

தாய்வானைச் சேர்ந்த சென்-சிங்-சூஆன் இரண்டு வருடங்களுக்கு முன், புதிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த போது, போலீஸ் அவரை பிடித்துக் கொண்டது - "ரிக்கார்டுகள்படி உன் வயது 64; பார்த்தால் 44 போலிருக்கிறாய்; யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?" என உலுக்கியது. சென் மெதுவாக தாம் தமது சிறுநீரைப் பருகும் விஷயத்தை வெளியிட, டாக்டர்களும் ஆமோதிக்க, இரவோடிரவாக 'சென்' பெரிய ஹீரோவாகி விட்டார்!

அமெரிக்காவைச் சேர்ந்த மார்த்தா கிறிஸ்டிக்கு விதவிதமான உடல் உபாதைகள்! சிறு நீரின் அதிசய குணங்கள் பற்றிய புத்தகம் கிடைத்தது! கடைசி கட்ட முயற்சியாக அதை அமுல்படுத்தியவர், இரண்டே மாதங்களில் பூரண குணமடைந்து விட்டார். 'Your own perfect medicine' என்று புத்தகமெழுதி, இன்று கோடிக்கணக்கான டாலர்களை குவித்துக் கொண்டிருக்கிறார்!



• டாக்டர் தக்கர்

அயல்நாடுகளை விட்டுவிட்டு மும்பைக்கு வருவோம். "லிவர் கான்சர் முற்றிய நிலையில், டாக்டர்கள் இரண்டு வார கெடு வைத்தனர்; கீமோதெரபிக்கும் ரேடியோதெரபிக்கும் பயந்து கொண்டு நான் சிறுநீர் தெரபியை சரணடைந்தேன்! ஆறு மாதம் கழிந்து "செக்கப்"புக்கு டாடா மெமோரியல் சென்ற போது, நோயின் அறிகுறியே இல்லை. டாக்டர்கள் வியந்தனர்" என்கிறார் சோமையா.

"இருபது வருடங்களாய் எனக்கு அமீபிக் டிஸண்ட்ரி; கால் கைகளில் சொறி சிரங்கு வேறு! அலோபதியிலிருந்து திருப்பதி வரை அல்லாடினேன். கடைசியில் நண்பர் ஒருவர் எனக்கு இந்த தெரபியை புறிமுகப்படுத்தினார். அவர் என் தயக்கத்தைப் போக்க, என் சிறுநீரை வாங்கி மடமட வென்று குடித்தார். 'இது கழிவுநீரல்ல! அமிர்தம்!' என்றார். நானும் பின்பற்றினேன். சில மாதங்களில் இரண்டு நோய்களும் குணமாகி விட்டதுடன், பலவிதமான சிகிச்சைகளினால் ஏற்பட்டிருந்த பக்கவிளைவுகளும் பறந்தோடி விட்டன!"

அமெரிக்காவைக் கலக்கும் காந்தி ஃபாஷன்!



● அமெரிக்காவில் இப்போது மிகப் பிரபலமாக இருப்பது மகாத்மா காந்தி படம் போட்ட டீ-ஷர்ட்டுகள்!

● சமீபத்திய அமெரிக்க விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புப்படி குள்ள மாணவர்கள், உயர மாணவர்களைவிட, அதிக நாட்கள் உயிர் வாழ்வார்கள்!

● 1950களிலும் 60களிலும் போலியோ ஊசி போட்டுக் கொண்ட லட்சக்கணக்கான அமெரிக்கக் குழந்தைகளுக்கு இப்போது கான்சர் வரக்கூடிய அபாயம் இருக்கிறதாம்.

நாற்பது வருடங்களுக்கு முன் போலியோ அதிகமாகத் தாக்கியபோது போலியோ தடுப்பூசி போட்டுக் கொண்ட பள்ளிச் சிறுவர் சிறுமியர்களைப் பற்றி ஆராய்ந்த ஒரு குழு இதைச் சொல்லியிருக்கிறது.

SV-40 எனப்படும் ஒருவகை வைரஸ், குரங்குகளிடமிருந்து பரவுகிறதாம். இந்த வைரஸ், மேற்படி போலியோ ஊசி மருந்துகளைப் பாதித்திருக்கிறதாம். 1953க்கும் 1963க்கும் இடையே, 37 மாநிலங்களில் கொடுக்கப்பட்ட போலியோ ஊசி மருந்து வாக்சின்கள் எப்படியோ கலப்படமுற்று இந்த வைரஸால் தாக்கப்பட்டிருக்கிறதாம்.

இப்போது திடீரென்று பெருமளவில் கிளம்பியிருக்கும் பிரெயின் ட்யூமர் கேஸ்கள் இதன் காரணமாகத் தோன்றியவையே என்கிறது 'கான்சர் ரீசர்ச்' இதழில் வந்துள்ள சமீபத்திய கட்டுரை.

''இதில் யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை'' என்கிறார், எதேச்சையாக இந்த வைரஸைக் கண்டுபிடித்த மாரிஸ் ஹில்மேன்.

டாக்டர்கள் இந்த ஆராய்ச்சி முடிவைக் கண்டு அதிர்ந்து போயிருக்கிறார்கள். புலனாய்வு தொடர்கிறது.

— எஸ்.வி.என்.

சொல்பவர் நம் கண்முன்னே அறுபத்தேழு வயது இளைஞராய் விரைப்புடன் அமர்ந்து, துடிப்புடன் பேசிக் கொண்டிருக்கிறார், டாக்டர் தக்கர். "Water of Life" foundation அமைப்பின் தலைவர். 'ஜாகிங்' ரேஸிலும், 'டாண்டியா' (கோலாட்டம்) போட்டியிலும் முதல் பரிசை வாங்கிக் கொண்டு, ஹிமாலயன் கார் ராலியில் பங்கெடுக்கலாமா என யோசித்துக் கொண்டிருப்பவர்! ஹிலரி கிளின்டனுக்கும் யெல்ஸ்டினுக்கும் கடிதமெழுதுபவர்! ஃபோனில் நிமிடத்துக்கொரு பேஷண்டுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கிறார்! செமினார், கான்ஃபரன்ஸ் என உலகம் சுற்றும் வாலிபராய் இயங்கிக் கொண்டுமிருக்கிறார்.

பணம் கொழிக்கும் Tax consultancey பிஸினசை விட்டு விட்டு இந்த சிகிச்சை முறைக்காக முழு மூச்சாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்.

"டில்லியில் டிங்கு ஜுரத்தால் நூற்றுக்கணக்கான உயிர்களை அநியாயமாகப் பறிகொடுத்தோமே! இந்த சிகிச்சை மூலமாக மூன்று நாட்களில் குணப்படுத்தியிருக்கலாமே! நான் கோர்ட்டில் கேஸ் போடத்தான் போகிறேன்" என்கிறார் காட்டமாய்! தென் ஆப்பிரிக்காவில் இதன் மூலம் உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ்க்கும் கூட குணம் ஏற்பட்டு வருகிறதாம். "செர்னோபில் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த முறையைக் கடைப்பிடித்தால் முழுப்பலன் கிடைக்கும்" என அடித்துக் கூறுகிறார் டாக்டர் தக்கர்!


"சிறுநீரில் எத்தனை சத்துகளும் விட்டமின்களும் இருக்கின்றன தெரியுமா? அதிலுள்ள இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட 'காம்ப்பவுண்டு'களில் இருநூறைத்தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இதய நோயாளிகளுக்கென்று அறிவிக்கப்படும் யுரிகினோஸ் இஞ்செக்ஷனின் விலை எட்டாயிரம் ரூபாய்! பொதுக் கழிவறைகளிலிருந்து திரட்டப்பட்ட சிறுநீரிலிருந்துதான் இதை உற்பத்தி செய்கிறார்கள்! மலட்டுத்தன்மை, அபார்ஷன் முதலியவற்றுக்காக அளிக்கப்படும் விலையுயர்ந்த பர்கோனால், ப்ரோஃபேஸி இஞ்செக்ஷன்கள் கர்பஸ்த்ரீகளின் சிறுநீரிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டவையே!"

எல்லா நோய்களையும் இவர் இரு வகையாகப் பிரிக்கிறார். சளி, ஜுரம் – மலேரியா, டைஃபாய்டு, ப்ளூ – வயிற்றுக்கோளாறு, வாயு, பித்தம் போன்ற 'சாதா'க்கள்;

எய்ட்ஸ், கான்சர், டி.பி., ஆர்த்தரைடிஸ், ஹார்ட் – கிட்னி கோளாறுகள், டயாபடீஸ், தோல் வியாதி போன்ற 'தாதா'க்கள். சாதாக்களுக்கு ஒரு வகை சிகிச்சை, தாதாக்களுக்கு இன்னொரு வகை!

"இந்த சிகிச்சையை நானோ சமீபத்திய

உ
ஓம் நம: சிவாய



தஞ்சை ஜில்லா, மயிலாடுதுறை, (மாயூரம்) தாலுகா, அன்னியூர் என்கிற பொன்னூர் ஸ்ரீ பிரஹந்நாயகி சமேத ஸ்ரீ ஆபத்ஸகாயேஸ்வரர் திருக்கோயில் மற்றும் இதர கிராமக் கோவில்கள் திருப்பணி

சென்னை மாநிலத்தில் சோழவள நாட்டில் தஞ்சை ஜில்லா, மயிலாடுதுறை தாலுகாவில், காவிரி நதிக்கரையில் மாயவரத்திலிருந்து, வடமேற்கே நான்கு மைல் தொலைவில் தெய்வத் தன்மையுடன் சோழ மன்னர்கள் ஆண்டு வந்த காலத்திலேயே அமையப் பெற்ற திருத்தலமாகும் திரு அன்னியூர் க்ஷேத்திரம். பொன் விளையும் கிராமம் என்பதால் அது பொன்னூர் என்றும் வழங்கலாயிற்று. அங்கு அமைந்துள்ள அருள்மிகு ஆபத்சகாய சுவாமி ஆலயம் திருஞான சம் பந்தர், திருநாவுக்கரசர் முதலிய சமயக்குரவர்களால் பாடல்பெற்ற திருத்தலமாகும். திருவேள்ளிக்குடி, திருஎதிர்கோய்பாடி, திருமணஞ்சேரி, திருக்கொருக்கை முதலிய பாடல் பெற்ற தலங்கள் இதனைச் சுற்றிய க்ஷேத்திரங்களாகும். பொன்னூர் சூரியன் வழிபாட்டுத் தலமுமாகும்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் 25-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி முடிய சூரியன் மேற்படி அன்னியூரிலுள்ள சிவனை வழிபட்ட காரணத்தால் அங்குள்ள குளம் சூரிய புஷ்கரணி என்று வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. மேற்படி ஐந்து தினங்களும் அதிகாலையில் சூரியன் கோயிலின் உள்ளே கர்ப்பகிரகத்தில் இருக்கும் சிவலிங்கத்தின் மீது ஒளிக்கதிர் வீசுவது மிகவும் அதிசயமான நிகழ்ச்சி. இவ்வாலயத்தின் மேற்படி நிகழ்ச்சியை தரிசிக்கவும், பாடல் பெற்ற ஸ்தலமாக இது விளங்குவதாலும் வெளியூர்களிலிருந்தும் பக்தர்கள் இங்கு வருகின்றனர்.

மேற்படி கோவிலில் உள்ள ஸ்வாமி அம்மன் மூல விக்ரஹங்கள் இருக்கும் கர்ப்பக்கிரஹ அறை மிகவும் பாழடைந்தும், அர்த்த மண்டபம் விமானங்களில் பல விரிசல்கள் ஏற்பட்டும், சுற்றுப்புற மதில்சுவர்கள், பிராகாரம் முதலானவை இடிந்தும் பழுதுபார்க்க வேண்டிய நிலையிலும் இருப்பதாலும் தற்சமயம் அடுத்த கும்பாபிஷேகம் செய்யவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. அதற்காக மேற்படி திருப்பணிகள் செய்வதற்கும், மற்றும் பொன்னூரில் உள்ள பெருமாள் கோவிலுக்கும் மாரியம்மன் கோவிலுக்கும் இந்த சிவன் கோவிலுடன் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு சுமாராக ரூ. 4,00,000/- வரை ஆகலாம் என மதிப்பீடு செய்யப்படுகிறது.

ஆகவே வரப்போகும் 1997-ஆம் ஆண்டு தொடக்கத்தில் திருப்பணி வேலைகளை முடித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்ய இறைவனின் திருவருளை முன்னிட்டு தங்களின் பேராதரவையும் கணிசமான நன்கொடைகளையும், நிதி உதவிகளையும் நாங்கள் வேண்டுகிறோம்.

தாங்கள் மனமுவந்து தங்கள் திருக்கரங்களால் நன்கொடைகளை அள்ளித் தந்து ஸ்ரீபிரஹந்நாயகி சமேத ஆபத்ஸகாயேஸ்வரர் அருளைப் பெற பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு

இறைவன் நற்பணி மன்றம் பொன்னூர், பாண்டூர் போஸ்ட், மயிலாடுதுறை தாலுக்கா

காசோலைகளையும் டிமாண்ட் ட்ராப்டு **(DD)** *களையும் இறைவன் நற்பணி மன்றம்* **(IRAIVAN NARPANI MANDRAM)** *என்ற பேரில் எழுதி* **Sri. V. Rajamani, No.1, 2nd Cross Street, E.K. Raghava Reddiar Colony, Jafferkhanpet, Madras - 600 083** *என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

தி.மு.க. தலைமை போடும் தடா!



• பாஸ்கரன்



• நடராஜன்

மோசடியான ஆவணங்களைத் தயாரித்து, முறைகேடான விதத்தில் வெளிநாட்டிலிருந்து ''லெக்ஸஸ்'' கார் இறக்குமதி செய்ததற்காக, பாஸ்கரன் மீது, வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது மத்திய வருவாய் புலனாய்வுத் துறை (Department of Revenue Intelligence).

இந்த வழக்கு சம்பந்தமாக பாளையங்கோட்டைக்குச் சென்று பாஸ்கரனை விசாரித்து வந்தார்கள் அதிகாரிகள். ''எனக்கு எதுவும் தெரியாது. நடராஜன்தான் எல்லாம் செய்தார்'' என்று அதிகாரிகளிடம் சொல்லி விட்டாராம் பாஸ்கரன். இதற்கிடையில், அ.தி.மு.க. ஆட்சியின் போது வெளிநாட்டிலிருந்து பதினைந்து கார்கள் மன்னார்குடி கூட்டத்தால் இறக்குமதி செய்யப்பட்டதை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இதற்கெல்லாம் உதவி செய்த கார் புரோக்கர் யோகேஷ் என்பவர் 1995லேயே இங்கிலாந்துக்கு ஓடி விட்டாராம்!

● ஊழல் கண்காணிப்புத் துறை இணை கமிஷனர் உமாசங்கர் தினசரி அலுவலகத்திலிருந்து கிளம்பும் போது, தமது அறைகளில் இருக்கும் பீரோக்களின் இரண்டு கதவுகளையும் இணைக்கும் விதமாகத் தாம் கையெழுத்திட்ட வெள்ளைப் பேப்பரை ஒட்டி விட்டுச் செல்கிறார். ''ஊழல் பற்றிய கோப்புகள் அந்த பீரோக்களில் இருக்கின்றன. மாற்றுச் சாவி போட்டு யாராவது திறக்க நினைத்தால், என் கையெழுத்து உள்ள பேப்பரை சேதப்படுத்தாமல் திறக்க முடியாது. எல்லாம் ஒரு முன் ஜாக்கிரதைதான்'' என்றபடி புன்னகை செய்கிறார்.

● தஞ்சாவூர் பெரியகோயிலில் நிகழ்ச்சி என்றால் பதவியிலிருக்கும் அரசியல்வாதிகள் ஓட்டம் எடுப்பார்கள். எல்லாம் சென்டிமென்ட்ஸ்தான். ஹோசூரும் அதுபோல மாறி விட்டதாம். ஹோசூருக்கு ஏதாவது நிகழ்ச்சிக்கு வரும் அரசியல் தலைவர்களுக்கு பிரச்னைகள் வருகிறதாக நம்பிக்கை! பங்காரப்பா, ஹெக்டே, நரசிம்மராவ் ஆகியோருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டதன் விளைவால், அரசியல்வாதிகள் ஹோசூருக்கு வரவே பயப்படுவதால்தான் பிரபல மோட்டார் வாகன கம்பெனி ஒன்றும் தன் புது யூனிட் திறப்பு விழாவை ரொம்ப நாள் தள்ளி வைத்து கடைசியில் ஒரு வழியாகத் துவங்கியதாம்!

● தனியார் டி.வி. சேனல்களில், குறிப்பாக அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தி.மு.க.வினருக்கு தலைமை 'தடா' போடுமென்று தெரிகிறது. இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்கள், சரியான தயாரிப்பு இல்லாமல் வரலாறு தெரியாமல் செல்வதால், அவர்களின் உளறலால், தி.மு.க.வின் 'இமேஜ்' பாதிக்கப்படுவதாக தலைமை கருதுகிறது.

டி.வி. சேனல்களில் பங்குபெற வாய்ப்புப் பெறும் ஆளும் கட்சியினர் இனி அறிவாலயத்துக்குத்தான் முதலில் அப்ளிகேஷன் போட வேண்டும்.

— கௌசல்யா

டாக்டர்களோ புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை... நமது இதிகாச புராணங்களிலேயே சொல்லப்பட்டிருப்பதுதான்" என்கிறார்.

டாக்டர் தக்கரின் இந்த மருத்துவம் பற்றி சென்னையிலுள்ள டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா எம்.டி.யிடம் தெரிவித்து, அவர் கருத்தைக் கேட்டோம்.

"இதில் குறிப்பிட்டிருக்கும் மருந்துகள் தயாரிப்பு முறை பற்றிய வரையில், விவரங்கள் சரிதான். மேற்படி நோய்களுக்கு, சிறுநீர் மருந்தாகும் என்பதை உணர்த்த, விஞ்ஞான ரீதியான எந்த மருத்துவ ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படாதவரை, இச் சிகிச்சையின் நம்பகத்தன்மை குறித்து உறுதியாக எதுவும் சொல்ல முடியாது. உதாரணமாக, 200 நோயாளிகள் இம்மாதிரி சிகிச்சைக்கு உட்படுத்தி, இத்தனை பேர் விஷயத்தில் பலன் கிடைத்து, இத்தனை பேர் விஷயத்தில் பலன் கிடைக்கவில்லை என்பது போன்ற ஆராய்ச்சி பூர்வமான முடிவுகள் தேவை. லிவர் கேன்சர், இதய நோய்க் கோளாறுகளுக்குக் கூட சிறுநீர் வைத்திய முறையில் குணம் காண முடியும் என்பதை ஏற்க முடியவில்லை. ஆனால் Auto Urine Therapy பற்றி இப்போது பல நாடுகளிலும் எழுந்திருக்கும் விவாதங்கள் நிறைந்த சூழ்நிலையில், இது பற்றிய சர்ச்சைகளைப் பேட்டி மற்றும் கட்டுரைகள் மூலம் மக்கள் அறிய முடிவதை வரவேற்கிறேன்!

— ஜெயஸ்ரீ ராஜ்


ஜாலி போட்டி - 22

பரிசு ரூ. 5000/-

கீழேயுள்ள கிறிஸ்துமஸ் மரத்தில் சில எழுத்துக்கள் மாற்றிப் போடப்பட்டிருக்கின்றன! அந்த எழுத்துக்கள் பிரபலமான கிறிஸ்துவப் பாடல் ஒன்றின் முதல் வரி தான்!

எழுத்துக்களைச் சரியானபடி அமைத்து, அந்தப் பாடலின் முதல்வரியைக் கண்டு பிடிப்பவருக்கு ரூ 5000 பரிசு! பலர் சரியாகக் கண்டுபிடித்தாலும் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பரிசு!

ஆசிரியர் தீர்ப்பே இறுதி. *கடைசி தேதி: 6.1.97*



ஜாலி போட்டி - 22

பாடலின் முதல் வரி : ....

....

பெயர் : ....

முகவரி : ....



• தாரக்

இதோ வருகிறார் சின்ன என்.டி.ஆர்!

"முழுக்க முழுக்க சிறுவர், சிறுமிகளையே வைத்து ராமாயணத்தை எடுக்க முடிவு செய்தேன். 1200 சிறுவர், சிறுமிகளைப் பார்த்து, படத்தில் பல்வேறு பாத்திரங்களிலும் நடிக்க நூறு பேரைத் தேர்வு செய்திருக்கிறேன்!" என்கிறார் தெலுங்குப்படத் தயாரிப்பாளரான எம்.எஸ். ரெட்டி.

ஆனாலும் ராமனாக நடிப்பதற்கு, சரியாக யாரும் அமையவில்லை. அந்தச் சூழ்நிலையில், ஹைதராபாத்தில், வித்யாரண்யா ஸ்கூலில் எட்டாம் வகுப்பு படிக்கிற தாரக் என்கிற பையனைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவனை வரச் சொன்னார் தயாரிப்பாளர்.

"என்னை சந்திப்பதற்காக, என் அறையின் கதவைத் திறந்து கொண்டு அந்தச் சிறுவன் உள்ளே நுழைந்தபோதே, எனக்குள்ளே மின்னல் வெட்டியது! 'இதோ வந்து விட்டான் ராமன்' என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். மேக்-அப் டெஸ்ட், நடிப்பு டெஸ்ட் என்று எதுவுமில்லை, தாரக்கை வைத்து நேரடியாய் ஷூட்டிங்தான்!" என்கிறார் தயாரிப்பாளர்.

சிறுவன் தாரக்கிற்கு வயது 12. குச்சுப்புடி நடனம் தெரியும். 25 முறை குச்சுப்புடி நடன மேடை நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளான். "என்.டி.ஆர். போல நீயும் பெரிய ஸ்டாராக வருவாயா?" என்று கேட்டால், "நான் என்.டி.ஆரின் தீவிரமான விசிறி. அவர் படங்கள் நிறைய பார்த்திருக்கிறேன். அவரைப் போல வர, நான் ரொம்ப கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்" என்கிறான் தாரக்.

என்.டி.ஆர். போல, தாரக்கும் ராமனாக சினிமாவில் நடிப்பது மட்டும்தான் இருவருக்குமுள்ள சம்பந்தம் என்று நினைத்துக் கொண்டால் தவறு. தாரக்கின் தாத்தா வேறு யாருமில்லை. என்.டி.ஆர்தான்! என்.டி. ராமராவின் மகன் ஹரிகிருஷ்ணாவின் மகன்தான் தாரக்!

— கௌதம் ராம்

அச்வின் பீங்கான் பாத்திரத்தில் நொய்க் கஞ்சி குடித்துக்கொண்டு, கேபிள் டீ.வி செய்தியில் மூழ்கியிருந்தான். லட்சுமி நடிக்காத திரைப்படமல்லாத 'சிறை'க் காட்சி அது.

"முற்பகல்... பிற்பகல்னு பழமொழி ஏதாவது சொல்ல ஆரம்பிச்சுடாதே... நெறயக் கேட்டாச்சு... புதுசு ஏதாவது இருந்தாச் சொல்லு..." என்றபடி கம்ப்யூட்டரை ஆன் செய்தேன்.

"ஏதாவது என்ன... அண்ணன்னிக்கு புதுசு புதுசா எவ்வளவு வெளியிலே வருது... இன்டர்நெட்லேதான்..." என்றபடி அவன் கொடுத்த விலாசம்: http://www.popsci.com

"புதிய கண்டுபிடிப்புகள் பற்றி கடச்கட எல்லா விவரமும் இவ்விடம் கிடைக்கும்.. அங் கங்கே சகட்டுமேனிக்குக் கண்டுபிடிச்சுத் தள்ள இங்கேயும் நித்தியப்படிக்கு லிஸ்டை மாற்றி எழுதிக்கிட்டிருக்காங்க..."

சில புதுசுகள்... அச்வின் உதிர்த் கமெண்ட்களோடு.

ஒலிம்பிக்ஸ் மராத்தான் போன்ற நடகளட போட்டிகளில் கலந்து கொள்கிறவர்கள் மணிக் கட்டில் அணிந்து கொள்ள வேண்டிய சிக்னலிங் கருவி தயார். கம்ப்யூட்டர் சில்லு அடிப்படையில் அமைந்த இந்த சின்னஞ்சிறிய கருவி, ஓட ஆரம்பித்ததிலிருந்து, ஆங்காங்கே நடுவில் கண்காணிப்பு முனைகளில் புகுந்து புறப்பட்டது, நின்றது, நடந்தது என்று சகல மானதையும் நிமிடம், வினாடி துல்லியமாகப் பதிவு செய்து தகவல் அனுப்பிவிடும் என்ப தால், பின்னால் 'நான் முந்தியா... நீ முந்தியா 'குறுக்காலே புகுந்து ஓடியாந்துட்டான் போன்ற பிரச்னைகளுக்கே இடமில்லை ("பைனான்ஸ் கம்பெனி ஆரம்பிக்கறவங்க கட டாயமாக வாங்கிக் கையிலே கட்டிக் கொள்ச வேணும்னு சட்டம் போட்டு விடலாம்!")

இன்னும் நாலு வருடம் கழித்து நடக்க போகிற ஒலிம்பிக்ஸில் ஓட்ட சூப்பர்டை 2 என்ற எடை குறைந்த, அமலாக்கப் பிரி வேக அலுமினியச் சக்கர சைக்கிள் தயா தயார்! ("அதுக்குள்ளே அண்ணாமலை சைக்கிள் இறக்கை கட்டிப் பறக்க ஆர

பிச்சுடுமா?")

மடித்துப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு போகக்கூடிய மலிவு விலை பைனா குலரும் தயாரித்து விற்பனைக்கு வந்துவிட்டது- வேறெங்கே? அமெரிக்காவில்தான். பத்து டாலர் விலை! ("வாங்கி, நாலு நாள் ஆசை தீரப் பட்சி பார்த்து 'ஏ'க் தூக்கி எறிஞ்சுட லாம்")

தான்லே வெள்ளையா விட்ட காலி எடத்துலே கதை எழுதிட்டு மூணு மணி நேரப் படமா சவ்வா இழுத்திருக்காங்க" என்று அலுத்துக் கொள்கிறார். ("அடுத்த படத்துக்குக் கதையை இன்னும் பெரிசா ஐநூறு ரூபாய் நோட்டுலே குஞ்சுமோன் எழுதுவார்).



அடுத்த வருடம் ஜூலை மாதம் பத்தாம் தேதி கிண்டி என்ஜினியரிங் கல்லூரியில் பழைய மாணவர் சந்திப்பு. ("ஏழு மாசம் முன்னாலேயே சொல்லியாச்சு... வீட்டுலே பெர்மிஷனுக்கு அப்ளை பண்ணிடுங்க... ஆபீஸ் விஷயம் அப்புறம் பாத்துக்கலாம்").

இந்த மாத

ஓட்டப்பந்தய வீரர்களே உஷார்!

பிலிப்ஸ் கம்பெனி 'பேய் விரட்டி'யை உற்பத்தி செய்து வெளியிட்டிருக்கிறது- டீ.வி.யில் ஒன்றுக்கு இரண்டாக உருவங்கள் ('ghost') தெரிவதைத் தடுக்கத்தான். ("நிதானத்தில் இல்லாமல் டீ.வி பார்த்து எல்லாம் இரண்டு இரண்டாகத் தெரிகிறவர்களுக்கு இதனால் பிரயோஜனமில்லை").

"http://www.genius.net" என்று அடுத்து நுழைந்தது. முழுக்க முழுக்க அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்களின் தகவல் பக்கங்கள்...

இங்கே, விஜயராகவன் எழுதிய "காதல் தேசம்" பட விமர்சனத்தில் 'ஒத்த ரூபாத்

'பத்து சூப்பர் இந்தி பாட்டு'க்களில் முதலாவது இடத்தைப் பிடித்த பாடல் 'பரதேசி... பரதேசி'.

அச்வின் கர்ணகடூரமாகப் பாடத் துவங்க நான் காணாமல் போனேன்.

— இரா.முருகன்,

இன்டர்நெட் கம்ப்யூட்டர் உதவி :
SAP Computers (P) Ltd,
Chennai-17.



ஆங்கில எழுத்து— அள்ளிக்கொள்ளும் டாலர்கள்!

இந்தியர்கள் எழுதும் ஆங்கில நாவல்களுக்கு சமீபகாலமாக உலக அளவில் நல்ல மார்கெட் கிடைத்துள்ளது. சில வருடங்களுக்கு முன்பு விக்ரம் சேத் எழுதிய Suitable Boy (பொருத்தமான பையன்!) என்கிற ஆங்கில நாவல் விற்பனையில் சக்கைப் போடு போட்டது. ஆங்கில நாவல் எழுதி மிக அதிகமான ராயல்டி சம்பாதித்த முதல் இந்தியர் என்ற பெயரை அவருக்குப் பெற்றுத் தந்தது.

இப்போது விக்ரம் சேத்தைத் தொடர்ந்து இன்னொருவர் பிரபலமாகியிருக்கிறார். இந்த முறை ஒரு பெண். பெயர்–அருந்ததி ராய். வங்காளத்தைச் சேர்ந்த இவரது நாவல் இன்னும் வெளிவரவேயில்லை. ஆனால், அதற்கு முன்னாலேயே பரபரப்பு கூடி விட்டது. இவரது நாவலைப் பற்றிய விமர்சனங்களை விட அந்த நாவலுக்கான ராயல்டி எவ்வளவு என்பதைப் பற்றியும் புத்தக வெளியீட்டு உரிமையாளர் யார் என்பதைப் பற்றியும் தான் அதிகமான சர்ச்சை!

இங்கிலாந்தில் மட்டும் வெளியிட இவர் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படும் ராயல்டி தொகை கிட்டத்தட்ட ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்' பவுண்டு ஸ்டெர்லிங்குகள் (யம்மாடியோவ்!) அமெரிக்காவில் வெளியிட ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் அமெரிக்க டாலர்கள். (அடேங்கப்பா!) அதைத் தவிர பிரான்சு, ஜெர்மன் மற்றும் இத்தாலிய மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிட கொசுறாகச் சுமார் ஒரு லட்சம் அமெரிக்க டாலர்கள்.(யப்பாடி, யப்பாடி!) இன்னும் இந்திய பதிப்புக்கான உரிமை தீர்மானிக்கப்படவில்லை. ராயல்டி விஷயத்தில் விக்ரம் சேத்தை விஞ்சி விடுவார் போலிருக்கிறது இந்த வங்காள வஞ்சி!

ஆனால் இந்த ராயல்டி விஷயத்தைப் பற்றிய பேச்சை எடுத்தாலே பொரிந்து தள்ளுகிறார் ராய். "என்னுடைய நாவல் பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாவது பெரிய விஷயமில்லையா? ராயல்டியை மட்டுமே கணக்குப் போடுகிறீர்களே! ஒரு நாவலின் தரம் அது தரும் ராயல்டியில் இல்லை. பல குப்பைப் புத்தகங்கள் இதை விட அதிக ராயல்டி பெற்றுள்ளன. வேறு பல நல்ல புத்தகங்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன.." என்கிறார். அருந்ததி இந்த நாவலை எழுதிமுடிக்க கிட்டதட்ட நான்கு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

வெளிநாடுகளில் வெளியிட உரிமைகள் கொடுக்கப்பட்டுவிட்டாலும் இந்தியாவில் அருந்ததியின் நாவல்களை யார் வெளியிடுவது என்பது இன்னும் இழுபறியில் இருக்கிறது. இங்கிலாந்தில் உரிமையைப் பெற்ற ஹார்பர் காலின்ஸ் நிறுவனமே தனது இந்திய கிளையின் மூலமாக வெளியடுவது என முன்பு ஏற்பாடாகி இருந்தது. ஆனால் திடீரென அருந்ததி தமது கையெழுத்துப் பிரதிகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டது தெரிந்தவுடன் பத்திரிகைகளில் பலவித ஹேஷ்யங்கள் வரத் தொடங்கி விட்டன.

அருந்ததி தரப்பில் வரும் செய்திகள் என்ன தெரியுமா? "நல்ல புத்தக வெளியீட்டாளர்கள் முக்கியம். என் நாவலை நான் தலையில் வைத்துக் கொண்டு 'யார் அதிக பணம் தருகிறார்களோ, அவர்களுக்குகே தருவேன்' என்று கூவி விற்பது எனக்குப் பிடிக்காது" என்கிறார்.

அது சரி, கதை என்ன என்கிறீர்களா? முழுதாகத் தெரியவில்லை. தெரிந்தவரை கேரளாவில் வளரும் இரண்டு குழந்தைகளைப் பற்றியதாம்.

நாவலின் பெயர் God of small things. சிறிய விஷயங்கள்; பெரிய வருமானம்!

– அனுராஜன்

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம்
சார்பில்



பொன்விழா காணும் முதுபெரும் ஓட்டல்அதிபர்

அமுதச்செம்மல்

கோவை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

திரு. N.K. மகாதேவ அய்யர்

அவர்களின் 50 ஆண்டுகால வெற்றிகரமான ஓட்டல் பணிக்காக

பாராட்டுவிழா!

அன்புடன் அழைக்கிறோம்!

விழாத் துவக்கம்
வணக்கத்திற்குரிய கோவை மேயர்
திரு. V. கோபாலகிருஷ்ணன்

முன்னிலை
திரு. B.K. கிருஷ்ணராஜ் வானவராயர்

தலைமை
திரு. A. ராமதாஸ ராவ்
தலைவர், தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம்

தலைமை விருந்தினர்
மாண்புமிகு மத்திய அமைச்சர்
திரு. S.R. பாலசுப்ரமணியம்

சிறப்பு விருந்தினர்
சுப்ரீம் ஸ்டார் திரு. சரத்குமார்

நாள் : 28-12-96
சனிக்கிழமை
நேரம் : மாலை 5.30 மணி

இடம் : நானி கலையரங்கம்
மணி மேனிலைப் பள்ளி, கோவை.

திரு. R. சீனிவாசன்
விழாக்குழு செயலர்

திரு. K. தாமோதரசாமி நாயுடு
விழாக்குழு தலைவர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka